
www.padippakam.com

விலை ரூ.7-

# சிந்தனையாளன்

திருவள்ளுவராண்டு 2033 பெரியாராண்டு 123 மார்ச்சு 2002







படிப்பகம்

www.padippakam.com

உள்ளே...

## தலையங்கம்

* மீட்சி இல்லாப் படுகுழியில்
ஒடுக்கப்பட்ட மக்கள்! - வே.ஆனைமுத்து 1

துணைத் தலையங்கம்:

* ஆண்டிப்பட்டி தேர்தல் - வே.ஆனைமுத்து 4

## கட்டுரைகள்

* இராமாயண ஆராய்ச்சி- ஈ.வெ. இராமசாமி 7
* இரண்டாம் புஷ்யமித்ரன் ஆட்சியில்
இராமாயணம் திரும்புகிறது - வே.ஆனைமுத்து 9
* உழைக்கும் மக்களுக்கு உலை வைக்கும் பா.ச.க.அரசு
- வே.ஆனைமுத்து 14
* என்ரான் திவால் : ஓர் எச்சரிக்கை - க.முகிலன் 18
* அறிவியல் தமிழின் தேவை - சு. நரேந்திரன் 21
* இன்னொரு கிருஷ்ண பரமாத்மா!
- ஓலைப்பட்டி கந்தையா 22

## கவிதை

* முட்டி வீங்கி! - தமிழேந்தி

**சிந்தனையாளன்**
(தமிழ் மாத இதழ்)

| | |
|---|---|
| தனி இதழ் | ரூ.7 |
| ஓர் ஆண்டுக் கட்டணம் | ரூ.80 |
| வாழ்நாள் கட்டணம் | ரூ.1000 |

* வாழ்நாள் கட்டணமாகப் பகுதித் தொகை செலுத்தியவர்கள், மீதித் தொகையை உடனே அனுப்புங்கள்.

பணம், டி.டி. அனுப்பிட
'சிந்தனையாளன்'
SINTHANAIYALAN
19, முருகப்பா தெரு (மாடி), சேப்பாக்கம் சென்னை 5.
தொலைபேசி: 852 28 62.

இன்றே சந்தா செலுத்துங்கள்!
ஒவ்வொருவரும் உறுப்பினராகுங்கள்!

## புதுவையில் தனித்தமிழ் இலக்கிய மாநாடு பாவாணர் நூற்றாண்டு விழா

புதுச்சேரி தனித்தமிழ்க் கழகத்தின் சார்பில் கம்பன் கலையரங்கில் பிப்பிரவரி 16,17 நாள்களில் நான்காம் தனித்தமிழ் இலக்கிய மாநாடும் பாவாணர் நூற்றாண்டு விழாவும் மிகுந்த எழுச்சியுடன் நடைபெற்றன. புதுவை மாநில முதல்வர் ந. அரங்கசாமி அவர்கள் மாநாட்டைத் தொடங்கி வைத்துத் தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபட்டு வரும் பைந்தமிழ்ப் பெரியோர்க்குப் பொன்னாடை போர்த்தி நினைவுப் பரிசுகள் வழங்கினார். இசையரங்கம், பாட்டரங்கம், நூல் வெளியீட்டரங்கம், பூக்காட்டரங்கம், சட்ட அரங்கம், உரையரங்கம் என இரு நாளும் நடந்த நிகழ்ச்சிகளில் வே. ஆனைமுத்து, சொல்லாய்வறிஞர் ப. அருளி உள்ளிட்ட அறிஞர்கள் பங்கேற்றுச் சிறப்பித்தனர். மாநாட்டின் தொடக்கமாக பிள்ளைத்தோட்டம் பெரியார் சிலை அருகிலிருந்து சங்கொலி முழங்க, யானை நடையிட, பறைகள் அதிர, கரகாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம் போன்றவற்றுடன் மழலையர், மாணவர் இளையோர் பெரியோர் பங்கேற்ற மாபெரும் எழுச்சி ஊர்வலத்தைப் புலவர் இறைக்குருவனார் தொடங்கி வைத்தார். — செய்தி: புதுவை. சீனு. அரிமாப்பாண்டியன்

## தமிழ் வழிக் கல்வி குறித்த கலந்தாய்வு கூட்டம்

24.2.2002 ஞாயிற்றுக்கிழமை திருச்சி தூய வளவனார் கல்லூரி சமூகக் கூடத்தில் தமிழ் வழிக் கல்வி குறித்த கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. தமிழ்நாடு, புதுச்சேரி ஆகிய மாநிலங்களிலிருந்து பல்வேறு தமிழ் அமைப்புகளைச் சார்ந்தவர்களும், ஆர்வலர்களும் முழுநாள் நடைபெற்ற இக்கலந்தாய்வில் பங்கேற்று தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர். புலவர் இளங் குமரனார் நிகழ்ச்சியின் நெறியாளராகப் பொறுப்பேற்று நடத்தினார். அரசியல் கட்சிகள், தமிழ் அமைப்புகள், ஆசிரியர் சங்கங்கள், மாணவர் அமைப்புகள் ஆகிய அனைத்துத் தரப்பினரையும் நேரில் சந்தித்து தமிழ் வழிக் கல்வியை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கான ஒன்றுபட்ட ஒரு செயல்முறைக் குழுவை உருவாக்கு வதற்கு கு.ம. சுப்பிரமணியன், இரா. திருமுருகன், புலவர் சுப்பண்ணன், முனைவர் மா. நன்னன், பறம்பை அறிவன் ஆகிய அய்வர் கொண்ட தற்காலிகச் செயற்குழு அமைக்கப்பட்டது.

## கள்ளக்குறிச்சியில் திருவள்ளுவர் விழா

கள்ளக் குறிச்சியில் மறுமலர்ச்சி மக்கள் இயக்கத்தின் சார்பில் 9.2.02 அன்று திருவள்ளுவர் விழா சிறப்பாக நடைபெற்றது. இத்துடன் 'திருவள்ளுவரும் பெரியாரும்', 'திருவள்ளுவரும் அம்பேத்கரும்' என்ற தலைப்புகளில் கருத்தரங்கமும் 'வள்ளுவர் வழியில்' எனும் தலைப்பில் கவியரங்கமும் நடைபெற்றன. விழாவில் புலவர் பனப்பாக்கம். கு.சீத்தா அவர்களின் 'தமிழ் - அன்றும் இன்றும்' நூல் வெளியிடப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com

**சமதர்மக் காவலர்கள்**



மார்க்சு லெனின் சிங்காரவேலர் பெரியார்

**சமூகநீதிக் காவலர்கள்**



புலே பெரியார் அம்பேத்கர் லோகியா

இந்தியாவில் பொதுவுடைமை மலர மார்க்சிய - பெரியாரிய நெறியில் தேசிய இனவழிப்பட்ட சம உரிமை உடைய சமதர்மக் குடிஅரசுகள் ஒருங்கிணைந்த உண்மையான கூட்டாட்சி அமைய ஆவன செய்தல்

### கொள்கை முழக்கம்

உலகத் தொழிலாளர்களே
ஒன்று சேருங்கள்

- மார்க்ஸ்- எங்கெல்ஸ்

ஒடுக்கப்பட்ட தேசிய இன மக்களே
ஒன்று சேருங்கள்!

- லெனின்

ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களே
ஒன்று சேருங்கள்!

- பெரியார்

ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**

**ஆசிரியர் குழு**
வே.ஆனைமுத்து
சங்கமித்ரா
க.முகிலன்
து.தில்லைவனம்
தமிழேந்தி
க.நாகராசன்
வாலாசா வல்லவன்
மங்கலம் அரசன்

மார்ச்சு 2001
விலை ரூ.7/-

இதழ் வடிவமைப்பு:
கோ.அருண்மொழி

# சிந்தனையாளன்

சுவடி : 24 மாத இதழ் ஏடு : 7

## மீட்சி இல்லாப் படுகுழியில் ஒடுக்கப்பட்ட மக்கள்!

அக்கிரகாரங்களைக் கொளுத்தியவன் இரணியன். அதனால்தான், நரசிம்ம வேடம் பூண்டு இரணியனைக் கொன்றான் பார்ப்பான். இது பாகவதத் திருட்டுக் கதை.

சூத்திரன் பார்ப்பானைத்தான் கடவுளாகத் தொழ வேண்டும்; நேராகக் கடவுளை நோக்கித்தவம் செய்யக் கூடாது. அப்படித் தவம் செய்தான் சூத்திர சம்பூகன். அதனால்தான், தவம் செய்த சம்பூகனை இராமனே நேரே போய் வெட்டிக் கொன்றான். இது வால்மீகி இராமாயணம்.



இந்தியா - பாகிஸ்தான் பிரிவினையால், இந்தியா பாகிஸ்தானுக்குத் தர வேண்டிய சொத்துப் பங்கு பல கோடி ரூபாய். இதை உடனே தரும்படி காந்தியார் வற்புறுத்தினார்; அத்துடன் இந்து - முஸ்லீம் ஒற்றுமையை மனதார வலியுறுத்தினார் அவர். அத்தகைய சாதுவை நெருக்கத்தில் நேருக்கு நேர் நின்று நெஞ்சாங்குலையில் சுட்டுக் கொன்றான் ஆர்.எஸ்.எஸ். பார்ப்பன வெறியன், நாதுராம் கோட்சே! அவன் வழிவந்த சாட்சாத் ஆர்.எஸ்.எஸ் - பி.ஜே.பி. கும்பல் பார்ப்பனர்கள், இன்று இந்தியா முழுவதையும் பிராமண மத - இந்து மத நாடாக ஆக்கத் துடிக்கிறார்கள்.



இதற்கான ஒரு மதவெறித் தூண்டல் கருவியாக - அயோத்தியில் இராமர் கோயிலைக் கட்டியே தீர வேண்டும் என்று வெறி பிடித்துத் துடிக்கிறார்கள். *1989 முதல் 180 கல் தச்சர்களை அமர்த்தி,* இராமர் கோவில் கட்டுவதற்கான எல்லாக் கட்டுமான பாகங்களையும் உருவாக்கி விட்டனர்.

www.padippakam.com



2002 மார்ச்சு 12 இல் இராமர் கோயிலைக் கட்டப் போகிறோம் என்று அறிவித்து, இந்து மூடத்தன வெறியைத் தூண்டிவிட்டு அதன்மூலம் 2002 பிப்ரவரி தேர்தலில் பி.ஜே.பி. கட்சியை உ.பி.யில் வெற்றி பெற வைத்திட, விசுவ இந்து பரிசத், பஜ்ரங்தள், கரசேவகர்கள் மூலம் பிரதமர் வாஜ்பேயி முயன்றார். தேசிய மக்கள் நாயகக் கூட்டணி என்ற பேரில் உ.பி.யில் வெற்றி பெற்று மீண்டும் பதவிக்கு வர பா.ஜ.க. கும்பல் துடித்தது. ஆனால் மக்கள் தந்த மகத்தான மூக்குடைப்பில் இத் தேர்தலில் படு தோல்வி அடைந்து அவமான கரமாகப் பதவியை இழந்துவிட்டது.

பா.ஜ.வுக்கு இந்த இழிந்த நிலைமை வந்து விட்டாலும், 403 சட்ட மன்ற உறுப்பினர் உள்ள உ.பி தேர்தலில் 146 இடங்களை மட்டுமே பெற்றிருக்கிற பிற்படுத்தப்பட்ட வகுப்புத் தலைவரான முலாயம்சிங் தனித்தோ, இந்திய தேசிய காங்கிரசுடன் (26 பேர்) இணைந்தோ முதலமைச்சர் ஆக முடியாமல் தவிக்கிறார்.



அதே நேரத்தில், 98 உறுப்பினர்களைப் பெற்றுள்ள பகுஜன் சமாஜ் கட்சியின் ஆதரவைக் கேட்டுப் பெறத் தகுதி அற்றவராகவும் ஏற்கெனவே ஆக்கிக் கொண்டார். பகுஜன் சமாஜ் கட்சியின் துணைத் தலைவர் மாயாவதி, முலாயம் சிங்கின் ஆதரவைக் கேட்டுப் பெற விரும்பாமல், பா.ஜ.க ஆதரவுக் காகக் காத்துக் கிடக்கிறார். இவர் சுடுபால் குடித்த பூனையாகவே இருக்கிறார்.



ஒடுக்கப்பட்ட வகுப்பு களின் தலைவர்களான இவர்கள் இருவரும் முரண் பட்டு, அவரவர் சாதியை நம்பித் தேர்தலில் நின்று, பார்ப்பனர், இரசபுத்திரர், இஸ்லாமியர் ஆகியோர்க்கு நிறைய சட்டமன்ற இடங்களை ஒதுக்கித் தந்துவிட்டு, அதனால் இந்த இரு பிரிவினர்க்கும் போதிய எண்ணிக்கையான 202 கிடைக்க வாய்ப்பே இல்லாமல் செய்து கொண்டனர். இந்தச் சாதி - மதக் கூட்டணியை அமைப்பதில், முலாயம் சிங்கை வென்று விட்டார் மாயாவதி.

இந்தத் தன் ஆணவப் போக்கில் - இருவரும் உ.பி. மேல் சாதி ஆதிக்கத்துக்கு - மனுவாதி களுக்கு இரையாகி கிடக்கும் இரங்கத்தக்க காட்சியே உ.பி. தேர்தலில் பிற்படுத்தப்பட்டவர் - தாழ்த்தப்பட்டவர் நிலை.

உத்தரப்பிரதேசத்தில் நேற்று வரையில் பெயர் சொல்லவே இடமில்லாதிருந்த காங்கிரசுக் கட்சி 26 இடங்களில் வெற்றி பெற்றுப் புத்துயிர் பெறவும் இவர்கள் வழிவகுத்து விட்டனர்.

பஞ்சாபில் - உத்தராஞ்சலில் - மணிப்பூரில் - காங்கிரசின் தலைமையில் ஆட்சி அமையப் போகிறது.

மேதை அம்பேத்கர் 1948 இல் கூறிய அறிவுரையை முலாயம் - மாயாவதி போன்ற ஒடுக்கப்பட்ட வகுப்புத் தலைவர்கள் எல்லோருமே புறந்தள்ளி விட்டனர்.

''இந்தியாவில் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப் பட்டோர், பழங்குடியினர், மதச் சிறுபான்மையினர் ஒன்று சேர்ந்தால் தான் - 85% பேராக உள்ள இந்த ஒடுக்கப்பட்டோர், 15% பேராக உள்ள மேல் சாதியினரிடமிருந்து இந்திய ஆட்சியைக் கைப்பற்ற முடியும்'' என்று மேதை அம்பேத்கர் அன்று அறிவுறுத்தினார். டாக்டர் இராம் மனோகர் லோகியாவும், தந்தை பெரியாரும் இதையே வலியுறுத்தினர்.



இதை நன்கு உணர்ந்து அம்பேத்கர் வழிவந்த கன்ஷிராம் 1976 முதற்கொண்டும், பெரியார் வழிவந்த வே. ஆனைமுத்து, லோகியாவாதி இராம் அவதேஷ் சிங் ஆகியோர் 1978 முதற் கொண்டும் தனித்தனியாகவும், ஒன்றாக இணைந்தும் வட மாநிலங்களிலும் தென் மாநிலங் களிலும் பயணம் செய்து மாபெரும் விழிப்புணர்வை ஒடுக்கப்பட்ட வகுப்பினரிடையே உருவாக்கினர்.

1986க்குப் பின்னர் தேர்தலுக்கும், பதவிக்கும், முற்றிலும் பலியாகி விட்ட கன்ஷிராம், இராம் அவதேஷ் சிங்; லோகியா வாதிகளான ஜார்ஜ் ஃபெர்னாண்டஸ், இராம் விலாஸ் பஸ்வான், லாலு பிரசாத் யாதவ், முலாயம் சிங் யாதவ் முதலான வர்கள் - ஒழிக்கப்பட வேண்டிய பாரதிய ஜனதா, இந்திய தேசிய காங்கிரஸ் இரண்டு கட்சிகளுக்கும் இடங் கொடுத்துவிட்டு, ஒடுக்கப்பட்டோருக்கு எதிரான இந்த இரண்டு கட்சிகளின் வாழ்வுக்கும் வழிவகுப்பது எப்படிச் சரியாகும்? வரலாற்று வாய்ப்புக்களைச் சிதற அடித்துச் சிறுமதியில் - சுயநலத்தில் - எதிரிகளை வளர்க்கும் ஈனச் செயல் அல்லவா இது?

படிப்பகம்

www.padippakam.com





சந்திரபாபு நாயுடு



மு.கருணாநிதி



வைகோ



இராமதாசு

அதேபோல், தென்னாட்டிலுள்ள சந்திரபாபு நாயுடு; திராவிடக் கட்சியினரான கலைஞர் மு.கருணாநிதி, வை.கோ, மற்றும் டாக்டர் இராமதாசு போன்றோர் பாரதிய ஜனதாவின் காலடியில் வீழ்ந்து கையாட்களாகி -அனுமார் அவதாரங்களாகியிருப்பது மான - ஈனமற்ற மதிமோசமே!

1951 முதல் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டை எதிர்த்து ஒழித்தவர் பிரதமர் நேரு. நேருவின் வாரிசுகளான இந்திராகாந்தியும், இராஜுவ்காந்தியும் இவர்களின் அடிமையான நரசிம்மராவும் இட ஒதுக்கீட்டை எதிர்த்தே வந்தனர்.

**1978 முதல் மா.பெ.பொ.க அயராது பாடுபட்டு, எல்லாத் தரப்பினரும் பின்னர் ஈடுபட்ட நிலையில், 1990 இல் வி.பி. சிங் அமல்படுத்திய பிற்படுத்தப் பட்டோருக்கான இட ஒதுக்கீட்டை 14-8-1990 முதல் கடந்த 12 ஆண்டுகளாகத் திண்மையாக எதிர்த்து வருவது பார்ப்பன ஆதிக்க பா.ஜ.க.**



பிரதமர் வாஜ்பேயி, உள்துறை அமைச்சர் எல்.கே. அத்வானி, கல்வி அமைச்சர் இராம் மனோகர் ஜோஷி, நாடாளுமன்றத் துறை அமைச்சர் பிரமோத் மகாஜன், பொதுத் துறை நிறுவன விற்பனை அமைச்சர் அருண்செளரி என்கிற பச்சைப் பார்ப்பனர்கள் ஒடுக்கப்பட்ட வகுப்பினரின் கல்வி, வேலை வாய்ப்பை அடியோடு நாசம் செய்கிறவர்கள். இந்தக் கேடர்கள் மேடையேறி அடிவேரில் நஞ்சு வைக்கும் தன்மையில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு கேடாக இந்தியாவில் ஆட்சி புரிய, மேலே கண்ட ஒடுக்கப்பட்ட வகுப்புத் தலைவர்கள் அனைவரும் படியமைத்துக் கொடுத்து விட்டனர்.

இன்றுள்ள நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் தாங்கள் கொள்ளையடிக்கக் கிடைத்த வரலாற்று வாய்ப்பு போய்விடுமே என்று தவிக்கின்ற 41 கட்சிகளைச் சேர்ந்த 542 நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர்களும் - மனம் அறிந்தே மக்களுக்கு எதிராகச் செயல்படுகிறார்கள். அதில் வெட்கம் - மானம் - ஞானம் பார்க்காத விவரச் சூனியர்களாக - தன்னலச் சூழ்ச்சியினராக இருக்கிறார்கள். காரித் துப்பிக் கண்டிக்க வேண்டிய நிலை இது.

**இன்று உ.பி.யில் பதவியிழந்த பா.ஜ.க. உத்தராஞ்சலில் தன் கட்சி ஆட்சியைப் பறி கொடுத்துவிட்டது; பஞ்சாபில் கூட்டணி ஆட்சியை இழந்துவிட்டது. இந்தக் கேடர்கள் தோற்றுப் போன இங்கெல்லாம், இவர்களைப் போலவே கைதேர்ந்த கேடர்களாக வரலாற்றில் தம்மை நிலை நாட்டியிருக்கும் காங்கிரசுக் கட்சியினர் வெற்றி பெற்று விட்டனர்.**

இந்திய ஆட்சிப் பொறுப்புக்கு இந்த இரண்டு கேடான கட்சிகளும் இனியேனும் வராமல் தடுத்திட வழி என்ன?

அம்பேத்கரிய வாதிகளும், லோகியா வாதிகளும், திராவிடக் கட்சியினரும், மார்க்சியக் கட்சியினரும் - ஒடுக்கப்பட்ட வகுப்பினரின் சமூக, பொருளாதார, அரசியல் விடுதலையை முன் வைத்து ஒன்றுபட்டுக், கொள்கை - வேலைத் திட்ட அடிப்படையில், நாடாளுமன்ற அரசியல் - மக்கள் பங்கேற்கும் போராட்டம் எனத் திட்டமிட்டுப் போராடுவதே ஆகும்.

**உண்மையான மக்கள் நாயக ஆட்சி வர வேண்டும் என்று நினைக்கிற தேர்தல் வழிக் கட்சியினர் ஒவ்வொருவரும் தன்னலம் துறந்து மக்கள் நலன் நாடி இரக்க உணர்வுடனும் தூரப் பார்வையுடனும் செயல்பட்டால் அன்றி இந்திய வெகு மக்களுக்கு சுரண்டல் படுகுழியிலிருந்து மீட்சி இல்லை; இல்லை; என்றும் இல்லை.**

1.3.2002 **வே.ஆனைமுத்து**

படிப்பகம்

துணைத் தலையங்கம்

# ஆண்டிப்பட்டி தேர்தல்

ஆண்டிப்பட்டி இடைத் தேர்தலில் அ.தி.மு.க பொதுச் செயலாளர் செல்வி செயலலிதா வெற்றி பெற்று விட்டார். 2-3-2002 சனி அன்று மாபெரும் விழா நடத்தி மீண்டும் தமிழ்நாட்டின் முதலமைச்சராக உள்ளார்.

எதிர்த்துப் போட்டியிட்ட தி.மு.க வேட்பாளர் வைகை சேகர், ம.தி.மு.க வேட்பாளர் செயச்சந்திரன், புதிய தமிழகம் வேட்பாளர் மருத்துவர் கிருட்டிணசாமி ஆகிய மூன்று பேரும் பெற்றுள்ள மொத்த வாக்குகள் 50,783. செயலலிதா பெற்ற மொத்த வாக்குகள் 78,437.

இவ்வளவு எதிர்ப்புக்கு இடையிலும் ஒரு சாதி அடிப்படையில் மக்களை உசுப்பியும், வளர்ச்சிப் பணிகளை முடுக்கி விட்டும், வாக்குறுதிகளை வாரி விட்டும், பணத்தை அள்ளி இறைத்தும் திரட்டப் பட்ட வாக்குகளால்தான் செயலலிதா வெற்றி பெற்றார் என்று சொல்லுவதில் பொருளே இல்லை.

வேண்டுமென்றே சாதி உணர்வை ஒழிக்காமல் தொடர்ந்து வளர்த்துக் கொண்டும், கல்வி அறிவை அனைவர்க்கும் தராமல் ஏய்த்துக் கொண்டும், தேவைக்கேற்ப அவ்வப்போது சாதி - மத உணர்வுகளைத் தூண்டி விட்டுக் கொண்டும், கை நிறைய காசு கொடுத்தும், கள்ள வாக்குகளைப் பதிவு செய்தும், கலவரங்களை விளைவித்தும், வாக்குப் பெட்டிகளைக் கைப்பற்றிச் சீட்டுகளில் முத்திரை குத்திப் போட்டும் - அவரவர் வசதிக்கும் சக்திக்கும் ஏற்றபடி அடாவடித் தனங்களைச் செய்துதான், இந்தியாவில் 1952 முதல் 2002 வரையிலான தேர்தல்கள் நடைபெற்றன.



அதிகாரிகள், ஏடு நடத்துவோர், காவல்துறையினர், தேர்தல் கண்காணிப்பாளர்கள் என்கிற அனைவர்க்கும் இந்த உண்மை நன்கு தெரியும்; இவர்களும் இதற்குத் துணையானவர்; சான்றானவர்.

ஆனாலும், இவற்றில் எதுவும் குறைவு படாமல் மேலும் மேலும் வளர்ந்து கொண்டே போய், அமைதியாகத் தேர்தல் நடைபெற முடியாத சூழல் உருவாகி வருவது ஏன்? 100க்கு 40, 50 வாக்காளர்கள் வாக்குப் போடாமல் போவது ஏன்?

அனைத்திந்தியக் கட்சிகள், மாநிலக் கட்சிகள், சாதி - மதக் கட்சிகள் என்கிற எவற்றுக்கும் அனைத்து மக்களின் சமூக- பொருளாதார - அரசியல் விடுதலைக்குப் பாடுபடுவது, என்கிற கொள்கையோ, அதற்காகப் போராடுவது என்கிற வேலைத் திட்டமோ இல்லை.

இன்று தேர்தல் களத்தில் நிற்கிற கட்சிகள் அணிகளாகப் பிரிவது என்பது கிஞ்சிற்றும் கொள்கை அடிப்படையிலோ, ஒத்த வேலைத் திட்ட அடிப்படையிலோ நிகழவில்லை. மார்க்சியத் தேர்தல் கட்சிகளும் இதற்கு விதிவிலக்கானவை அல்ல. இக்கட்சிகள் தமிழகத்தில் நேற்று வரை அ.தி.மு.க - த.மா.கா அணியில் நின்றதன் பொருள் இதுதான். இன்றுங் கூட, அனைத்திந்திய அளவில் காங்கிரஸ் தலைமையில் இவர்கள் அணி திரளுகிற முயற்சிகளை மேற்கொண்டு விட்டனர் என்பது கண்கூடானது.

இன்றுள்ள இந்திய ஒற்றை ஆட்சி அரசியல் அமைப்புச் சட்டமும், இதிலுள்ள வருணாசிரம - முதலாளித்துவப் பாதுகாப்பும் அப்படியே நீடிக்க விட்டு விட்டுக், கடந்த 50 ஆண்டுகளாகப் பதவிக்கு வந்த இக்கட்சிகள் எதையும் கரிசனத்தோடு சாதிக்கவில்லை; இனியும் இவர்கள் எதையும் சாதிக்கப் போவதும் இல்லை.

எனவே, இன்றுள்ள முற்போக்குச் சிந்தனையாளர்களும், தேர்தலைப்

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



புறந்தள்ளுகிற துணிவு கொண்ட மார்க்சிய - பெரியாரிய - அம்பேத்கரிய - மொழி வழித் தேசிய இன விடுதலையாளர்களும் ஒன்றுபட்டு, (1) மக்கள் நாயக உரிமைகளையும் மானிட சமத்துவ உரிமைகளையும் வென்றெடுக்கவும்; (2) அனைத்து மக்களின் சமூக - அரசியல் - பொருளாதார விடுதலைக்கு ஏற்ற அரசியல் அமைப்பை உருவாக்கிட, மக்கள் நாயகப் புரட்சிப் பணிகளை (Democratic Revolution) மேற்கொள்ளவும் துணிந்து முன்வர வேண்டும்.

இன்று, தேர்தலில் தில்லு முல்லுகளை மேற்கொள்ளாத கட்சி ஒன்று கூட இல்லை. மேலும் தேர்தலில் ஈடுபட்டுள்ள எந்தக் கட்சியும் மேலே சொன்ன பணிகளை ஏற்க முன் வராது.

ஆண்டிப்பட்டி இடைத் தேர்தலும், நாளை வரப்போகும் இடைத் தேர்தல்களும், அடுத்து வரப் போகும் பொதுத் தேர்தல்களும் நமக்கு உணர்த்துவது இதுதான்.

1—3—2002 வே. ஆனைமுத்து



இடமிருந்து வலம் : கே.பி. மணி, கூட்டுறவுத் தணிக்கைத் துறை பதிவு பெற்ற அலுவலர் சங்கப் பொதுச் செயலாளர் க. கிருட்டிணசாமி, மணமக்கள் எழில் - பூங்கொடி, மணமகளின் தந்தை தா.பெரியசாமி, கூட்டுறவுத் தணிக்கைத் துறை அலுவலர் சங்க மாநிலத் தலைவர் மா. செல்வம்

கோவையில் கூட்டுறவுத் தணிக்கை அலுவலராகப் பணியாற்றும் தமிழன்பர்தாழை. பெரியசாமி — சந்திரமௌலீசுவரி இணையரின் மகள் பூங்கொடிக்கும், பொள்ளாச்சி ஓய்வு பெற்ற ஆசிரியர் பி.எஸ். ஆறுமுகம் — சுசீலா இணையரின் மகன் எழிலுக்கும் கோவையில் திருவள்ளுவராண்டு 2033 மாசி 10ஆம் நாள் (2002 பிப்ரவரி 22) வெள்ளிக்கிழமை காலை திருமறை ஓதித் தமிழ்த் திருமணம் நடைபெற்றது. ஓதுவார் இத்திருமணத்தை நடத்தி வைத்தார். கூட்டுறவுத் தணிக்கைத் துறை பதிவு பெற்ற அலுவலர் சங்கப் பொதுச் செயலாளர் க. கிருட்டிணசாமி கூட்டுறவுத் தணிக்கைத் துறை அலுவலர் சங்க மாநிலத் தலைவர் மா. செல்வம், மக்கள் நெஞ்சம் பொறுப்பாசிரியர் கலசம், அதிகாரிகள் ஆகியோர் பெருமளவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர். மணமக்கள் சிந்தனையாளன் வளர்ச்சிக்கு ரூ.500 நன்கொடை வழங்கினர்.

செய்தி: கலசம்


**'சிந்தனையாளன்'**

உரிமை மற்றும் வெளியீடு பற்றிய விவர அறிக்கை
படிவம் IV (விதி எண் 8 இன்படி)

| | | | |
|---|---|---|---|
| 1. | வெளியிடப்படும் இடம் | : | 19, முருகப்பா தெரு, சேப்பாக்கம், சென்னை-5 |
| 2. | அச்சிடுவோர் பெயர் | : | பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம் |
| 3. | வெளிவரும் காலம் | : | மாதந்தோறும் |
| 4. | வெளியிடுவோர் பெயரும் முகவரியும் | : | வே. ஆனைமுத்து 19, முருகப்பா தெரு (மாடி) சேப்பாக்கம், சென்னை - 5 |
| 5. | ஆசிரியர் பெயரும், முகவரியும் | : | மேற்படி |
| 6. | இதழுக்கு உரிமையாளர்களின் பெயர்(களும்), முகவரி(களும்) | : | மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக்கட்சி 19, முருகப்பா தெரு (மாடி) சேப்பாக்கம், சென்னை - 5 |

இங்கு மேலே தரப்பட்டுள்ள விவரங்கள் எனக்குத் தெரிந்தவரையில் உண்மையானவை என்று இதன் மூலம் உறுதி கூறுகிறேன்.

சென்னை (ஒப்பம்) வே.ஆனைமுத்து
28.2.2002 வெளியிடுவோர்


படிப்பகம்

www.padippakam.com



# இலங்கைப் போர் நிறுத்தமும், அதிபர் சந்திரிகா எதிர்ப்பும்



புலிகள் கையெழுத்திட்ட ஒப்பந்தத்தை பிரதமர் ரணிலிடம் தருகிறார் நார்வே தூதர்





22 பிப்ரவரி 2002 அன்று ஆளும் அய்க்கிய தேசிய முன்னணி அரசுக்கும் விடுதலைப்புலிகள் அமைப்புக்கும் போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானது. அப்போது இலங்கைப் பிரதமர் ரணில் விக்ரமசிங்கே 'இந்தப் போர் நிறுத்த ஒப்பந் தத்தை வைத்து நிரந்தர அமைதியை உருவாக்க முயற்சிப்போம். சர்வ தேச நாடுகளின் ஆதரவு இருப்ப தால் இது சாத்தியம்தான்' என்று கையெழுத்திட்ட பிறகு கூறினார். 20 வருடங்களாக இரத்தக் காடாக காட்சி யளித்த வவுனியாவிற்கு பல்லாண்டு இடைவெளிக்குப் பின் தமிழ்ப் பகுதிக்குச் செல்லும் முதல் இலங்கைப் பிரதமர் ரணில் விக்ரமசிங்கே ஆவார். இவர் வெற்றி பெற முதல் காரணம் விடுதலைப் புலிகள் ஆதரவினால்தான் என்பது குறிப் பிடத்தக்கது. அந்த நன்றியின் முதல் படிதான் போர் நிறுத்த ஒப்பந்தம் ஆகும். துணிச்சலான இந்த நடவடிக்கைக் காக இலங்கைப் பிரதமர் ரணில் விக்ரம சிங்கேயையும் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனையும் பல தரப்பினரும் வரவேற்றுள்ளனர்.

இந்த ஒப்பந்தத்தை இலங் கை அதிபர் சந்திரிகா குமார துங்கா வன்மையாகக் கண்டித்து அறிக்கை வெளி யிட்டுள்ளார். ஒப்பந்தம் கையெழுத்தாவது பற்றி அமைச்சரவையிடம் பிரதமர் தெரிவிக்கவில்லை என்று அதில் அவர் குற்றம் சாட்டியிருக்கிறார். ஆனால் ரணில் அமைச்சரவையில் உள்ள பேரா. ஜி.எல்.பியரிஸ் அதிபர் சொல்வது பொய். பிரதமர் பிப்ரவரி 20 மற்றும் 21 தேதிகளில் ஒப்பந்தம் பற்றிய விதிகளை அமைச்சரவையிடம் எடுத்துச் சொன்னார் எனச் சந்திரிகா கூற்றை மறுத்துள்ளார். அவர் கூற்று அமைதிக்கு எதிரானது என அவரைக் கண்டித்துள்ளார்.

தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைவர் எம். சிவசிதம்பரமும் சந்திரிகாவைக் கண்டித்துள்ளார். சிங்கள உருமயா பொதுச் செயலாளர் கருணா ரத்னே, அதிபர் சந்திரிகா ஆகியோர் ஒப்பந்தத்தை எதிர்த்தாலும் கடைசியில் ஒப்பந்தத்திற்கு அடிபணிய வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகி உள்ளனர்.

இந்தப் போர் நிறுத்தமும் அடுத்து நிகழவுள்ள பேச்சு வார்த்தையும் பயனுள்ள வகையில் அமைவது இலங்கை அரசின் நேர்மையான நடவடிக்கைகளைப் பொறுத்ததேயாகும்.

— கோ. அருண்மொழி

## போர் நிறுத்த ஒப்பந்த விதிகள்

* எல்லாவித தாக்குதல்களும் படுகொலைகளும் நிறுத்தப்பட வேண்டும்.
* அடையாளம் தெரியாத அல்லது ஆயுதங்களுடனான படகுகளை இடைமறிக்க இலங்கை அரசுக்கு உரிமை உண்டு.
* ஆறு மாவட்டங்களிலும் தலா 5 பேர் கொண்ட கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்படும்.
* வடக்கு, கிழக்கு முஸ்லிம்கள் சிங்களர் களின் பாதுகாப்புக்குத் தனி ஏற்பாடுகள் செய்யப் படும்.
* ஒப்பந்தத்தை மீறுவதென்றால் 14 நாளுக்கு முன் தெரிவிக்க வேண்டும்.
* இலங்கை அரசு ஆயுதக் கொள்முதல் செய்யலாம்.
* இயல்பு நிலை திரும்ப, மீன் பிடித்தலுக்கான கெடுபிடிகள் தளர்த்தப்படும்.
* இருதரப்பு ஒப்புதலுடன் ஒப்பந்த விதிகளை திருத்தலாம்.
* அரசு கட்டுப்பாட்டிலுள்ள வடக்கு, கிழக்கு பகுதிகளில் அரசியல் பணிகளுக்காக நடமாட புலிகளுக்கு அனுமதி தரப்படும்.
* அரசும் புலிகளும் படைக்கு ஆள் சேர்க்கலாம்.

படிப்பகம்

www.padippakam.com



# இராமாயண ஆராய்ச்சி

## 'இராட்சதர்கள்' என்பது தமிழர்களையே!

ஈ.வெ. இராமசாமி



இராட்சதர்கள் தபசு செய்தார்கள்; வரம் பெற்றார்கள்; அந்த வரத்தைக் கொண்டு அக்கிரமம் செய்தார்கள் - என்பனவெல்லாம் இந்நாட்டுப் பழங்குடி மக்களையும் அவர்கள் தலைவர்களையும் இராட்சதர்கள் என்று சொல்லிக் கொள்வதற்குக் கடவுள்களும் தேவர்களும் என்ற பெயர் கொண்ட ஆரியர்கள் வழிதேடிக் கொண்ட ஒரு சரக்கே அல்லாமல், அவர்களது வரம் எதுவும் பயன்பட்டதாகத் தெரியவில்லை.

விஷ்ணு, சிவன் ஆகியவர்கள் யார்? எப்போது உண்டானார்கள்? எப்படி உண்டானார்கள்? எங்கிருந்து வந்தார்கள்? ஏன் வந்தார்கள்? என்பதற்கு ஒரு ஆதாரமும் கிடையாது.

அதுபோலவே—தேவர்கள் யார்? எப்படி உண்டானார்கள்? எங்கிருந்து வந்தார்கள்? ஏன் வந்தார்கள்? உலகிற்கு அவர்களால் என்ன பயன்? என்பதற்கும் ஆதாரம் கிடையாது.

இவர்கள் எல்லாம் இமயமலைக்கு இப்புறம் தான்—அதாவது 'இந்தியக் கண்டம்' என்னும் பிரதேசத்தில் இருந்தார்களே ஒழிய மற்ற இந்தியாவுக்கு அப்பாற்பட்ட அய்ந்து கண்டங்களிலும் இருந்ததாகவோ, அந்தக் கண்டங்களைப் பற்றி இவர்கள் ஏதாவது தெரிந்திருந்ததாகவோ சரியான தகவல்களைக் காணோம்.

கீழ் ஏழு லோகம், மேல் ஏழு லோகம் கண்டுபிடித்தவர்கள்—ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஆசியா, அய்ரோப்பாவைப் பற்றிய ஒன்றையும் கண்டுபிடித்ததாகவோ அல்லது அங்குள்ளவர்கள் இந்தியாவையும் சிவ, விஷ்ணு, தேவர், அசுரர்-இராட்சதர், சூரன் ஆகியவர்களை அறிந்ததாகவோ தகவல்களையும் காண முடியவில்லை. அவர்கள் அறிந்த வாழ்க்கையில் உள்ள இடம், மலை, ஆறு, கடல், ஊர், வீடு, வாசல் எல்லாம் இந்தியாவில் இருப்பவைகளைத்தான் சொல்லப் படுகின்றனவே ஒழிய—மற்ற நாட்டு மலை, காடு, வானம், நதி, சமுத்திரம் எதுவும் சொல்லப்பட வில்லை. கடவுள்களும், தேவர்கள் வாழ்க்கைகளில் காணப்படும் 'பூலோகமே' இந்தியாவாகத் தான் கருதப்பட்டிருக்கின்றதே தவிர வேறு ஒன்றும் சேர்க்கப்படவில்லை.

இவற்றையெல்லாம் யோசித்துப் பார்த்து, இந்தியக் கண்டத்தின் பூர்வ நிலை—அதாவது ஆரியர் வருவதற்கு முன் இருந்த நிலையையும் யோசித்துப் பார்த்தால் சிவன், விஷ்ணு அல்லது சேயோன், மாயோன்—மற்றும் திருக்குறள், தொல்காப்பியம் ஆகியவற்றில் வரும் 'உலகம்' முதலியவை, பெரும்பாலும் இந்தியாவுக்குள் ஆரியர் வந்தபிறகு ஏற்பட்டவைகள்தாம் என்பதும் அவை இந்தியாவைப் பொறுத்தவைதாம் என்பதும், சாதாரணமாய் விளங்கும். அவைகளைப் பற்றித்தான் மற்ற வேறு ஆதாரங்களும் விளக்குகின்றன.

சிந்து நதி தீரத்தைப் பற்றியும், அங்கு மொகஞ்சதாரோ, ஹரப்பா முதலிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட பூர்வ சின்னங்களைப் பற்றியும் பேசுவதில்—ஆரியர்களுக்கு முன் தமிழர்கள் அங்கிருந்தார்கள் என்றும், இந்தியக் கண்டம் பூராவும் தமிழர்கள் இருந்தார்கள் என்றும்தான் சொல்லப் படுகிறது.

ஆனால் மொகஞ்சதாரோ, ஹரப்பா நாகரிகம் இன்றைக்கு 6000, 7000 ஆண்டு காலத்துக்கு முந்தியது என்றும் சொல்லப்படுகிறது.

ஆரியர்களுக்கு முன்பே இந்த இடங்கள் நாகரிகமாய் இருந்திருந்தால் ஆரியர் இங்கு எப்படி வந்திருக்க முடியும்? இந்தியக் கண்டம் முழுவதும் சமயம், சமுதாயம், கலை, பழக்க வழக்கம் முதலிய யாவும் ஆரிய மயமாய்—ஆரிய ஆகமம், ஆரிய ஆச்சாரம், தர்மம், ஆரியக் கதை ஆகியவைகளே கொண்ட இலக்கண - இலக்கியம், சரித்திரம், காவியம் ஆகியவை எப்படி ஏற்பட்டிருக்க முடியும்?

கோவில்கள் எல்லாம் தமிழர்களுடையவையா, ஆரியர்களுடையவையா என்று பார்த்தாலும் அவற்றிற்குப் பணம் செலவு செய்தவனும், கட்டடம் கட்டினவனும், அதற்கு மானியம், மடப்பள்ளி விட்டவனும் தமிழனாக இருக்கலாம்; சந்தேகமே இல்லை. ஆனாலும் சொந்தக்காரனும், கோவில் ஆகமக்காரனும், கடவுள் தன்மைக்காரனும் ஆரியனாகத் தானே இருக்கிறான்?

இக் கோவில்களில் உள்ள உருவங்கள்—அதன் தோற்றத்திற்கு ஆன கதைகள்-பூசை உற்சவ முறைகள்—நைவேத்திய சாதனங்கள் ஆகியவை ஆரியர்களுடையதாகத் தானே இருந்து

படிப்பகம்

www.padippakam.com


வருகின்றன? அந்தக் கோவில்கள் கட்டப்பட்ட காலத்திலும் அப்போதுள்ள அரசர்கள் ஆட்சியிலும், ஆரிய ஆதிக்கம் தலைசிறந்து உச்ச ஸ்தானத்தில் இருந்தது என்பதற்கு முதல், இடை, கடைச் சங்கங்களும் அப்போதிருந்த புலவர்களும், அரசர்களும், அரச நீதியும் அவர்கள் கைக்கொண்டிருந்த சமயங்களும் உதாரணமாக இல்லையா?

இந்த நிலையில் அசுரர், இராட்சதர்கள் யாராக இருந்திருக்க முடியும்? அவர்கள் எங்கிருந்து வந்திருக்க முடியும்? அதுவும் இந்தியாவிற்குள் உள்ள அயோத்தி, மதுரை, டெல்லி, மிதிலை, காந்தாரம், விராடம், விதர்ப்பம், தண்டகாரண்யம், கோதாவரி, சித்திரக்கூடம் ஆகிய இடங்களும்—அங்கும் அதற்குப் பக்கத்திலுமே தாடகை, கரன், சூர்ப்பனகை, மாரீசன்—முதலியவர்களும் இருந்தார்கள் என்றால் இவர்கள் யாராக இருந்திருக்க முடியும்? இதைக் கண்டுபிடிக்கப் பெரிய பெரிய புராண, சரித்திர, இலக்கிய, காவியநூல் ஆராய்ச்சி ஏன் வேண்டும்?

இவை பொய்க் கதைகளாக-கற்பனைக் கதைகளாக இருந்தால் கவலை வேண்டாம். மெய்க்கதை - சிறிதாவது நடந்த கதை என்றால் - கோதாவரி நதிக்குப் பக்கத்திய தேசத்தில் தான் இராவணன் தங்கை சூர்ப்பனகை, இராவணன் தம்பி கரன் முதலியவர்கள் இருந்திருக்கிறார்கள். அவர்களைப் பார்த்து, 'உங்களைக் கொல்லவே நான் வந்தேன்' என்று இராமன் சொல்லுகிறான். முனிவர்களும், 'பக்கத்தில் ஜனஸ்தானம் இருக்கிறது; அங்கு இராட்சதர்கள் இருக்கிறார்கள்' என்கிறார்கள்.

இந்தியக் கண்டத்தின் பாகத்தைக் கடல் கொண்ட காலம் பதினாயிரம் வருஷங்களுக்கு முற்பட்டது என்கிறார்கள். ஆரியர்கள் இந்தியாவுக்கு வந்தது 6000 வருடத்திற்கு உட்பட்டது என்கிறார்கள். அதற்கு முன்பே தமிழர்கள் இந்தியா கண்டம் பூராவும் பரவி இருந்ததோடு, தமிழர் ஆட்சியும் அங்கெல்லாம் பரவி இருந்தது என்றும் சொல்லி—அஸ்ஸாம் கண்டு பிடிப்புக்களையும், சிந்து கண்டுபிடிப்புக்களையும் உதாரணம் காட்டுகிறார்கள்.

மீனக் கொடியோனாகிய—தெற்கத்திய 'சம்பாரன்' என்னும் 'அசுர' அரசனுடன், சண்டை போட்ட தாகவும் வால்மீகி இராமாயணத்தில் இருக்கிறது. சம்பாரன் என்னும் ஒரு பாண்டிய மன்னன் இருந்ததாகவும் இலக்கியம் கூறுகிறது.

கதையை வளர்த்துவதற்காக, 'இராமன் சீதையை அங்குப் போய்த் தேடினான்' என்று சொல்லப் பட்டிருக்கிறதே அல்லாமல், சீதை காணாமல் போன சிறிது காலத்துக்குள்ளாகவே, இராவணன்தான் தூக்கிக் கொண்டு போனான் என்பதும், அவன் தெற்கே போனான் என்பதும் தெரியும்.

அன்றியும், இராவணன் சீதையின் பக்கத்திலேயே இருந்து இலட்சுமணன் வெளியில் சென்றவுடன் தூக்கி வந்திருக்கிறான். மாரீசன், தாடகையின் மகன் பக்கத்திலேயே வசித்திருக்கிறான். சூர்ப்பனகை தனது மூக்கு அறுபட்ட உடனே இராவணனிடம் சென்று இரத்தச் சிந்தலோடு முறையிட்டிருக்கிறாள். இராவணன் உடனே மாரீசனோடு அதைப் பற்றிப் பேசுகிறான். விஸ்வாமித்திரன் யாகம் செய்ததும்—தாடகை அதைக் கெடுத்ததும்—இந்தியாவில் இன்னும் வடக்கில் என்றாலும் சமீபமாகத்தான் காணப்படுகிறது. சுக்கிரீவன் அனுமார் முதலியவர்களையும் பர்ணசாலைக்குச் சமீபத் திலேயே சந்திக்கிறான். ஜடாயு இரத்தம் காயாமல் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும்போதே இராம இலட்சுமணர்கள் காண்கின்றார்கள். இராமன், 'நான் புத்தியில்லாமல் இராட்சதர்களை விரோதித்துக் கொண்டேன்' என்று வருந்துகிறான்.

**ஆகையால், வால்மீகி கதைப்படி, இராட்சதர்கள் - இராட்சத அரசர்கள் என்று சொல்லப்பட்டவர்கள் பெரும்பாலும் திராவிட நாட்டிற்குள் அல்லது நமக்குச் சமீபத்திற்குள் தான் இருந்திருக்க வேண்டுமே ஒழிய அவர்கள் வெளிநாட்டார்கள் என்றோ, வேறு இனத்தார்கள் என்றோ சொல்லுவதற்குத் தக்க ஆதாரம் எதுவும் அதில் காணப்படவில்லை.**

வால்மீகி இராமாயணத்தை, வால்மீகி கதை முகமாய் எழுதியதால் வர்ணனைக்கு ஆகவும் சிலவற்றைக் கற்பனையாகச் சேர்க்க வேண்டியதாகச் சேர்த்து—ஒன்றுக்கொன்று முரண்பட்டதாகவும் ஆகிவிட்டது. பண்டிதர்கள் வக்கீல்களைப் போல் உண்மையைப் பற்றிய இலட்சியமில்லாமல் தங்கள் வெற்றியையே குறிவைத்தும் சில அற்புதக் குறிப்புகளை எடுத்துக் கொண்டும், மனச்சாட்சிக்கு விரோதமாய்க் கூச்சல் போட்டு, 'தேவ, அசுரர்'களை உறுதிப்படுத்துகிறார்கள் என்பதல்லாமல் வேறு உண்மை என்ன இருக்கிறது? புராணங்கள், இதிகாசங்கள், தேவசாஸ்திரங்கள், ஸ்மிருதிகள் என்பவைகளுட்பட ஆரியர்கள் தங்கள் உயர்வுக்கும்—திராவிடர்களை இழிவுபடுத்தவும் செய்து கொண்டவைகளே தவிர வேறில்லை. அக்காலத் தமிழர்கள் ஒரு சமயம் பாமர மக்களாக இருந்திருக்கலாம். ஆதலால் சமய, சரித்திர ஆதாரங்களைக் கொண்டு நாம் நம்மைக் கவனிக்காமல் தற்கால அறிவைக் கொண்டு—நிலையைக் கொண்டு பார்ப்பதுதான் பயன் தரக்கூடியதாகும்.

('குடியரசு' சித்திரபுத்திரன் கட்டுரை - 20.9.1947)
பெரியார் ஈ.வெ.இரா. சிந்தனைகள் பக்கம் 1441 - 1444)

படிப்பகம்


www.padippakam.com



# இரண்டாம் புஷ்யமித்ரன் ஆட்சியில் (வாஜ்பேயி ஆட்சியில்) இராமாயணம் திரும்புகிறது!

புத்தர் 2600 ஆண்டுகளுக்கு முன்னர் பார்ப்பனரின் வருண தர்ம அமைப்பை எதிர்த்தார்; வேதம் ஓதி யாகம் செய்கிற காட்டுத்தனமான செயலைக் கண்டனம் செய்தார்.

அசோகன் ஆட்சியில் ஒருபக்கம் 'கொல்லாமை' என்கிற கொள்கை போற்றப் பட்டது; இன்னொருபுறம் புத்தரின் கொள்கையை அயல் நாடுகளில் பரப்பும் பணியும் மேற்கொள்ளப்பட்டது.



ஆனால் அசோகனின் கொள்ளுப்பேரன் பிருகத்ரதன் காலத்தில், அவனிடம் தளபதியாக இருந்த புஷ்யமித்திர சுங்கன் என்கிற பார்ப்பனன், பட்டப் பகலில், படை வீரர் அணி வகுப்பின் போதே அரசனை வாளால் வெட்டிக் கொன்றான். அக்கணமே தன்னையே அரசன் என அவன் அறிவித்துக் கொண்டான்.

இந்தியாவில் ஒரு பார்ப்பனன் அரசனாக வந்தான் என்கிற வரலாறு புஷ்யமித்திர சுங்கனோடு தான் தொடங்குகிறது. இது வடபுலத்தில் தொடர்ந்து நடைபெற்றது.

படை, குடி, உணவு, அமைச்சரவை, நட்பு, காப்பு அரண்கள் முதலானவற்றைக் குறைவின்றிப் பெற்றிருப்பது தான் ஓர் அரசு. அத்தகைய அரசு மட்டுமே மக்களுக்கு உரிமைகளை அளிக்கவும், உரிமைகளை மறுக்கவும் பறிக்கவும் அதிகாரம் பெற்ற ஓர் அமைப்பு அல்லது ஒரு கருவி ஆகும்.

அத்தகைய அதிகாரம் படைத்த அரசைப் பெற்ற புஷ்யமித்திரன் எடுத்த எடுப்பில் என்ன செய்தான்?

1. பாடலிபுத்திரம், வைசாலி முதலான பகுதிகளிலிருந்த புத்தத்துறவிகளின் தலைகளை வெட்டிக் கொண்டு வருவோர்க்கு மதிப்பு மிக்க பரிசுகள் உண்டு என அறிவித்தான். வெட்டிக் கொடுக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கான பவுத்தத் துறவிகளின் தலைகளைக் கொதிக்கும் நெய்க் கொப்பரையில் போட்டுக் கறுக்கியெடுத்து குப்பையில் வீசி எறிந்தான். பவுத்தம் - புத்தர் - பவுத்தத் துறவிகள் பேரில் மக்களுக்கு வெறுப்பு உண்டாக வேண்டி, அவ்வளவு கொடுமையைச் செய்தான் - சுங்க மித்திரன்.

2. புஷ்யமித்திரன் தான், அன்று வரையில் இறைந்து கிடைந்த - செவிவழிக் கதையாக வழங்கிவந்த இராமன் பற்றிய செய்திகளைத் தொகுக்கச் செய்து, இராமாயணத்துக்கு முதன் முதலாக ஒரு வடிவம் கொடுத்தான்.

தென்னாட்டில் பார்ப்பனன் அரசனாக வரும் வாய்ப்பு நேரவில்லை.

ஆனால் கி.பி.7 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு பல்லவர், சோழர், பாண்டியர் ஆட்சிகளிலும்; நாயக்கர், மராட்டியர், நவாபுகள் ஆட்சிகளிலும் பார்ப்பான் முதல்மைச்சனாக - படைத் தலைவனாக - அரசகுருவாக - கோவில் அர்ச்சகனாக - வரி செலுத்தவேண்டாத வளமான நில உடைமைகளைப் பெற்றவனாக, அரசர்களால் ஆக்கப் பட்டான். அரசனே பார்ப்பனர்களை வளர்த்தான்; மதித்தான்; புரந்தான்.

இவையெல்லாம், கி.மு.இரண்டாம் நூற்றாண்டில் தொடங்கி இற்றைக்கு 2200 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்றவை.

படிப்பகம்

www.padippakam.com



இத்துடன் நில்லாமல் தமிழகத்தில் ஆங்காங்கே வேத பாட சாலைகளை நிறுவி, வேத சாஸ்திரங் களைப் பார்ப்பனர்கள் கற்றிட எல்லா வசதிகளையும் அரசனே செய்து தந்தான்.

கி.பி.12 ஆம் நூற்றாண்டுக்குப்பிறகு இராமாயணம் நாடக வடிவிலும், கீர்த்தனைகள் வடிவிலும் தமிழ் மக்களிடம் பரப்பப்பட்டது. இராமன் 'கடவுள்' என்னும் நிலைக்கு உயர்த்தப் பட்டான்.

வருணாசிரமத்தின் பேரால், பார்ப்பனரல்லாத வெகுமக்கள் சமூக இழிவு, கல்வியின்மை, வறுமை இவற்றுக்கு ஆளாக்கப்பட்டனர்.

விந்தியத்துக்குத் தெற்கே இந்த இழி நிலை கண்டு முதலாவதாகக் கொதித்தெழுந்தவர்கள் பத்தொன்ப தாம் நூற்றாண்டில் வாழ்ந்த மகாத்மா சோதிராவ் புலே *(1827-1890)*, வடலூர் இராமலிங்க அடிகள் *(1823-1882)*, அத்திப் பாக்கம் அ.வேங்கடாசல நாயகர் *(1800-1899)* ஆகியோரும்; இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த பண்டிதர் அயோத்திதாசர் *(1845-1914)*, பெரியார் ஈ.வெ.இராமசாமி *(1879-1973)*, மேதை டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் *(1891-1956)*, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் *(1891-1964)* ஆகியோரும் ஆவர்.

இராமன் ஒரு கற்பனைப் பாத்திரம் என்றும், சராசரி மனிதத் தன்மைக்குக் கீழானவனாகவே வால்மீகியால் அவன் சித்திரிக்கப்பட்டிருப்பதாகவும் தெளிவாக இவர்கள் மக்களிடம் விளக்கினர்.

இராமகாதை என்கிற இராமாயணத்தின் 27 வகையான பதிப்புகளை ஆழ்ந்து படித்து ஆய்ந்தவர். பெரியார். அவர் இராமனை வால்மீகி சித்திரித்துள்ளதை விளக்கி நிரல்படக் கூறியவை இம்மலரில் இடம் பெற்றுள்ளன.

இராமனின் பிறப்புப் பற்றிய உண்மைக் கதையை அப்படியே வடித்துள்ளார், ஆராய்ச்சி அறிஞர் சந்திர சேகரப்பாவலர். அவரது கட்டுரை யும் இம்மலரில் இடம் பெற்றுள்ளது. இவற்றைக் கொண்டு இச்செய்திகளை நாம் உணரலாம்.

ஆனால் இவர்களின் கொள்கைகளை வெள்ளையர் அரசோ, வெள்ளையரை அடுத்து ஆட்சிக் கருவியைக் கைப்பற்றிய காங்கிரசு அரசோ, ஜனதா அரசோ, இன்றைய பாரதிய ஜனதா அரசோ அரசின் கொள்கைகளாக ஏற்கவில்லை; ஏற்கச் செய்ய முடியவில்லை.

இது பற்றி எந்த அரசியல் அறிஞரும், சமூக ஆய்வாளரும், புரட்சியாளரும் சரிவரக் கருத்துச் செலுத்தவே இல்லை.

இராமனின் இழிதன்மையான பிறப்பு, இழிகுணங்கள், சூத்திர மக்களுக்குப் பகையான செயல்கள் இவை பற்றி வெகுமக்களின் தலைவர்களில் வேங்கடாசல நாயகர், பண்டித அயோத்தி தாசர், தந்தை பெரியார், மேதை அம்பேத்கர், சந்திரசேகரப் பாவலர் ஆகியோர் ஆய்வு செய்து நிறுவிய கருத்துகளை இன்றுவரை எவரும் தவறு என எண்பிக்கவில்லை.

அதற்கு மாறாக, ஆட்சிக் கருவி கைக்கு வந்தவுடன் பார்ப்பனக் காங்கிரசு ஆட்சி செய்த முதலாவது கேடான பணி, "இந்திய அரசியல் சட்டம் 1950 இல் நடப்புக்கு வந்த பிறகும் - நெடுங்காலமாக இங்கு நடை முறையிலிருந்து வருகிற எல்லா மத வழக்கங்களும் செல்லும்" என்பதுதான்.

இதனை, காஞ்சி சங்கராச்சாரி சந்திர சேகரேந்திர சரசுவதியின் தூதுவராகத் தில்லிக்குச் சென்ற அக்னி ஹோத்ரம் தாத்தாச்சாரியின் அறிவுரையை ஏற்றுக் கொண்டு, அரசியல் சட்ட வரைவுக்குழு உறுப்பினர்கள் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர், என்.ஜி. கோபாலசாமி அய்யங்கார், டி.டி.கிருஷ்ண மாச்சாரி, கே.எம்.முன்ஷி முதலான பார்ப்பனர்கள் 1949இல் நிறைவேற்றி வைத்தனர். இதன்படி அளிக்கப்பட்ட பாதுகாப்பு இந்திய அரசியல் சட்ட விதிகள் *13, 25 (2-அ), 372 (1)* இவற்றில் இன்றும் கெட்டியாக உள்ளது.

இவற்றின் துணை கொண்டு தான், கி.பி. 2002 இலும் வட இந்தியாவில் பிராமணன், சத்திரியன், வைசியவ், சூத்திரன், என்னும் நால் வருண வேறுபாடும்; தென்னாட்டில் பிராமணன், சூத்திரன் என்னும் இரு வருண வேறுபாடும் இன்றும் காக்கப்படுகின்றன.

அதே போன்று, இந்தியா முழுவதிலுமுள்ள சைவ - வைணவக் கோவில்களில் *100* க்கு *99.9* பங்கு இடங்களில் பார்ப்பான் மட்டுமே அர்ச்சகனாக வர முடியும் என்ற பெயரில் பார்ப்பனனின் உயர் பிறப்புத் தன்மை காப்பாற்றப்படுவதற்கும் இவ் விதிகள் துணைநிற்கின்றன.

இந்தக் கேடான சட்டத்தை *1947* முதலே முழு மூச்சோடு எதிர்த்தவர், தந்தை பெரியார்; இச்சட்டப் பகுதியை *26-11-1957* இல் எரித்துப் பல்லாயி ரவரைச் சிறைக்கு அனுப்பியவர், பெரியார்.

www.padippakam.com



ஆயினும் இது நடந்து 43 ஆண்டுகள் முடிந்த பின்னரும், வருணாசிரமத்தைப் பாதுகாக்கும் இவ்வீதிகள் சட்டத்திலிருந்து நீக்கப்படவே இல்லை.

பகுத்தறிவு பேசிய பண்டித நேரு (1946-1964) முதல் இந்திராகாந்தி, மொரார்ஜி தேசாய், இராஜீவ் காந்தி, நரசிம்மராவ் (1991-1996) வரையில் ஆட்சியிலிருந்த பார்ப்பனத் தலைமை அமைச்சர்களோ; இலால் பகதூர் சாஸ்திரி முதல் (1964-1965) சரண்சிங், வி.பி. சிங், சந்திரசேகர், இந்திர குமார் குஜ்ரால், தேவ கௌடா வரையிலான (1998) பார்ப்பனரல்லாத தலைமை அமைச்சர்களோ இதுபற்றி எந்தக் கவலையும் கொள்ளவில்லை.

ஆனால்...

**புஷ்ய மித்திர சுங்கனுக்கு வாரிசு உரிமையாக வந்திருக்கிற, பார்ப்பனிய - இராமராஜ்ய ஆட்சியை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட பார்ப்பனத் தலைமை அமைச்சர் வாஜ்பேயி, இரண்டாம் புஷ்யமித்ர சுங்கனாக மாறி இராமன் பிறந்ததாக நம்பப்படும் குறிப்பிட்ட இடத்தில், அயோத்தியில், இராமன் கோயிலைக் கட்டியே தீரவேண்டும் என்கிற, இராமாயண ஆட்சி - இராமன் ஆட்சி அமைப்புக் கோட்பாட்டுக்கு எல்லாவகைகளிலும் மனமார, நெஞ்சாரத் துணை போகிறார் என்பதை நாம் காணகிறோம்.**

கேரளத்தில் குமரகத்தில் வைத்திய வசதிக் காகத் தங்கியிருந்த நேரத்தில் வாஜ்பேயி இராமன் பற்றி விடுத்த விளக்க அறிக்கையையும்; 2000 டிசம்பர் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் இராமன் பற்றிய சிக்கலை முன்னிலைப்படுத்தி நாடாளுமன்றத்தின் நடப்பையே நாசப்படுத்தி யதையும்; மனிதவள மேம்பாட்டு அமைச்சர் ஜோஷி மூர்க்கத்தன மாகவும் மூடத் தனமாகவும் மேற் கொண்டு விட்ட ஆரியர் - திராவிடர் தொடர்பான வரலாற்றுத் திரிபுக்கு நேரடியாகவே ஆதரவு தந்துள்ளதையும்; ஜோஷி வேதக் கல்வியைப் பள்ளிப்பாடம் முதல் பல்கலைப் படிப்பு வரையில் அறிமுகப்படுத்திவிட்டதைக் கண்டு பூரிப்படைந்துள்ளதையும்; 2002 மார்ச்சு 12 க்குப் பிறகு அரசின் கட்டளையை எதிர்பாராமலே - பாபர் மசூதி இருந்த இடத்தில் இராமன் கோவிலைக் கட்டியே தீருவோம் என விசுவ இந்து பரிசத்காரர்கள் எக்காள மிடுவதையும், அத்துமீறி அவர்கள் அங்கே சென்று இராம பசனை செய்ததையும் வாஜ்பேயி கண்டனம் செய்து அடக்காததையும் கொண்டு, நாம் இதைத் தெளிவாக உணரலாம்.

வாஜ்பேயி ஆட்சியில் இராமாயணம் திரும்புகிறது என்பதே இதன் பொருளாகும்.

இந்த இழிநிலை இன்று இங்கு இருப்பதற்கு என்ன காரணம்?

உண்மையான அதிகாரம் படைத்த ஒரு தன்னாட்சி - தமிழர், தெலுங்கர், கன்னடர், கேரளர், வங்காளிகள், பஞ்சாபிகள் முதலான எவர்க்கும் இல்லாமல் இருப்பதும்; இவர்களில் பெரும்பாலோர் ''நாம் இந்துக்கள்'', ''நாம் இந்தியர்கள்'' என்று நம்பிப் பின்பற்றுவதை விலக்கிக் கொண்டு - மொழி வழி, இன உணர்வுபெற எவரும் வழி அமைக்காததுமே இதற்கு முக்கிய காரணம் ஆகும்.

இதற்கு வழி அமைக்கும் வகையாகத்தான் இந்துமதத்தையும், இந்துமத வருணாசிரம அமைப்பையும், இந்து மத வேத சாஸ்திர இதிகாச புராணங்களையும், பார்ப்பனப் புரோகிதத்தையும் பெரியார் எதிர்த்தார்.

1919 முதற்கொண்டு காங்கிரசில் இருந்த பெரியார், 1922 இல் காங்கிரசு மாநாட்டிலேயே இராமாயணத்தையும் மனுநீதியையும் எரிக்க வேண்டும் என முழங்கினார். அன்று ஆச்சாரியர் அதற்கு அங்கேயே சாட்சியாக இருந்தார்.

1944 முதல் இராமாயணம், மகாபாரதம், பெரியபுராணம் இவற்றிலுள்ள மூட நம்பிக்கைகளை விளக்கி எண்ணற்ற ஆய்வு நூல்களை வெளியிட்டார், பெரியார். 1956 இல் இராமன் படத்தை எரித்தார். 10-4-1965 இல் தமிழ்நாட்டில் ஊர் தோறும் இராமாயணத்தைக் கொளுத்தச் செய்தார். ''இராமாயணம்'' என எழுதிய தாளை 11-8-1966 அன்று தமிழ்நாட்டில் பல இடங்களில் எரிக்கச் செய்தார்.

23-1-1971 இல் சேலத்தில் நடைபெற்ற மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலத்தில் இராமன் படத்தைச் செருப்பாலும், விளக்கு மாற்றாலும் ஆயிரக்கணக்கானோர் அடிக்கச் செய்தார்; மாநாட்டுப் பந்தலை அடுத்த தீக்குழியில் இராமன் படத்தைப் போட்டுப் பொசுக்கச் செய்தார்.

1971 ஏப்பிரல் 3 அன்று இராமன் படத்தைச் சுவற்றில் தொங்கப் போட்டுச் செருப்பால் அடிக்கச் செய்தார்.

40 ஆண்டுகள் சுயமரியாதைக் கொள்கைப் பரப்புரையினை ஏடுகளில் எழுதியும், ஊர் தோறும் பேசியும் ஓரளவு பகுத்தறிவுச்

படிப்பகம்

www.padippakam.com



சிந்தனையை ஊட்டிய பெரியார், தன்னை - தம் இயக்கத்தை - அறிவார்ந்த மக்களை நம்பித் தான் இத்தகைய மூடநம்பிக்கை ஒழிப்புக்கான எண்பிப்புக் கிளர்ச்சிகளை நடத்தினார்.

பெரியார் காங்கிரசிலிருந்து 1925 இல் வெளியேறி, 1926 திசம்பரில் சுய மரியாதை இயக்கம் கண்ட போது, அவருடைய கோட்பாடு களை எதிர்த்தும் கண்டித்தும் திரித்தும், 'இந்து', 'சுதேசமித்திரன்', தமிழ் 'சுயராஜ்யா' முதலான பார்ப்பன தேசிய ஏடுகள் வலிவாகப் பரப்புரை செய்தன.

பார்ப்பனரல்லாதாரின் தேசிய ஏடுகளான 'தமிழ்நாடு', 'நவசக்தி', 'தேசபந்து' முதலான வையும் பார்ப்பனர்களையே பின்பற்றிப் பெரியாரின் சுய மரியாதைக் கொள்கைகளை எதிர்த்தன.

இவ்வளவு எதிர்ப்புகளையும் மீறிச் சுயமரியாதை உணர்வும், பகுத்தறிவு உணர்வும் வளர்ந்திட அன்று 'குடி அரசு', 'குமரன்', 'சுயமரியாதைத் தொண்டன்', 'நகர தூதன்', 'புதுவை முரசு', 'திராவிடன் - தமிழ் நாளேடு, 'ஜஸ்டிஸ்' -ஆங்கில நாளேடு முதலான பார்ப்பனர் அல்லாதாரின் ஏடுகள் இருந்தன.

*1926-1928* இல் பனகல் அரசர், ஏ.இராமசாமி முதலியார், பி.டி.இராசன் மற்றும் இனப்பற்று மிக்க பல தலைவர்களின் மாபெருந்துணையும் அவருக்கு இருந்தது.

*1933*க்குப்பின்னர், 'குடி அரசு', 'விடுதலை', 'புரட்சி', 'பகுத்தறிவு', 'திராவிட நாடு', 'முரசொலி', 'தனி அரசு', மற்றும் பல கிழமை ஏடுகள் இருந்தன.

இன்று இவற்றுள் *100* க்கு *97* பங்கு ஏடுகள் மறைந்து விட்டன.

'விடுதலை' நாளேடு, 'உண்மை' மாதம் இருமுறை, "The Modern Rationalist" ஆங்கிலமாத ஏடு முதலானவை பெரியாரின் கொள்கை ஏடுகளாக வெளிவருகின்றன. தி.க.வினரின் இவ் ஏடுகள் அ.இ.அ.தி.மு.க ஆட்சியைப் போற்று வனவாக உள்ளன.

'முரசொலி' -நாளேடு, 'தினகரன்' - நாளேடு, 'சங்கொலி' கிழமை ஏடு இவை முறையே தி.மு.க, ம.தி.மு.க ஏடுகளாக வெளியாகின்றன. இவை இன்றைய பாரதிய சனதாக் கட்சியின் ஆட்சியைத் தூக்கிப் பிடிக்கின்றன. அ.இ. அ.தி.மு.க. 'நமது எம்.ஜி.ஆர்.' நாளேட்டை வெளியிடுகிறது.

ஆனால் வருணாசிரம அமைப்பைக் காப்பது; இந்துமத வேத சாஸ்திர இதிகாச புராணங்களைக் காப்பது; ஒடுக்கப்பட்டோருக்கான இட ஒதுக் கீட்டை ஒழிப்பது; இந்தியாவை உடைபடாமல் காத்து, இந்திய மேல் சாதிப் பார்ப்பன - பனியா - மார்வாரி தரகு முதலாளிகளும், நில உடைமை யாளர்களும் மற்றும் பன்னாட்டுக் கொள்ளையரும் மேலும் மேலும் அரசியல், பொருளியல், சமூக இயல் ஆதிக்கத்தைப் பெருக்கிக் கொள்ளத் துணைபோவது; வளருந்தலைமுறையினரிடம் பண்பாட்டுச் சீரழிவை வளர்ப்பது என்கிற - மக்களுக்கு எதிரான பணிகளைச் செய்திட, இன்று பார்ப்பனர்களின் வலிமைமிக்க கருத்துப் பரப்பு ஊடகங்களாக, The Hindu, The New Indian Express, தினமணி, தினமலர்; ஆனந்த விகடன், சூனியர் விகடன், அவள் விடகன், சுட்டிவிகடன்; கல்கி, கோகுலம், Gokulam, துக்ளக், மஞ்சரி முதலான செல்வாக்கு மிக்கப் பார்ப்பன ஏடுகள் உள்ளன.

'இந்து' நாளேடு பத்து இடங்களிலிருந்து வெளிவருகிறது. தி இந்தியன் எக்ஸ்பிரஸ் *13* இடங்களிலிருந்து வெளிவருகிறது.

தமிழ் இனத்தைச் சார்ந்தவர்கள் நடத்தும் 'தினத்தந்தி', கதிரவன், மாலை முரசு, மாலை மலர் முதலான நாளேடுகளும்; குமுதம், குங்குமம், வண்ணத் திரை முதலான பருவ ஏடுகளும் தாய் மொழி நலன் பற்றி எந்தக் கவலையுமின்றி, வெறும் வணிகப் போக்கு ஏடுகளாக நடந்து தமிழரைக் கொள்ளை கொள்ளுகின்றன.

இவ்வளவையும் மீறித் தான் - இங்கு தமிழ்மொழி நலன், தமிழர் இன நலன் இவற்றைக் காப்பதற்கான பல சிறிய அமைப்புகள், செயல்படு கின்றன. இவர்களால் 'சிந்தனை யாளன்', "Periyar Era', தமிழர் கண்ணோட்டம், தமிழியக்கம், தமிழ்த்தேசம், தென்மொழி, வெல்லும் தூயதமிழ், பெரியார் இயக்கம், பயணம், தெளிதமிழ், நற்றமிழ், தமிழ்ப்பாவை, முகம், யாதும் ஊரே, நந்தன் வழி, மக்கள் தமிழகம், செங்கோல், புரட்சிப் பெரியார் முழக்கம், தென்செய்தி, மக்கள் நெஞ்சம் முதலான பருவ ஏடுகளும் மற்றும் சிலரால் சிற்றேடுகளும் வெளியிடப் படுகின்றன.

இவ்வகையில் தமிழ் - தமிழர் நலனுக்கான முயற்சிக்கு உள்ள வலிமை மிகமிக இரங்கத் தக்கது.

இந்த இரங்கத்தக்க நிலைமை இப்படியே நீடித்திட்டால், தமிழர்க்கான எந்த உரிமை உணர்வையும் எப்போதும் நாம் பரவலாக விதைக்க இயலாது.

நெடிய வாழ்நாளும், நெடுங்காலப் பொது வாழ்வும் பெரியாரை ஈடு இணையற்ற ஆளுமை கொண்ட தமிழர் தலைவராக நம் முன் நிறுத்தின. அதே ஆளுமை உள்ளோர் மீண்டும் வர இயலாது.

தமிழ் - தமிழர் நலன்காக்க ஏற்றவை என்னென்ன கொள்கைகள் என ஓர் அமைப்பு வரித்துக் கொள்ளுகிறதோ அக் கொள்கைகளை நிறுவுவதை நோக்கமாகக் கொண்ட ஒரு தன்னாட்சி அரசு அல்லது தனி அரசு தமிழர்க்கு இருந்தாலன்றி, என்றும் அவை நிறைவேற மாட்டா. இதில் பெரியார் கறாராகவும் தெளிவாகவும் இருந்தார்.

www.padippakam.com



பெரியார் கூறுகிறார்;

'தேசியம் என்பது வேறு; அரசியல் என்பது வேறு என்பதை முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும்.

தேசியம் என்பது தேசமக்களின் சுயமரியாதை முன்னேற்றத்தைப் பொறுத்தது. அதைப் பலர் தப்பாக அர்த்தம் செய்து காட்டி, பாமர மக்களை ஏமாற்றி, உயிர் வாழ்கிறார்கள்.

அரசியல் என்பது யார் நம்மை ஆளுவது என்கின்ற விஷயமல்ல. நமது மக்களுக்கு எம்மாதிரி அரசியல் முறை இருக்க வேண்டும் என்பது தான் நமது அரசியல் விஷயமாகும்.''

('குடி அரசு', 26-6-1928) தலையங்கம்)

1928 இல் தமிழர்க்கான அரசியல் என்பது பற்றி இந்த வரையறையை அளித்த பெரியார், 'அரசு' குறித்துச் சரியான புரிதலும் தெளிவும் உள்ளவராக 1973 திசம்பரில் மறைவுற்ற வரையிலும் திகழ்ந்தார்.

9-12-1973 இல் இறுதியாக அமைந்துவிட்ட சென்னை மாநாட்டில் அவர் முழங்கிய கருத்து 1928 இலேயே அவர் வெளிப்படுத்தியது தான்.

அவருடைய இவ்வளவு ஊட்டமான சிந்தனை களை எல்லோரும் அறிய நாம் வழிகண்டோமா? இல்லை.

பெரியாரின் எழுத்து, பேச்சு இரண்டையும் நூற்றுக்கு நூறுமாகத் தொகுத்துத் தமிழுலகத் துக்கு இதுகாறும் அளித்திருக்க வேண்டியது பெரியார் தொண்டர்களின் உயிர் மூச்சான பணியாகும்.

இதை நிறை வேற்றிட நம்மில் எவருமே முன் வராதது பெரும் மானக் குறைவானது.

பெரியாருடைய பேச்சு, எழுத்து இவற்றை ஏறக்குறைய முழுவதுமாகத் தொகுத்து, என்னால் 1974 இல் பதிப்பிக்கப்பட்ட, ''பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்'' 3 நூற்றொகுதிகள் பற்றிப் பெரியாரின் தொண்டர்கள் பலருக்கு எதுவுமே தெரியாது. அவ்வளவு பெரியாரியக் கொள்கைப் பற்றோடு(!) பெரியார் தொண்டர்களே அதை மறைத்தார்கள்.

கடவுள், மதம், பெண்ணுரிமை என்கிற மூன்று பொருள்கள் பற்றியவற்றைத் தொகுத்து 6 தொகுதிகளாக கி.வீரமணி பதிப்பித்த 'பெரியார் களஞ்சியம்' குறித்து தி.க தொண்டர்களுக்குத் தெரிந்த அளவுக்கு, மற்றவர்களுக்குத் தெரியாது.

மானிடத்தின் விடுதலைக்கான தீர்வுகளைச் சொல்லிப் போன காரல் மார்க்சின், லெனினின் கொள்கைகளைப் பற்றி அறிந்திட பெரியார் தொண்டர்களில் பலருக்கு எந்த அக்கறையும் ஆர்வமும் இல்லை.

'மார்க்சியம் பற்றி அறிந்த பலரும் பெரியாரியம் - அம்பேத்கரியம் பற்றிப் போதிய அளவுக்கோ அல்லது பெரிய அளவுக்கோ அறிந்து கொள்ள விரும்பாதது இங்குள்ள சாதிய வழிப்பட்ட சிந்தனை விளைத்த பெரியதொரு கேடாகும்.

இத்துணைப் பெரிய இயலாமைகளுக்குள் - இருட்டுக் காட்டுக்குள் அமிழ்ந்திருக்கும் தமிழரை - வருங்காலத் தமிழ்த் தலைமுறையினரை விழிப்புறச் செய்யவும், அவர்கள் எல்லாத் துறைகளிலும் விடுதலை பெற்று மானமும் அறிவும் வளமும் பெற்ற வாழ்வினராகத் திகழ்ந்திடவும் வழி காண்போம், வாரீர்!

6-1-2002 வே.ஆனைமுத்து

('சிந்தனையாளன் 2002 பொங்கல் சிறப்பு மலர்' - தலையங்கம்)

**மதுரையில் சாதி ஒழிப்பு குறித்த உரையரங்கு வே. ஆனைமுத்து பங்கேற்பு**




புதியதடம் — தொரட்டி இதழ்த் தோழர்கள் 29.01.02 அன்று மதுரை பெரியார் பேருந்து நிலையம் அருகில் உள்ள திலகா விடுதியில் 'சாதி ஒழிப்பை எதிர்கொள்வதில் உள்ள இன்றைய நடைமுறைப் பிரச்சனைகள்' என்கிற தலைப்பில் உரையரங்கம் ஒன்றிற்கு 29.1.02 மாலை 4.3C மணிக்கு ஏற்பாடு செய்திருந்தனர். வே. ஆனைமுத்து அரங்கில் சிறப்பு அழைப்பாளராய்ப் பங்கேற்றார். பயனுள்ள விவாதமும் நடைபெற்றது.

www.padippakam.com



# உழைக்கும் மக்களுக்கு உலை வைக்கும் பா.ச.க. அரசு!

உலகத்து உழைக்கும் மக்களுக்கு எல்லா அடிமைத்தனங்களிலிருந்தும் விடுதலை வர வழிகாட்டிய பொதுவுடைமை அறிக்கையை - மார்க்சும், எங்கல்சும் 154 ஆண்டுகளுக்கு முன் வெளியிட்டனர்.

அன்று தொடங்கி, ''பூதம் - வருகிறது! பொதுவுடைமை பூதம் வருகிறது! மக்களையே அது அடித்துத் தின்னப்போகிறது!'' என்று, உலக மதவாதிகளும் பழமை வாதிகளும் குய்யோ, முறையோவென்று கூக்குரலிட்டனர்.

அப்படிக் கூக்குரலிட்ட எல்லோரும் ஒரே மதத்தைச் சார்ந்தவரோ ஒரே நாட்டைச் சார்ந்தவரோ, ஒரே மொழியைப் பேசியவரோ அல்லர். ஆனால் பொதுவுடைமையை எதிர்த்துச் சிதைப்பதில் உறுதியாக இருந்து, இதில் ஓரளவுக்கு 1980 - 1990 இல் அவர்கள் வெற்றி கண்டு விட்டனர். இது சும்மா வந்ததா? இல்லை.

1905க்குப் பிறகும், 1918க்குப் பிறகும், 1945க்குப் பிறகும் உலக அளவில் நன்றாகத் திட்டமிட்டு முதலாளித்துவத்தையும், ஏகபோக ஆதிக்கக் குவிப்பையும் வளர்த்தெடுப்பதில் அவர்கள் கண்ணுங்கருத்துமாகச் செயல்பட்டனர்.

இன்று உலகத் தென்மண்டல நாடுகளை இயற்கை வளங்களை இழக்கச் செய்வதிலும் ஏகபோகச் சுரண்டலுக்குப் பலியாக்குவதிலும், இங்கெல்லாம் போர்களை மூட்டிவிட்டு மக்களைப் பலியாக்குவதிலும் வேகமாக அவர்கள் முன்னேறி வருகின்றனர்.

அன்னியர் குடியேற்ற நாட்டு ஆதிக்கத்திலிருந்து 1940க்குப் பின்னர் விடுபட்ட தென் ஆசிய - தென் கிழக்கு ஆசிய - மற்றும் இந்தியாவைச் சுற்றியுள்ள நாடுகள் உலக வங்கி, உலக வணிக நிறுவனம், பன்னாட்டு நிதி நிறுவனம் ஆகிய இவற்றின் கட்டுப் பாடுகளை ஏற்கச் செய்யப்பட்டு, பொருளுதாரத் தன்னுரிமையை இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டன.

தனியாரிடம் ஒரு சேரத் தொழில் ஆதிக்கம் குவிவதைத் தடுக்கும் நோக்கத்தோடு, 1950 - 60களில் இந்தியாவில் பொதுத் துறையில் பெரிய - நடுத்தரத் தொழில் மற்றும் வணிக நிறுவனங்கள் பல உருவாக்கப்பட்டன.

இந்திய அரசு 247 நிறுவனங்களை அப்படி உருவாக்கியது. இந்திய மக்களின் சொத்து 60 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் அவற்றில் முதலீடு செய்யப்பட்டது.

இந்திய அரசின் கீழ் உள்ள எல்லாத் துறைகளிலும் சேர்ந்து 41 இலக்கம் பணியாளர்கள் - தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர் என்றால், இவர்களில் நான்கில் ஒரு பங்குப் பேர் இந்த 247 பொதுத்துறை நிறுவனங்களில் உள்ளவர் ஆவர்.

இவற்றில் பெரும்பாலானவற்றில் நீண்டகால பார்ப்பனரும் மேல் சாதியினருமே மேலாண்மை அதிகாரத்திலும், நிருவாகத்திலும் பணிபுரிந்தனர்.

இவர்களின் ஊதாரித்தனம் காரணமாக ஒரு நூறுக்கு மேற்பட்ட பொதுத்துறை நிறுவனங்கள் பெரிய அளவு இழப்புக்கு ஆளாக்கப்பட்டன.

1970க்குப் பிறகு தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சிலரும், 1995க்குப் பிறகு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் சிலரும் இவற்றில் சில பணியிடங்கள் பெற்றனர். இவர்கள் பெற்ற பணியிடங்கள் கீழ் நிலையில் உள்ளவை.

1992 இலேயே புதிய பொருளாதாரக் கொள்கை, உலக மயமாக்கல் கொள்கை, உலக வணிகக் கொள்கையை இந்திய அரசு ஏற்றுக் கொண்டது. ஒவ்வொரு துறையிலும் அந்நிய நாட்டு மூலதனத்தையும், அந்நிய நாட்டு முதலாளிகளையும் நுழைய விட்டது.

அந்நிய நாட்டு முதலாளிகளுக்கும் இந்தியப் பெரு முதலாளிகளுக்கும் - இழப்பையும் நலிவையும் தடுப்பது என்கிற பேரால், அரசுப் பொதுத்துறை நிறுவனங்களை ஈன விலைக்கு ஏலம் போட்டு விற்கத் தொடங்கி விட்டது, அரசு.

இன்றைய பாரதிய சனதா அரசு - 'பொதுத் துறை நிறுவனங்கள் விற்பனை அமைச்சகம்' என்ற ஒரு தனித் துறையையே ஏற்படுத்தி, வாய் போக்கியாக உள்ள ஓர் அருண் சௌரியை அதற்கு அமைச்சராக ஆக்கி, நன்றாகவும் - இலாபத்துடனும் - வெற்றியாகவும் இயங்கி வரும் பொதுத்துறை நிறுவனங்களின் பங்கைக் கூட ஈன விலைக்கு விற்று வருகிறது.

2002 பிப்பிரவரி 5 இல் விதேஷ் சஞ்சார் நிகாம் (விமி) என்ற தொலைத் தொடர்பு நிறுவனத்தின் 25 விழுக்காடு பங்குகளை இந்தியப் பெரு

www.padippakam.com



முதலாளியான டாட்டாவுக்கு அரசு விற்று விட்டது. இனி இதன் முழு நிருவாகத்தையும் படிப்படியாக டாட்டா நிறுவனம் கைப்பற்றி விடும்; இத்துறை மூலம் பெரும் பொருளைக் குவித்து ஏக போகத்தை வளர்த்துக் கொள்ளும்.

அதேபோல், IBP என்னும் பொதுத்துறை பெட்ரோலிய நிறுவனத்தின் 33.58 விழுக்காடு பங்குகளை, இன்னொரு இந்திய அரசுப் பொதுத்துறை நிறுவனமான இந்தியன் எண்ணெய்க் குழுமத்துக்கு (Indian Oil Corporation - IOC) ஏலத்தில் விற்றுள்ளது.

இனி, இப்படி, இந்திய அரசுப் பொதுத்துறை நிறுவனங்களே தொடர்ந்து பங்குகளை வாங்கிட அனுமதித்தால் பொதுத்துறை நிறுவனங்களை அடியோடு ஒழிக்க முடியாது என்பதால், இனி அடுத்து வருகிற மூன்று மாதங்களில் விற்கப்படப் போகிற HPCL, B.P.C.L. என்கிற பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களை ஏலத்துக்கு விடும் போது, அந்த ஏலத்தில் இந்தியன் எண்ணெய்க் குழுமம் - I.O.C. பங்கேற்கக் கூடாது என்கிற ஒரு தடையை அமைச்சர் அருண்செளரி தானடித்த மூப்பாக அறிவித்து விட்டார். 5.2.02 இல் ஏலத்தில் பங்கேற்ற I.O.C. உலகப் பெருமுதலாளிகள், இந்தியப் பெருமுதலாளிகள் இவர்களோடு வெளிப்படையாகப் போட்டி போட்டு, நல்ல விலை கொடுத்துத் தான் B.P.L. குழுமத்தின் பங்குகளை விலைக்கு வாங்கியது. அப்படி இனியும் நடந்தால் தனியார் மயப்படுத்தலை விரைந்து நிறைவேற்ற முடியாது என்று கருதியே இந்தக் கேடு கெட்டதும் - வணிக முறைக்கு நேரெதிரானதுமான கட்டளையை அமைச்சர் அருண்செளரி அறிவித்துள்ளார். மேலும் H.P.C.L., B.P.C.L. போன்ற நிறுவனங்களை ரிலையன்ஸ் தனியார் கம்பெனிக்கு ஈன விலைக்கு ஏலத்தில் தாரை வார்க்க அருண் செளரி முன்கூட்டியே திட்டமிட்டிருப்பதும் தெரிகிறது.

பொதுத்துறையை அடியோடு அழித்துவிட முனைந்து இப்படிச் செயல்படுகிற பா.ச.க. அரசு, உழைக்கும் மக்களுக்கு உலை வைக்கும் அரசு என்பதற்கு வேறு என்ன எடுத்துக்காட்டு வேண்டும்?

பா.ச.க. அரசு, இத்துடன் நிற்கவில்லை. வாஜ்பேயி தலைமையிலான அமைச்சரவை, 5.2.2002 இல் கூடி, இந்தியாவிலுள்ள 41 இலட்சம் அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனப் பணியாளர்களில் 8 இலட்சம் முதல் 11 இலட்சம் பேர்களை விரைவில் விருப்ப ஓய்வுத் திட்டத்தின் கீழ் (V.R.S.) வீட்டுக்கு அனுப்பிட முடிவெடுத்து விட்டது. அப்படி விலக முன்வராவிட்டால், அவர்களை வேலையிலிருந்து நீக்கி விடவும் முடிவு செய்து விட்டது.

தலைமை அமைச்சர் வாஜ்பேயி, மய்ய - மாநில அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் சிறப்பாகப் பணியாற்றியவர்களுக்கு புதுதில்லியில், விஞ்ஞான பவனில், 4.2.02இல் பரிசளிப்புச் செய்தபோது, 'உலகமயமாக்கலைக் கண்மூடித்தனமாகச் செய்ய மாட்டோம்; தொழிலாளர்களுக்குப் பாதிப்பு நேராமல் பார்த்துக் கொள்வோம்' என்று வாய்கிழிய அழகாகப் பேசினார். அந்தப் பேச்சு காற்றோடு கலப்பதற்கு முன்னரே - அடுத்த நாளே, அமைச்சரவையைக் கூட்டி, இப்படி 11 இலட்சம் பணியாளர்களுக்கு - தொழிலாளர்களுக்கு உலை வைத்து விட்டார், வாஜ்பேயி. நாம் அடிக்கடி குறிப்பிடுவது போல் - வாஜ்பேயி ஒரு நல்ல பொய்யர்; கெட்டிக்கார நடிகர்; கைதேர்ந்த பார்ப்பன ஆதிக்க மனப்பான்மை கொண்டவர். இது உண்மை என்பதற்கு இது போதாதா?

மேலும், அத்தியாவசியப் பண்டங்கள் கட்டுப்பாடான விலைக்கு மக்களுக்கு விற்கப்பட வழியில்லாமல் அடைத்து, விலைக் கட்டுப்பாடுகளையும் வாஜ்பேயி அரசு நீக்கி விட்டது.

பார்ப்பனர்களையே தலைமை அமைச்சர், உள்துறை அமைச்சர், மனிதவள மேம்பாட்டு அமைச்சர், தொலைத் தொடர்புத் துறை அமைச்சர், பொதுத்துறைகள் விற்பனை அமைச்சர் எனக் கொண்டு விட்ட இன்றைய பாரதிய சனதா அரசு - இந்தியப் பொதுத்துறை நிறுவனங்களை விற்று விடுவதன் வழியாகவும், விருப்ப ஓய்வுத் திட்டத்தைப் புகுத்தி 11 இலட்சம் ஊழியர்களை வீட்டுக்கு அனுப்பத் திட்டமிட்டு விட்டதன் மூலமும் - இனிமேல் அரசு, மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் தாழ்த்தப் பட்டோர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் புதிதாக வேலை பெறுவதற்கு இருந்த கொஞ்ச நஞ்ச வாய்ப்பையும் திட்டமிட்டுப் பறித்து விட்டது.

வரப் போகும் 2002-2003 ஆண்டு இந்திய அரசு வரவு செலவுத் திட்டத்தில் இரயில் பயணக் கட்டணத்தையும், மற்றும் பல பொருள்களின் விலையையும், வரியையும் உயரத்தப் போவதாக இப்போதே மய்ய அரசு அறிவித்து விட்டது.

உழைக்கும் வகுப்பு மக்களும் தலைவர்களும் இனியேனும் இந்தக் கேடு கெட்ட அரசின் இப்படிப்பட்ட போக்குகளை உணரவும், இதை அகற்றிடப் போராடவும் முனைய வேண்டும்.

- வே.ஆனைமுத்து

படிப்பகம்

www.padippakam.com



# காவிரிப் பாசனப் பகுதியில் வெள்ளப் பாழ்! கண்ணீர் வடிக்கிறார்கள் வேளாண்மைக்காரர்கள்!

'சோழவள நாடு சோறுடைத்து' என்பது, ஆயிரம் ஆண்டுக் காலத்துப் பழமொழி. 'காவிரி நடமாடும் பூங்கா தஞ்சைத் தரணி' என்பது, 1800 ஆண்டுகளாக வழங்கப்படுவது.

ஆனாலும், சோழவள நாடு தொழில் வளம் பெற்றுச் செழிக்கவில்லை; பணப் பயிரை வளர்த்துப் பழக்கப்படவில்லை. குறுவை நெல்; சம்பா நெல், தாளடி நெல், உளுந்து, பயறு ஆகிய நன்செய்ப் பயிர்களே இவர்களுக்கு எல்லாம்.

கடந்த 60 ஆண்டுகளில்தான் கரும்பு, நிலக் கடலை, எள் எனப் பரவலாகப் பணப் பயிரும் செய்கின்றனர்.

ஆயினும் 1975க்குப் பிறகு காவிரி பொய்த்து விட்டது; இன்று காவிரி வறண்டே போய் விட்டது.

சிறு நில உடைமைக்காரர்கள், நிலமற்ற வேளாண் கூலிகள் இங்கு மிக மிக அதிகம். எனவே தமிழ் நாட்டின் மிக ஏழை மாவட்டங்கள் முற்றிலும் காவிரியை நம்பியிருக்கிற தஞ்சை, திருவாரூர், நாகை, கடலூர் மாவட்டங்களே.

இந்த நான்கு மாவட்டங்களிலும் 30.1.2002 முதல் 6.2.2002க்குள் இடைவிடாது அடை மழைபெய்தது. 10 செ.மீ., 20 செ.மீ., 30 செ.மீ., 40 செ.மீ. எனப் பல பகுதிகளில் மழை பெய்தது. இராசமன்னார் குடியில் 46 செ.மீ. அளவு மழை பதிவாயிற்று. இது அச்சம் தருவது. குட்டைகள் தூர்ந்து விட்ட நிலையில், ஆங்காங்கே இருந்த சில ஏரிகளும் உடைப்பெடுத்தன. கடலூர் வரையில், எங்குப் பார்த்தாலும் 7.2.2002 இல் கூடக் கடல் போல் வயல்களிலும் புன்செய் நிலங்களிலும் வெள்ளம் பரவிக் கிடந்தது. விளைந்த நெல்மணிகள் உதிர்ந்து முளைத்து விட்டன.

அங்கு சாலையில் நடப்போர்க்கும், உந்து களில் பயணம் போவோர்க்கும் நெல் முளை விட்டு நறுமணம் வீசுவது 5.2.2002 முதலே உணரப்பட்டது.

17.1.2002 முதலே இப்பகுதிகளில் சம்பா அறுவடை தொடங்கி விட்டது. ஆனாலும் விற்பனைக்கு வேளாண்மைக்காரர்கள் கொண்டு வரும் நெல் முழுவதையும் வாங்கிக் கொள்ள அரசுக் கொள்முதல் நிலையங்கள் முன்வர வில்லை. இவர்கள் கொஞ்சம் நேர்மையாக நடந்திருந்தால், விளைந்த நெல்லில் பெரும் பகுதி 30.1.02க்கு முன் கூட்டியே அறுவடை செய்யப் பட்டு, கொள் முதல் நிலையங்களுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கும். நெல்லை அறுவடை செய்தவுடனே விற்றுவிட வேண்டும் - ஏனெனில் சேமித்து வைக்க வசதி இல்லை என்பதே சிறு வேளாண்மைக்காரார்களின் அவல நிலை.

அத்துடன் கூட, ஏற்கெனவே குறைந்த விலைக்கு நெல்லை வாங்கி வைத்திருந்த மொத்த வணிகர்களிடம் விலைக்கு வாங்கிக் கொண்டு, வேளாண்மைக்காரர்கள் பேரில் பொய்ப் பட்டியல் கள் போடுவதில் கொள்முதல் அதிகாரிகள் அக்கறையோடு இருந்தார்கள். வணிகர்களிடம் ஒரு மூட்டைக்கு ரூ.5, 10, 15 கைக்கூலி பெறுவதும், வேளாண்மைக் காரரிடம் ஒரு மூட்டைக்கு ரூ.3,5 கைக்கூலி பெறுவதும் அரசுக் கொள்முதல் அதிகாரிகளுக்குக் கைவந்த கலை. இது ஊரார் அறிந்த உண்மை.

தமிழக அரசின் இந்த மெத்தனப் போக்கால் விளைந்த கேட்டினை விடப், பல நூறு மடங்கு கேட்டினை - இழப்பைப் பெருமழை வெள்ளப்பாழ் விளைவித்து விட்டது.

பெற்ற குழந்தையைக் கண் முன் கழுத்தைத் திருகிக் கொல்லுவதைக் காணும் தாயும் தந்தையும் எப்படிக் கதறுவார்களோ, அதைவிடக் கொடுமை யாக 120 நாள்கள் அல்லும் பகலும் பாடுபட்டு வளர்ந்த நெல்லும் உளுந்தும் பயறும் எள்ளும் கடலையும் அடியோடு நாசப்பட்டு விட்டதைக் கண்டு, கண்ணீரும் கம்பலையுமாக இலட்சக்கணக் கான வேளாண் குடும்பங்கள் தவிக்கின்றன. இது நேரக் கூடாத கேடு; காணப் பொறுக்காத கொடிய காட்சி; இயற்கையில் நேர்ந்த பேரிழப்பு.

தஞ்சை, திருவாரூர், நாகை, கடலூர் மாவட்டங் களில் அரசு அதிகாரிகளின் ஆய்வுப்படி 3.25 இலட்சம் ஏக்கரில் சம்பா, தாளடி நெல் நீரில் மூழ்கி முளைத்துப் பாழாகி விட்டது. நெல்லும் இல்லை; வைக்கோலும் இல்லை.

ஓர் ஏக்கரில் 20 முதல் 25 மூட்டை நெல் கிடைக்கும். மூட்டை ஒன்றுக்கு ரூ.300 விலை வீதம் ரூ.6,000 முதல் ரூ.7,500 வரை இந்த ஒரு தடவையில் மொத்த வருமானம் வரும். செய் நேர்த்திச் செலவு மற்றும் உழைப்புக்கு ரூ.4,000 போக - நிகர வருமானம் ஓர் ஏக்கருக்கு ரூ.2000 முதல் 3,500 வரை கிடைக்கும். ஒவ்வொரு வேளாண்மைக் காரரும், இன்று இந்த வருமானத்தை இழந்து விட்டதோடு, செய் நேர்த்திக்கு வாங்கிய கடன் ரூ.3,000, 4,000 அப்படியே தலைமேல் விழுந்து விடும். இந்த நிலையில் தமிழ்நாட்டு அரசு தற்காலிக இழப்பீடாக, நெல்லுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.1,000/- இழப்பீடு தர முன் வந்துள்ளது. நெல்லுக்கு ஓர் ஏக்கருக்கு இழப்பீடாக ரூ.2,000 தர முன்வரும்படி மய்ய அரசை மாநில அரசு கோரியுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



மாநில அரசும் மய்ய அரசும் நெல்லுக்கு ஏக்கர் ஒன்றுக்குக் குறைந்தது ரூ.5000 இழப்பீடு தர, மாநில அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். எல்லாக் கட்சிகளும் மாநில அரசுக்கும் மய்ய அரசுக்கும் இந்த வேண்டுகோளை முன் வைத்து வலியுறுத்தி அழுத்தம் தர வேண்டும். தமிழ் நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் 39 + 18 = 57 பேரும் கட்சி வேறுபாடு கருதாமல், பஞ்சாப் - ஆந்திரா - கேரளா நாடாளு மன்ற உறுப்பினர்களைப் போல் ஒன்றுபட்டு, இந்தக் கோரிக்கையை மய்ய அரசிடம் - குறிப்பாகப் பிரதமரிடம் வலியுறுத்த வேண்டும். தஞ்சை, திருவாரூர், நாகை, கடலூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பொதுமக்கள் அணுகி, நெருக்குதல் தர வேண்டும்.

இழப்பை எண்ணிக் கண்ணீர் விட்டுக் கைபிசைந்து நிற்பதையும், நம் தலைவிதி இதுதான் என்று சோம்பேறி வேதாந்தம் பேசுவதையும் விட்டு விட்டு - இதுபோன்ற நேரங்களிலாவது, மக்கள் உரிமை உணர்வு பெற்றுப் போராடிட முன்வரவேண்டும்.

இதேபோல் நெல்லில் ஊடு பயிராக விளையும் உளுந்து, பயறு இவை 4.10 இலட்சம் ஏக்கரில் அழுகிப் பாழாகி விட்டன. இது கண்கண்ட பணப் பயிர்.

உளுந்து ஏக்கர் ஒன்றுக்கு 3 மூட்டை முதல் 5 மூட்டை வரை விளையும்; ரூ.3,600 முதல் ரூ.6,000 வருமானம் தரும். இது அடியோடு அழிந்து விட்டது. உளுந்து, பயறு வகைக்கு மாநில அரசு ஏக்கருக்கு ரூ.240 தருவது போதாதது. ஏக்கர் ஒன்றுக்கு ரூ.3,000 இழப்பீடு கோரி மக்களும் கட்சிகளும் போராட வேண்டும்.

மானாவாரிப் பயிர் 15,000 ஏக்கரில் அழிந்து விட்டது. எள், நிலக்கடலை, உளுந்து, பயறு இவை பாழ்பட்டு விட்டன. இதற்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.400 இழப்பீடு தர மாநில அரசு முன்வந்துள்ளது. ஏக்கர் ஒன்றுக்கு ரூ.5000 இழப்பீடு தரக் கோரி எல்லாத் தரப்பினரும் மாநில அரசுக்கும் மய்ய அரசுக்கும் நெருக்குதல் தர வேண்டும்.

இவ்வளவு பெரிய இழப்புக்கு ஆளாகி விட்ட இலட்சக்கணக்கான சிறு வேளாண்மைக்காரர் களும், பல இலட்சம் நிலம் அற்ற வேளாண்மைக் கூலிகளும் வரும் பங்குனி - சித்திரை மாதங் களிலேயே பஞ்சைகளாய்ப், பராரிகளாய்ப், பட்டினியும் பசியுமாக இருக்கப் போகிறார்கள். இந்தக் கொடுமைக்கு இவர்கள் ஆளாகாமல் காப்பாற்றப்பட்ட வேண்டும். இவ் இழப்புகளை அன்னியில் ஆடுமாடுகள் சாவு, வீடுகள் இழப்பு, வேதாரண்யம் உப்பளம் பாழ் எனப் பேரிழப்பு நேரிட்டுள்ளது. இதற்கும் தக்க இழப்பீடு தரப்பட வேண்டும்.

ஆளுங் கட்சி - எதிர்க் கட்சிகள் என்று கருதாமல் இழப்புக்கு ஆளான எல்லா மக்களும் ஒன்றுபட்டு அரசியல் கட்சிகளுக்கும், தமிழக அரசுக்கும், இவர்கள் மூலம் மய்ய அரசுக்கும் இக் கோரிக்கை களை வலியுறுத்தி நெருக்குதல் தரவேண்டும்.

அழுத பிள்ளைதான் பால் குடிக்கும்.

-வே. ஆனைமுத்து

## அறிவோம் அரிய மூலிகைகளை...

எம். கோலப்பப்பிள்ளை

### அதிமதுரம்

இது ஓர் இனிய மூலிகை வேர். இதனை இனிய தமிழில் இரட்டிப்பு மதுரம் என்று அழைப்பர். சித்த மருத்துவத்தில் அதிமதுரத்தின் பங்கு மிகப் பெரிதாகும்.

இது மலைகளில் பயிராகும் ஒரு செடியின் வேர் ஆகும். இது இனிப்புச் சுவையும், வெப்ப வீரியமும் உடையது.

இதனால், நீர்வேட்கை, கண்நோய்கள், விக்கல், வெண்புள்ளி, சிறுநீர் எரிச்சல், காமாலை எலும்புகளைப் பற்றிய நோய்கள் ஆகியன நீங்கும்.

'தித்திக்கும் அதிமதுரக்
குணத்தையெடுத்து ரைக்கில்
சிரமயக்கஞ் சுரதாகந் திரிதோடங்கள்
பித்தஞ்சத்திக்குமிது குணமா மதுரதீபன மாந்
தாது வுட்டிண முந்தவிர்க்கும் விழிக்கிதமாம்...'

என்று பழைய ஏடு நமக்குக் கூறுவது போல இது பித்தத்தினால் வரும் நோய்களையும் குறைத்து, தாது வெப்பம், தலை மயக்கம், முக்குற்றமாகிய வாத, பித்த, கப தோடங்கள் (குற்றங்கள்) களைந்து கண்ணுக்கும் இதம் தரும்.

**தினசரி வாழ்வில் அதிமதுரம்:-**

உடல் அனல் தணிய அதிமதுரம் அரைபலம் (17 கிராம்) எடுத்து வெந்நீரில் அரைத்துக் கலக்கி வடிகட்டி காலை, மாலை இருவேளை கொடுக்கலாம்.

அதிமதுரம், கடுக்காய், மிளகு சம அளவாக எடுத்து இளவறுவலாக வறுத்துப் பொடி செய்து 4 முதல் 6 கிராம் எடை தேனில் குழைத்துக் கொடுக்க சூட்டினால் உண்டாகும் இருமல் போகும்.

அதிமதுரம், முட்சங்கன் வேர்ப்பட்டை இரண்டையும் சம எடை எடுத்து எலுமிச்சம் பழச்சாறு விட்டு மூன்று நாள் அரைத்து 5 கிராம் அளவு எடுத்து பசுவின் பாலில் கலந்து இரு முறை கொடுக்க மஞ்சட்காமாலை போகும்.

அதிமதுரம், சீரகம் வகைக்கு 15 கிராம் எடுத்து 350 மிலி நீர் விட்டு எட்டில் ஒரு பாகமாகக் கொதிக்க வைத்து காலை, மாலை இருவேளை கொடுக்க பிள்ளைப் பேற்றின் பின் உண்டாகும் உதிரப் பெருக்கு நிற்கும்.

அதிமதுரத்துண்டை வாயில் இட்டு மெல்ல இருமல், குரற் கம்மல் நீங்கும். ★

படிப்பகம்

www.padippakam.com



# என்ரான் திவால்: ஓர் எச்சரிக்கை

க. முகிலன்



என்ரான் திவாலாகிவிட்டது. அமெரிக்காவில் உள்ள ஒரு பன்னாட்டு நிறுவனம் இது! உலக மய மாக்கல் கொள்கையால் கடந்த இருபது ஆண்டுகளில் இமயம் போல் வளர்ந்து உலகப் புகழ்பெற்ற நிறுவனம் என்ரான். கட்டுப்பாடற்ற சந்தை உருவாக்கிய கடவுள் என்று என்ரான் போற்றப்பட்டது. முதல் நிலையில் உள்ள 500 பன்னாட்டு நிறுவனங்களில் 7ஆவது இடத்தில் இருந்த என்ரான் இப்போது ஓட்டாண்டியாகி விட்டது.

திட்டமிட்டு நடத்திய தில்லு முல்லுகளால் — மோசடிகளால் 'போண்டி'யாகிவிட்டது. என்ரான் உயர் அதிகாரிகள் — செயல் இயக்குநர்கள் கோடிக் கணக்கில் பணம் சுருட்டிக் கொண்டனர். பல்லாயிரக்கணக்கான என்ரான் பங்குதாரர் களுக்கும், கடன் கொடுத்தவர்களுக்கும் பட்டை நாமம் தீட்டி, அவர்கள் கையில் திருவோடு கொடுத்து விட்டனர். என்ரான் சொத்துக்களை விற்றாலும் அதன் கடனை அடைக்க முடியாது.

2001 டிசம்பர் 2ஆம் நாள் என்ரான் தான் திவாலாகி விட்டதாக 'மஞ்சள் நோட்டீஸ்' கொடுத்துவிட்டது. அமெரிக்காவில் நிக்சன் குடியரசுத் தலைவராக இருந்த போது நடந்த வாட்டர்கேட் ஊழலுக்குப் பிறகு நடந்துள்ள மிகப் பெரிய மோசடி என்ரான் திவால் என்று அமெரிக்க ஏடுகள் எழுதுகின்றன. என்ரான் மோசடி அமெரிக்க அரசியலை மட்டுமின்றி பிரிட்டனின் அரசியலையும் கலக்கிக் கொண்டிருக்கின்றது.

நம் ஊரில் சில இலட்சம் உருபாய் மோசடி செய்கின்ற சிறிய நிதி நிறுவனங்கள் பற்றிப் பரபரப்பாகச் செய்திகளை வெளியிடும் நம் பத்திரிகைகள் என்ரான் திவால் பற்றி மூச்சுக் கூட விடவில்லை! புதிய பொருளாதாரக் கொள்கையை மேலும் தீவிரமாக அமல்படுத்த வேண்டும் என்று கூச்சலிட்டுக் கொண்டிருக்கும் கும்பல் என்ரான் திவால் பற்றி திருடனுக்குத் தேள் கொட்டியது போல் இருக்கிறது.

2001ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளைத் தனியார்க்கு விற்பதன் மூலம் 12,000 கோடி திரட்டப்படும் என்று அறிவித்ததை, இவ்வாண்டின் வரவு - செலவுத்திட்டத்தை முன் மொழிவதற்கு முன் செயல்படுத்த வேண்டும் என்பதற்காக விதேஷ் சஞ்சார் நிகாம் லிமிடெட் (VSNL) நிறுவனத்தின் 25% பங்குகளை 1439.25 கோடிக்கு, டாடா நிறுவனத்திற்கும், IBPயின் 33.58% பங்குகளை மற்றொரு பொதுத்துறை நிறுவனமான இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனுக்கு (IOC) 1,158-68 கோடிக்கும் விற்பதாக பிப்பிரவரி 5 அன்று வாஜ்பாய் அரசு அறிவித்தது. உடனடியாக மேலும் பல பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளைத் தனியாருக்கு விற்கப் போவதாக, இக்கேடு கெட்ட வேலைக்கென்றே உள்ள அமைச்சர் அருண்ஷோரி கூறுகிறார். வாஜ்பாய் கட்சியான பா.ச.கட்சியோ, அதன் கூட்டணிக் கட்சிகளோ அல்லது 1991 இல் இந்தியாவில் புதிய பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்திய மன்மோகன்சிங், நரசிம்ம ராவ், சிதம்பரம் போன்றவர்களோ, சோனியாகாந்தி யோ என்ரான் திவால் பற்றிக் கருத்து ஏதும் கூறவில்லை. ஏனெனில் என்ரான் மோசடிகளுக்கு இவர்கள் அனைவரும் நேரடியாகவோ, மறைமுக மாகவோ உறுதுணையாக இருந்தனர் என்பது ஒன்று. இவர்கள் அனைவரும் தனியார் மயத்தைத் தீவிரமாக ஆதரிப்பவர்கள் என்பதால் என்ரான் மோசடிப் பற்றிப் பேசுவது மல்லாக்கப்படுத்துக் கொண்டு உமிழ்வது போன்றதாகும் என்பது மற்றொன்று.

அந்நியர் படையெடுப்புகளும், அதன் விளைவு களும் என்று வரலாற்றில் இப்போது படிப்பது போல், இனி வருங்காலத்தில் பன்னாட்டு நிறுவனங்களின் படையெடுப்புகளும் அவற்றின் மோசடிகளும் என்று நாம் படிக்கப் போகும் நாள் வெகு தொலைவில் இல்லை.



தபோல் மின்நிறுவனம் (DPC)

1993 இல் என்ரான் இந்தியாவில் கால் வைத்தது. புதிய பொருளாதாரக் கொள்கையின் ஆதரவாளர் கள் மாநில அரசுகளின் மின்வாரியங்களைக் குறி வைத்துத் தாக்கினார்கள். மின்வாரியங்கள் பெரும் இழப்பில் இயங்குவதால் மின் உற்பத்தியில் தனியாரை அனுமதிக்க வேண்டும் என்றனர்.

தபோல் மின்நிறுவனம் (DPC) என்ற பெயரில் என்ரானுக்கும் மராட்டிய அரசுக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டது. அப்போது சரத்பவார் முதலமைச்சராக இருந்தார். தபோல் மின் ஒப்பந்தம் மூலம் காங்கிரசுக் கட்சி நாட்டையே அடகு வைத்துவிட்டது என்று பா.ச.க.வும் சிவசேனாவும் அப்போது கொக்கரித் தன. 1996இல் மராட்டிய மாநிலச் சட்டமன்றத்திற்கு நடைபெற்ற தேர்தலில், தபோல் மின் ஒப்பந்தத்தை அரபிக் கடலில் தூக்கி எறிந்து சுதேசியத்தைக்

படிப்பகம்

www.padippakam.com



காப்போம் என்பதை இக்கட்சிகள் முதன்மையான தேர்தல் பிரச்சாரமாக ஆக்கின.

அத்தேர்தலில் காங்கிரசுக் கட்சி தோற்றது. 'காவி'க் கூட்டணியான சிவசேனா - பா.ச.க. ஆட்சியைக் கைப்பற்றியது. காங்கிரசு ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்ட தபோல் ஒப்பந்தத்தை முறித்தது. ஆனால் அதைவிட மிகக்கேடான புதிய ஒப்பந்தத்தைத் தபோல் மின் நிறுவனத்துடன் செய்து கொண்டது. இந்த ஒப்பந்தம் உருவாவதற்கு முன் என்ரான் உயர் அதிகாரிகள் சிவசேனா தலைவர் பால்தாக்ரேவைச் சந்தித்தனர். எல்லாவற்றையும் விட 1996இல் 13 நாள்கள் ஆட்சியில் பிரதமராக இருந்த வாஜ்பாய் அரசு என்ரானுக்கு அளித்த உத்தரவாதம் தான் இவ்வொப்பந்தம் உறுதி செய்யப்படுவதற்கு மூலமாக அமைந்தது. 13 நாட்கள் பிரதமராக இருந்த வாஜ்பாயியின் அமைச்சரவை ஒரே முறைதான் கூட்டப்பட்டது. அந்த நாள் மே 27, 1996. 5 நிமிடம் மட்டுமே நடைபெற்ற அக்கூட்டத்தில் ஒரே முடிவுதான் எடுக்கப்பட்டது. அதுதான் என்ரானுக்கு அளிக்கப்பட்ட மத்திய அரசின் பண உத்தரவாதம் (Sovereign counter guarantee). மராட்டிய அரசு என்ரானுக்குத் தரவேண்டிய பணத்தை அளிக்க முடியாத நிலை ஏற்பட்டால், அப்போது நடுவண் அரசு அப்பணத்தைத் தரும் என்பதே வாஜ்பாய் அரசு அளித்த உறுதிமொழி.

1996 இல் மராட்டிய அரசும் தபோல் மின் நிறுவனமும் செய்து கொண்ட ஒப்பந்தம் மின்சாரம் வாங்கும் ஒப்பந்தம் (Power Purchase Agreement - PPA) என்று அழைக்கப்பட்டது. தபோல் மின் உற்பத்தித் திறன் 2184 மெகாவாட்; அதன் மூலதனம் 13,000 கோடி என்று அறிவிக்கப்பட்டது. தபோல் மின் நிறுவனத்தின் பங்கு 65 விழுக்காடு; ஜெனரல் எலக்ட்ரிக் மற்றும் பெக்டல் பங்கு 20 விழுக்காடு; மராட்டிய மின் வாரியத்தின் பங்கு 15 விழுக்காடு என்று முடிவு செய்யப்பட்டது. மய்ய அரசு பணத்திற்கு அளித்துள்ள உறுதிமொழியை நம்பி இந்திய நிதி நிறுவனங்கள் 7000 கோடி முதலீடு செய்தன.

ஒப்பந்தப்படி தபோல் மின் நிறுவனம் உற்பத்தி செய்யும் மின்சாரம் முழுவதையும் மராட்டிய மின் வாரியம் வாங்கிக் கொள்ள வேண்டும். மின்வாரியம் ஒரு யூனிட் மின்சாரத்தை இரண்டு உருபாய்க்கு உற்பத்தி செய்து கொண்டிருந்த நிலையில், தபோல் மின் நிறுவனத்திடம் ஒரு யூனிட் மின்சாரத்தை அய்ந்து உருபாய்க்கு வாங்க ஒத்துக் கொண்டது. அது மட்டுமின்றி மழைக் காலங்களில் மின் தேவை குறையும் போது கூட தபோலின் மின்சாரத்தை முழுமையாக வாங்கிட வேண்டும். மின்சாரத்தைச் சேமித்து வைக்க முடியாது என்பதால், தபோலிடம் மின்சாரம் வாங்கா விட்டாலும் மாதந்தோறும் தபோல் மின் நிறுவனத்திற்கு 90 கோடி பணம் தர வேண்டும் என்பது ஒப்பந்தம்.

மழைக் காலங்களில் மின் தேவை குறைவதாலும், தபோல் மின்சாரம் அதிக விலை என்பதாலும், குறித்த காலத்தில் தபோல் மின் நிறுவனம் மின்சாரத்தை வழங்கத் தவறியதாலும் மராட்டிய மின் வாரியத்திற்கும், தபோல் மின் நிறுவனத்திற்கும் இடையே சிக்கல் தோன்றியது. 2000 அக்டோபர் மாதம் முதல் மின்வாரியம் பணம் தருவதை நிறுத்திவிட்டது. தபோல் நிறுவனமும் தன் மின் உற்பத்தியை நிறுத்திவிட்டது. தான் அளித்த உறுதி மொழிப்படி நடுவண் அரசும் ஒருமுறை மட்டும் தபோல் நிறுவனத்திற்குப் பணம் தந்தது. அதன்பிறகு, இயலாது என்று கூறிவிட்டது.

இந்தியாவில் என்ரானுக்கு ஏற்பட்ட சிக்கலை நடுவண் அரசு தலையிட்டுத் தீர்க்க வேண்டும் என்று அமெரிக்காவின் ஆட்சியாளர்களும் உயர் அதிகாரிகளும் நெருக்குதல் கொடுத்தனர். தபோல் மின் நிறுவனத்தின் 65% பங்குகளுக்கான தொகை 11,500 கோடியை உடனே தர வேண்டும் என்றும், தவறினால் அயல்நாட்டு முதலீடுகள் இனி இந்தியாவிற்குக் கிடைக்காது என்றும் இந்தியா விற்கான அமெரிக்காவின் தூதுவர் ராபர்ட் டி. பிளாக் வில் 2002 சனவரி 28 அன்று மிரட்டினார். என்ரான் திவாலாகி விட்ட பிறகும் இவ்வாறு மிரட்ட முடிவதற்குக் காரணம், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இறுமாப்பாகும்!

அமெரிக்காவின் வெளியுறவுத் துறை அமைச்சர் காலின் பவல் 2001 ஏப்பிரல் 6 அன்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்த் சிங்கிடம் என்ரான் பிரச்சனை குறித்துப் பேசினார். அமெரிக்காவின் துணைக் குடியரசுத் தலைவர் டிக்செனி சூன் மாதம் அமெரிக்காவுக்குச் சென்றிருந்த சோனியா காந்தியிடமும், மன்மோகன் சிங்கிடமும் என்ரான் சிக்கல் பற்றிப் பேசினார். அக்டோபர் 3 அன்று ஜஸ்வந்த் சிங்கிடம் பேசினார். இவர்கள் தவிர அமெரிக்காவின் உயர் அதிகாரிகள் பலரும் என்ரான் சிக்கலைத் தீர்க்குமாறு இந்திய உயர் அதிகாரிகளிடம் வலியுறுத்தினார்கள். இதிலிருந்து ஒன்று நமக்கு நன்கு தெரிகிறது. அமெரிக்காவிலும், இந்தியா விலும் அரசுகளை இயக்குவது மக்களின் வாக்குகள் அல்ல; பன்னாட்டு நிறுவனங்களின், உள்நாட்டு முதலாளி களின் பணமே என்பதாகும்.

தபோல் மின் ஒப்பந்தம் முடிவானபோது 'இந்தியர் களுக்குத் தபோல் மின் நிறுவனத்தின் தேவையைப் பற்றி விளக்குவதற்காக 95 கோடி செலவிடப்பட்டது' என்று என்ரான் வெளிப்படையாக அறிவித்திருந்ததை இங்கு நினைவிற் கொள்ள வேண்டும். தபோல் மின் நிறுவனத்திற்கு எதிராக மராட்டியத்தில் அதனால் பாதிக்கப்பட்ட சிற்றூர்ப் புற ஏழை மக்கள் போராடிய போது, தபோல் மின் நிறுவனம் காவல் துறையை ஏவிஅம்மக்களைக் கொடுமைப்படுத்தியது; சிறையில் அடைத்தது; ஆம்னஸ்டி எனப்படும் உலக மனித உரிமை அமைப்பு என்ரான், மராட்டிய மாநிலக் காவல் துறையின் துணையுடன் நடத்திய மனித உரிமை மீறல்களைக் கண்டித்துள்ளது. 'ஆம்னஸ்டி' தன் அறிக்கையில் கண்டித்துள்ள ஒரேயொரு பன்னாட்டு நிறுவனம் என்ரான் மட்டுமே!

1980களில் எண்ணெய்க் குழாய் நிறுவனமாக இருந்த என்ரான் புதியப் பொருளாதாரக் கொள்கையின் சூழ்நிலையைப் பயன்படுத்தி இருபது ஆண்டுகளில் உலகின் மிகப்பெரிய எரிசக்தி, மின்சார நிறுவனமாக உயர்ந்தது. 1996இல் 13.3 பில்லியன் (1 பில்லியன் என்பது 100 கோடி) டாலராக இருந்த என்ரான் விற்பனை 2000 இல் 100.8 பில்லியன் டாலராக உயர்ந்தது. அமெரிக்காவின் அரசியல்வாதிகளுக்கும் உயர் அதிகாரி களுக்கும் பணம் கொடுத்து, தன் வளர்ச்சிக்கு ஏற்றவாறு சட்டங்களையும்,

www.padippakam.com





கென்னத் லே

விதிகளையும் மாற்றியது. என்ரான் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாக 15 ஆண்டுகள் இருந்த கென்னத் லே என்பவர் புதிய புதிய குறுக்கு வழிகளில் என்ரான் வேகமாக வளரவும், பல மோசடிகளைச் செய்யவும் மூலவராகத் திகழ்ந்தார். கிளிண்டன் காலத்தில் அமெரிக்காவின் வணிக அமைச்சராக இருந்த பிரவுன் என்பவருடன் 1995-இல் கென்னத்லே இந்தியாவிற்கு வந்தார்.

என்ரான் நிறுவனம் சனநாயகக் கட்சிக்கு 91-92இல் 30,000 டாலர், 93-94 இல் 42,000 டாலர் அளித்தது. இப்போதுள்ள குடியரசுத் தலைவர் புஷ்ஷின் தந்தை ஜார்ஜ் எச்.டபிள்யு. புஷ் 1992 தேர்தலில் போட்டி யிட்டபோது என்ரான் 13,000 டாலர் கொடுத்தது. இப்போதுள்ள புஷ்ஷின் தேர்தலுக்காக 60,00,000 டாலர் கொடுத்தது (இந்து 8.2.2002). அமெரிக்காவின் 71 செனட் உறுப்பினர்களும், குடியரசுக் கட்சி, சனநாயகக் கட்சி ஆகிய இரண்டையும் சேர்ந்த 188 நாடாளுமன்ற உறுப்பினர்களும் என்ரானிடம் பணம் பெற்றுள் ளனர்: அமெரிக்காவின் வணிகத்துறைப் பிரதிநிதி யாக உலக வணிக அமைப்பில் உள்ள ராபர்ட் சியோலிக் 'ஆலோசனைக் கட்டணமாக' என்ரானிடம் 50,000 டாலர் பெற்றுக் கொண்டார். (பிரண்ட்லைன் மார்ச் 1, 2002)

இவ்வாறாக அமெரிக்காவில் அரசியல்வாதி களையும், உயர் அதிகாரிகளையும் என்ரான் தன் கைக்குள் போட்டுக் கொண்டதால், 1990களில் அமெரிக்காவின் மின்சக்தி உற்பத்தி விதிகளைத் தன் நலனுக்கு ஏற்ப மாற்றிடச் செய்தது. கண்காணிப்புக் குழுக்கள், தணிக்கைக் குழுக்கள் போன்றவை களுக்கும் பணம் கொடுத்து அவர்களின் கண்களை மூடிவிட்டது.

என்ரான் நிறுவனம் தன் பங்குகளின் மதிப்பை உயர்த்த பல தில்லு முல்லுகளைச் செய்தது. இதனால் என்ரான் பங்குகளை வாங்குவதற்குக் கடும்போட்டி நிலவியது. கடன்களையும், இழப்புகளையும் கணக்கில் காட்டாமல் மறைத்தது. 2800க்கு மேற்பட்ட கிளைகளை உருவாக்கிக் கொண்டது. இவற்றுள் 874 போலியானவை: வரவு, செலவுக்கணக்கில் ஏமாற்று வதற்கு இவற்றைப் பயன்படுத்திக் கொண்டது. நிகர இலாபத்தை மட்டும் காட்ட வேண்டிய இடத்தில் மொத்த இலாபத்தையும் கணக்கில் எழுதி ஏமாற்றியது.

புஷ் அரசு தேசிய எரிசக்திக் கொள்கை மேம்பாட்டுக் கோட்பாடுகளை உருவாக்கியது. இது தொடர்பாகத் துணைக் குடியரசுத் தலைவர் டிக்செனி என்ரான் அதிகாரிகளை ஆறு தடவைகள் சந்தித்தார். ஆனால் அதன் விவரங்களை நாடாளுமன்ற ஆய்வுக் குழுவுக்கு அளிக்க மறுக்கிறார்.



ஹூஸ்டனில் உள்ள என்ரான் கார்ப்ரேசன் தலைமையகம்

என்ரான் நிறுவனம் திவாலாகப் போகிறது என்பதைத் தெரிந்ததும் அதன் இயக்குநர்களும் உயர் அதிகாரிகளும் என்ரானில் இருந்த தம் பங்குகளைக் கொள்ளை இலாபத்திற்கு விற்றுக் கொண்டனர். கென்னத் லே தன் பங்குகளை 500 கோடிக்கு விற்றுக் கொண்டார். இந்தியாவில் தபோல் மின் நிறுவனத் தலைவராக இருந்த மார்க் தன் பங்குகளை 400 கோடிக்கு விற்றுக் கொண்டார். என்ரான் நிறுவனத்தின் 17,000 ஊழியர்கள் என்ரான் திவாலான பிறகு இதில் போட்டிருந்த தம் பங்குத் தொகை முழுவதையும் இழந்தனர். இவர்கள் தம் பங்குகளை முன்பு விற்க முயன்ற போது, 'இப்போது வேண்டாம் விரைவில் பங்கின் மதிப்பு உயரும்; அப்போது விற்கலாம்' என்று கூறி உயர் அதிகாரிகள் தடுத்துவிட்டனர். இப்போது என்ரான் மோசடியைப் பத்துக் குழுக்கள் ஆய்வு செய்து வருகின்றன.

பன்னாட்டு நிறுவனங்களின் கட்டுப்பாடற்ற மாபெரும் வளர்ச்சி என்பது என்ரான் மோசடி போன்றதாகவே இருக்கும். 1978இல் அமெரிக்காவில் ஒரே ஒரு கோடீசுவரர் தான் இருந்தார். 1994 இல் 120 கோடீசுவரர்கள் உருவாகி விட்டனர். உலக அளவில் 1987இல் 145 கோடீசுவர்கள் இருந்தனர்; 1994 இல் 358 பேராகிவிட்டனர். இந்த 358 கோடீசுவர்களின் சொத்தின் மொத்த மதிப்பு ஏழ்மை நிலையில் உள்ள 250 கோடி மக்களின் மொத்த சொத்தின் மதிப்புக்குச் சமம். உலக வணிகத்தில் 70 விழுக்காடு பன்னாட்டு நிறுவனங் களின் கட்டுப்பாட்டில் உள்ளது.

உலக மயமாக்கல், கோடீசுவர்களின் எண்ணிக் கையை அதிகரிக்கலாம்; பன்னாட்டு நிறுவனங்களின் ஏக போகத்தை வளர்க்கலாம். ஆனால் இன்று உலகில் ஒரு நாளைக்கு ஒரு டாலர், இரண்டு டாலர் கூடச் சம்பாதிக்க வழியின்றித் தவிக்கும் 300 கோடி மக்களின் வாழ்க்கையை உலக மயமாக்கல் மேலும் சீரழிக்கும். என்ரான் திவால், ஓர் எச்சரிக்கை! உலக மயமாக் கலையும், இக்கோட்பாட்டிற்கு ஊதுகுழலாக உள்ள அரசுகளையும், அறிவாளிகளையும், பன்னாட்டு நிறுவனங்களையும், எதிர்த்துப் போராட வேண்டியது 300 கோடி மக்களின் உயிர் மூச்சான கடமையாகும். ●

படிப்பகம்

www.padippakam.com



(சென்ற இதழ் தொடர்ச்சி...)

# அறிவியல் தமிழின் தேவை

மருத்துவர் சு. நரேந்திரன்

## இதழ்களும் அறிவியலும்

1831 முதல் தமிழ் இதழ்களிலும் சஞ்சிகை களிலும் அறிவியல் கட்டுரைகள் வெளியிடப் பெற்றன. இதில் 1831 இல் வெளி வந்த தமிழ்ப் பத்திரிகை இதழ்களின் முன்னோடி எனலாம். இதனைத் தொடர்ந்து பொது இதழ்களான உதயதாரகை (1841), தினவர்த்தமானி (1855). சுகஜீவன் (1887). விவேக சிந்தாமணி (1892). விவேக சுந்தரம் (1894), சித்தாந்த தீபிகை (1897), நாளபோதினி (1897), வினோத விசித்திர பத்திரிகை (1900), ஜலப்பிரியர் (1900) ஆகிய இதழ்களில் அறிவியல் தொடர்பான கட்டுரைகள் வெளிவந்தன.

இருபதாம் நூற்றாண்டில் வெளிவந்த இதழ்கள் வருமாறு: உழவோன் (1904), விவசாய தீபிகை (1904), பூலோக ஔஷதோகாரி (1905), சுகாரபோதினி (1906), தென்னிந்திய விவசாயம் (1907), ஆரோக்கிய போதினி (1908), கிருஷிகன் (1909), வைத்திய போதினி (1910), நல்வழி (1912), வைத்திய கலாநிதி (1913), தொழிற்கல்வி (1914), தமிழர் நேசன் (1917), கிருஷிகன் (1919), இந்திய விவசாயம் (1920), தமிழ் வைத்தியக் களஞ்சியம் (1921), கிருஷிகமித்ரன் (1922), ஆரோக்கியமும் சிசுவின் வாழ்க்கையும் (1923), தன்வந்திரி (1923), ஆயுள் வேதம் (1923), ஆரோக்கிய தீபிகை (1924), தொழிற்கல்வி (1926), தொழி லாசிரியன் (1926), இயற்கை (1926), தொழிற்க்ல்வி (1926), செல்வக் களஞ்சியம் (1926), ரூரல் இந்தியா (1927), ஏல விவசாயி (1928), மருத்துவன் (1928), விஞ்ஞான் பாஸ்கரன் (1929), வைத்தியக் களஞ்சியம் (1930), ஆரோக்கிய சிந்தாமணி (1930), கமத்தொழில் விளக்கம் (1930), வைத்தியன் (1931), ஆயுர்வேத சீவாட்சகம் (1932), தமிழ்க்கடல் (1933), ஆத்மாட்சா (1933), சித்தர் களஞ்சியம் (1934), சித்தன் (1935), அறிவு (1936), வைத்திய சந்திரிகா (1938), தமிழ் விவசாய சஞ்சிகை (1938), தமிழ் மருத்துவப் பொழில் (1941), மேழிச்செல்வம் (1943), அகஸ்தியன் (1944), ஹோமியோபதி (1947), கலைக்கதிர் (1948), பதனிடும் தொழில் (1948), மானிட இன்பம் (1948), விஞ்ஞானி (1950), கிருஷிகன் (1951), விவசாயி (1951), யந்திர உலகம் (1953), பயிர்த்தொழில் (1956), தி வாய்ஸ் ஆப் ஹோமியோபதி (1956), நல்வாழ்வு (1956), ஹோமியோ பிரகடனம் (1958), இந்தியன் காப்பி (1959), விவசாய உலகம் (1962), ஆரோக்யம் (1962), உரமும் பயிரும் (1962), ஆரோக்கிய மார்க்கம் (1962), உழவர் நாடு (1963), வேளாண்மை வளம் (1963), அணுக்கதிர் (1963), இந்தியச் செல்வம் (1964), பொறியியல் (1964), அறிவுப்பாதை (1964), குணம் (1965), உரவழி (1965), கிராம வைத்தியம் (1965), மூலிகை ரகசியம் (1965), இளம் விஞ்ஞானி (1965), முதல் சித்தன் (1966), உடல்நலம் (1966), மருத்துவ முரசு (1966), அதிசயம் (1966), விவசாய நாடு (1968), வேளாண்மை வளம் (1968), தோல் விஞ்ஞானம் (1969), பண்ணைத் தொழில் (1969), ஆர்கனன் (1969), குடும்பக்கலை (1969), குடும்ப நலச்செய்திக்கதிர் (1971), கொங்கு (1972), ஊற்று (1972), யுனெஸ்கோ கூரியர் (1972), இயற்கை மருத்துவம் (1973), தொழில் இந்தியா (1973). A.M.T.C (Allophic Medical Journal) (1973), விஞ்ஞானச்சுடர் (1974), செந்தமிழ்ச்சித்தன் (1974), கரும்பு மலர் (1974), வளரும் வேளாண்மை (1975), விஞ்ஞான விவசாயம் (1976), சுகவழி (1977), ஹோமியோபதி தொண்டன் (1977), நிலவளம் (1977), ஸ்பைஸ் இந்தியா (1978), நல்வாழ்வு (1978), ஆரோக்கிய மலர் (1980), சித்தாலயா (1980), கால்நடைக்கதிர் (1981), மருத்துவ மஞ்சரி (1981), ஹானிமன் (1982), கலைச்சொல் (1982), சித்த மருத்துவம் (1982), கோழி நண்பன் (1982), கண் ஒளி (1983), பசுமை (1983), பேதியின் சேதி (1984), சூழலியல் நுட்பம் (1985), அறிக அறிவியல் (1986), துளிர் (1987), சித்தர் கருவூலம் (1987), வயல்வளம் (1987), வளரும் பசுமை (1988), நமது சூழல் (1988), உங்கள் விவசாயம் (1988), இரப்பர் மலர் (1989), சித்தர் செயல் (1989), உழவர் நண்பன் (1989), பட்டுமலர் (1990), ஓம் சக்தி மருத்துவ மலர் (1990), உங்கள் உடல் நலம் (1991), புதிய கல்வி (1991), நம் வழி வேளாண்மை (1991), மருத்துவ அறிவியல் மலர் (1992), ஹய்ட்டி ஹெல்த் (1992), அறிவியல் துளி (1995), ஆரோக்கிய வாழ்வு (1996), ஜீவ மூலிகை (1996), நவீன வேளாண்மை (1996), மூலிகை மருத்துவம் (1996), ஹெல்த் டாக்டர் (1996), தமிழ் கம்பியூட்டர் (1996), தெய்வீக மருத்துவம் (1997), ஞான மருத்துவமணி (1997), பேமிலி ஹெல்த் (1997), உண்மை ஹோமியோபதி (1997), மார்சியல் ஆர்ட் பாடி பில்டிங் (1998), ஹெர்குலிஸ் (1998).

''தமிழ் சாஸ்திர பரிபாஷை சங்கத்தின் பத்திரிகை'' சில இதழ்கள் (1916) கலைச்சொல்லாக்கத்திற்கு உதவும் விதமாக ஆங்கிலத்தில் வெளிவருகிறது. ஆங்கிலத் தலைப்பில் இதை அப்பொழுது பாரதி சாடுகிறார் (பாரதி கட்டுரை 269). இதைத் தொடர்ந்து வெளிவந்த தமிழர் நேசன் (1917) பல நல்ல தாவர உயிர்நூற் சொற்களை வெளியிட்டுள்ளது.

இதன் பிறகு 1922 - 1924 வரை விபுலானந்தர் ''விஞ்ஞான தீபம்'' என்ற தலைப்பில் கட்டுரைகளை 'செந்தமிழ்' இதழ் வழியாக எழுதிப் பல கலைச் சொற்களை உருவாக்கினார். மேலும் இவர் தமிழ் வழிக் கல்வியை வற்புறுத்துகிறார்.

இலங்கையின் ஈழகேசரி, வீரகேசரி, சிங்கப்பூர் தமிழ்முரசு, கோலாலம்பூர் தமிழ்நேசன் என்பனவற்றிலும் சிறந்த கட்டுரைகள் வெளிவந்தன.

(தொடரும்)

படிப்பகம்

www.padippakam.com



மன்னார்சாமியின் மரத்தடி மன்றத்தில் இந்த மாத அரசியல் 10

# இன்னொரு கிருஷ்ண பரமாத்மா!

- ஓலைப்பட்டி கந்தையா

(மன்னார் சாமி - மலர் ஆஸ்பத்திரி எதிரில் மரத்தடியில் செருப்புத் தைக்கிறவர். மலைக்குடி மருதமுத்து - மலர் ஆஸ்பத்திரிக்கு இதய அறுவைச் சிகிச்சைக்கு என்று 5 ஏக்கர் நிலத்தை விற்று விட்டு வந்தவர். இன்று மகள் வீடும் மரத்தடியும் என்று ஆகிவிட்டவர். ஏ.ஜி. ஆபீஸ் வெங்கடேசய்யர் - பதவி ஓய்வு பெற்ற அக்கவுண்டன்ட்)

மருதமுத்து: என்ன அய்யரே - மகா கடுப்பில் போனீர். போன மச்சான் திரும்பி வந்தான் பூமணத்தோடன்னு வந்துட்டீர்.

மன்னார்சாமி: சாமிக்கு வாய்த்தொழில் ஒன்றே வாகான கைத்தொழில். அது இல்லாமல் போய்த் தொழில் புரிஞ்சா பிழைப்பு நடக்குமா?

வெங்கடேசய்யர்: பேசாத பிராமணன் - வீசாத காற்று, ஆடாத யானை - பாடாத குயில் - பாத்திருக்கீங்களா? இருக்க முடியாது. பிராமணன் கோபிச்சுக் கிட்டுக் காட்டுக்குப் போனா - யாகமும் யக்ஞமும் வேத மந்திரமும் காட்டுப் பிராணிகளிடமும் - மரம் மட்டைகளிடமுமா ஓத முடியும்? மக்கள் கூடும் இடமே பிராமணன் பிழைப்பிடம்.

மருதமுத்து: அப்பிடிச் சொல்லும். மரம் மட்டையை ஏமாத்த முடியாது. மனுஷனைத் தான் ஏமாத்த முடியும்கிறீர். ஞாயந்தான். விஷயத்துக்கு வாரும். ஆண்டிப் பட்டி எப்படி இருக்கு?

வெங்கடேசய்யர்: அரசிப்பட்டி, அரிசிப்பட்டி, அம்மாப் பட்டி, அப்பாப் பட்டின்னு தேர்தல் வரலாற்றில் புதுச் சரித்திரம் படைக்குது. மகாராணி போட்டி போடறதாலே - அரசிப் பட்டியாம்; படிப்படியா கார்டு இல்லாமலே அரிசியை அளந்து உடுறாகளாம் - அதனால் அரிசிப்பட்டி. அம்மாவாலே - அம்மாப்பட்டி, அப்பாப்பட்டி எதனால்ங்கிறீரா? அது தான் ஜோக். உடன் பிறப்பே - உடன் பிறப்பேன்னு உருகி உருகி எழுதின கருணாநிதியை - ஆண்டிப்பட்டி உடன்பிறப்புகள் அப்பாவாக்கி விட்டார்கள். இங்கே அம்மா - அங்கே அப்பா - குழந்தைகளே சாந்தி முகூர்த்தமும் பண்ணி விடுவா போலிருக்கு.

மன்னார்சாமி: அண்ணனே-ன்னு அழகிரி யையும் அண்ணியேன்னு அவர் சம்சாரத்தையும் கூட சொல்றாங்க சாமி.

வெங்கடேசய்யர்: தமிழக அரசியலை இப்படி மச்சான் முறைக்குக் கொண்டாந்து நாசம் பண்ணினவர் அண்ணாத்துரை தான்யா. அண்ணா, அண்ணான்னு இவர் பேரைச் சொல்லி ஜனங்கள் அழைச்சா - தம்பியேன்னு மத்தவங்களை இவர் முறை போட்டு அழைக்கிறது என்ன நியாயம்? அண்ணன் - தம்பின்னு வந்தா - அப்புறம் மச்சான் - மதனி மட்டும் இல்லாம போயிடுமா?

மருதமுத்து: அய்யரே, செய்தியைச் சொல்லும். மச்சான் - மதனின்னா செருப்பு, துடப்பம்ன்னு விவகாரமாயிடப் போவுது. ஆண்டிப்பட்டியில் யார் செயிக்கிறார்?

வெங்கடேசய்யர்: யார் செயிச்சா என்ன? தி.மு.க. செயிச்சா - தேர்தல் முறைகேடுன்னு செயலலிதா சொல்லுவார். செயலலிதா செயிச்சா எல்லாம் போச்சு - ஊரே நாசம் ன்னு கருணாநிதி புலம்பப் போறார். அரசர்கள் கூத்தாடின காலம் போய், இப்ப கூத்தாடிகள் அரசாளுகிறார்கள்.

மன்னார்சாமி: பெருந்தலைவர்களின் கோமாளிக் கூத்துகளைப் பார்க்க தேர்தல் சமயத்திலே தான் சாமி வாய்ப்பு. அடிக்கடி இப்படி இடைத்தேர்தல் வந்தா நல்லாருக்கும்!

வெங்கடேசய்யர்: நீ சொல்லிப்புட்டு போவேய்யா! மகாகவி - வேதவிற்பன்னர் - யாகத்திலகம் - வாஜ்பேயி, உத்திரபிரதேசத்தில் ததிங்கணத்தோம் போடறார் பார். பி.ஜே.பி. செயிக்கிறதுக்கு முஸ்லிம் ஓட்டு தேவை இல்லைன்னு வாய் தவறிச் சொல்லிட்டார்; அடடா! காங்கிரஸ் வல்லூறு- முலாயம் கோட்பின் - மாயாவதி குரங்கு எல்லோரும் எம்பெருமானை பிச்சுப் புடுங்கி - நச்சு- நாறடிக்கிறாளே!

மருதமுத்து: ஆமாம். உலக மகா உத்தமர் - வாஜ்பேயி! ராமர் கோவில் கட்டறது இந்து மக்களின் அபிலாசை ன்னார். வரலாற்றில் தவறுகள் இருந்தால் திருத்தத்தான் வேணுமின்னார். இவங்க அப்பன் பாட்டன் - எச்.ஜி. வெல்ஸிலிருந்து - டிடி கோசாம்பி - ரோமிலாதாபார் - நீலகண்ட சாஸ்திரி எல்லோரும் வரலாற்றில் தவறு செய்து விட்டார்கள். சரித்திர நிபுணர் - ஆக்ஸ்போர்ட் அறிஞர் - சவுண்டி வாஜ்பேயியும், மகாசவுண்டி அத்வானியும் தான் திருத்தணும்! வெட்கக் கேடு.

www.padippakam.com



உலக சரித்திரமேதைகள் கேட்டா புட்டத்தாலே சிரிப்பான்.

**மன்னார்சாமி:** உலகம் சிரிக்குமின்னு நினைச்சா . செருப்பு தைக்க ஒரு சாதின்னு வெச்சிருக்கோம். இங்கே இப்ப இவங்களுக்கு லாபம். அது எங்கும் எப்பவும் நிலைக்கணும். அவ்வளவு தானே!

**வெங்கடேசய்யர்:** விஷயம் தெரியாம புலம்பாதே.

**மன்னார்சாமி:** அனைத்து விளை பொருளும், அனைத்து உற்பத்திகளும் ஈசுவரன் சன்னதியில் சமர்ப்பிக்கப்படணும். 'ஈசுவரார்ப்பணம் சமர்ப்பயாமி'ன்னு சொல்லிண்டே கடவுளுக்குப் படைச்சிடணும். பிறகு கடவுள் பாத்து அவரவர் தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ப விநியோகம் பண்ணுவார். உணவை உற்பத்தி பண்றவன் - எல்லாம் தானே சாப்பிட்டுட்டா - நொண்டி, முடம், கூன் குருடு எப்படிப் பிழைக்கிறது? அதனால் தான் கண்ணன் கீதையிலே சொல்றார்: 'கடமையைச் செய். பலனை எதிர்பார்க்காதே!'

**மருதமுத்து:** சபாஷ்! பலன் பிராமணனுக்குன்னு அர்த்தம். பெரியார்தான்யா கேட்டார்: நீ விவசாயம் செய்யறதில்லை. ஆனால் சீரகச் சம்பா அரிசியும், நெய் பாலும் சாப்பிடறே, அது எப்படி? நீ தறிபோட்டுப் புடவை நெய்யறதில்லை; ஆனால் நீ எட்டு முழப் பஞ்சகச்சமும் உம் பொஞ்சாதி பதினெட்டு முழம் மடிசாரும் பட்டும் பீதாம்பரமுமா ஜொலிக்கிறீங்க. அது எப்படி? நீ கல் அறுத்து காளவாப் போட்டு - மரம் அறுத்துப் பலகை செய்து வீடு கட்டுவதில்லை. ஆனால் மெயின் ரோடில் கக்கூஸ் வெச்ச - தெருவுக்கும் தெருவுக்குமான மேட்டுப் பகுதி வீடுகள் உனக்குச் சொந்தமா இருக்கு - அது எப்படின்னு?

**மன்னார்சாமி:** அடப்பாவி! இப்படில்லாம் பெரியார் கேட்டாருங்களா? நம்பவே முடியலை. உடம்போட, அறிவோட இருக்கிறவன் திருடறது என்ன நியாயம்?

**மருதமுத்து:** முழு விவரமும் புரிஞ்சா - மன்னார்சாமி - இந்த பூமியிலே ஒரு பார்ப்பனப் புல் பூண்டு இருக்க முடியாது. அதுக்குத்தான் வெகு ஜனங்களுக்குக் கல்வியைக் குடுக்காதேன்னு மனு நீதியில் சொல்லி - பார்ப்பன ஆட்சியில் அதை நடைமுறையாக்கி, ராஜகோபாலாச்சாரி ஆட்சியில் சுதந்திரத்துக்கு முந்தி 2000 ஆரம்பப் பாடசாலையும் - 1952ல் 6000 ஆரம்பப் பாடசாலையும் மூடப்பட்டதே! மிச்சம் மீதி இருக்கிற சூத்திரன் - தச்சன் குசவனா ஆகணுமின்னு தானே - குலக்கல்வியைக் கொண்டு வந்தார் ஆச்சாரியார்.

**வந்தவர்:** அவ்வா! அவ்வா! இவ்வளவு ஆச்சரியமா? இப்ப இருக்கிற கல்கி - குமுதம் - ஆனந்த விகடன் கும்பல் - ராஜாஜி என்னமோ உலக மகா மேதை என்கிற மாதிரி எழுதுகிறார்களே!

**வெங்கடேசய்யர்:** மருதமுத்து முண்டம் - மன்னார்சாமி தண்டம் - உலகம் முழுதும் பலப்பல நாடுகளில் - மூளை உழைப்புக்காரன் - உடல் உழைப்புக்காரன்னு இருக்கிறது உண்டா இல்லையா? இந்தியாவின் மூளை உழைப்பு பிராமணர்களை மட்டும் ஏன் காழ்ப்புணர்ச்சியில் கரிச்சுக் கொட்ட றேள்? உங்களுக்கு மூளை வேலை செய்யாட்டா அதுக்கு பிராமணனைக் குத்தம் சொல்றது என்ன நியாயம்!

**வந்தவர்:** மூளை வேலை செய்யாட்டா என்ன அய்யரே! கை வேலை செய்யுதுல்லே! ஆளுக்கு ஒரு கோடாலியைத் தூக்கினா — மூளை வேலை எல்லாம் காலியாயிடும். மூவாயிரம் ஆண்டு கிழட்டு மூளைகள் வேலை செய்த இடத்தில் — தாழ்த்தப்பட்டவர் பழங்குடியினர் என்று முதல் தலைமுறை மூளை — சிறப்பாக இயங்குமே!

**மருதமுத்து:** அமைதி. அமைதி. வன்முறை பேச்சு வேண்டாம். நியாயமாகப் பேசியே தீர்ப்போம். நீர் சொல்றது மாதிரியே மூளை வேலைக்கு ஆள் வேணுமின்னு வைப்போம். அந்த ஆட்களை பிறவி அடிப்படையில் — ஒரு சாதி மட்டும் மூளை உழைப்புக்குன்னு ஆக்குகிறது என்ன நியாயம்?

**வெங்கடேசய்யர்:** எங்கய்யா - பிறவி அடிப் படை? செட்டியாரும் - முதலியாரும் கூடத்தான் அரசு அதிகாரியா இருக்கான். அமெரிக்காவில் கம்ப்யூட்டரில் வேலை செய்ய - இந்தியாவின் பள்ளு - பறை - பதினெட்டு சாதியும் தான் போயிருக்கு.

**மன்னார்சாமி:** எங்க சாதிக்காரன் யாரும் அமெரிக்காவில் இருக்கிறதா தெரியலீங்க.

**மருதமுத்து:** அங்கேயும் அதிகமா - அய்யர் அய்யங்கார்தான் - மன்னார்சாமி. அதாவது பொய் திருட்டுத் தொழிலில் மூவாயிரம் ஆண்டு அனுபவஸ்தர்களான பிராமணர்கள் - உலகின் புதிய பொய் திருட்டு அரசாங்கமான - அமெரிக்காவுக்கு உதவப் போயிருக்கிறார்கள். முன்னொரு காலத்தில் - அமெரிக்க முக்கிய பதவிகளில் உலகப் பொய்யர் களான யூதர்கள் இருந்தார்களாம். இப்ப - இந்திய பிராமணர்கள் அந்த இடத்தைப் பிடிக்கிறார்கள்.

**மன்னார்சாமி:** அப்படி என்ன சாமி - அய்யருக்கும், அமெரிக்காவுக்கும் பந்தம்?

**வெங்கடேசய்யர்:** நல்லா கேளு. அமெரிக்கன் நேக்கு அத்திம்பேர். அதான் என் பிள்ளைக்கும் பெண்ணுக்கும் மட்டும் வேலை கொடுக்கிறான். மந்த புத்தி மருதமுத்துங்கறது சரியாத்தான் இருக்கு.

**வந்தவர்:** உட்கார்ந்திருக்கிறது அடையாறு ஆலமரத் தடின்னாலும் — ஆதரிக்கிறது

படிப்பகம்

www.padippakam.com



அமெரிக்காவை! கில்லாடி சார், நீ. ராக்பெல்லர் கூட சம்பந்தம் போடற மாதிரி - சாவி - வாஷிங்டனில் திருமணம் எழுதின காலந்தொட்டு பாத்துக்கிட்டுதான் வர்றேன். வசதி - வாய்ப்பு - உடம்பு நலுங்கா வாழ்க்கைன்னா - பார்ப்பனக் கும்பலுக்கு மூக்கில் வேர்த்து விடுகிறதே. இதோ ஒரு தமிழ்நாட்டுப் பாப்பாத்தி- சல்மான் ரஷ்டிக்கு ஒன்பதாவது பெண்டாட்டியா இருக்கி றேன்னு பொயிட்டாளே!

**வெங்கடேசய்யர்:** (வேறு பக்கம் திரும்பி) நீயும் ஒரு புடவையைக் கட்டிண்டு சல்மான் ரஷ்டிக்கு முன்னாலே போய் ஆடேன். ஆம்பள செக்ஸ் கூட அவாளுக்குப் பிடிக்குமாமே!

**மருதமுத்து:** அய்யரே புலம்பாதீர். இந்தப் பக்கம் திரும்பி நான் கேட்குறதுக்குப் பதில் சொல்லும். ஆப்கானிஸ்தானில் - வியட்நாமில் - குவயித்தில் - யார் அரசாட்சி செய்யணுமின்னு அமெரிக்காகாரன் முடிவு பண்றான். காஷ்மீரில் - கன்யாகுமரியில் - பரோடாவில் - தேஜ்பூரில் - சூத்திரனுக்கு, பஞ்சமனுக்கு என்ன வேலைன்னு - இந்திய பிராமணர்கள் முடிவு செய்கிறார்கள். உங்கப் புத்தியும் அமெரிக்கன் புத்தியும் ஒரே மாதிரி இருக்கா, இல்லையா?

**வந்தவர்:** ஏங்க சுத்தி வளைக்கிறீங்க? உலகம்கிற கிராமத்தில் இன்னிக்கு அமெரிக்கா தான் அக்கிரகாரம்; அய்ரோப்பாதான் - டாகுர், ரெட்டி, வெள்ளாள முதலித் தெரு; அரேபிய நாடுகள் சூத்திரர்கள்; இந்தியா - பாகிஸ்தான் - பங்களாதேஷ் எல்லாம் பஞ்சமர்கள். உலகத்துக் குக் குப்பை அள்ற வேலை தானே - இந்த மூன்றாம் உலக நாட்டு மக்களுக்குக் கிடைக்குது? இனம் - இனத்தோட; எச்சல் இலை நாயோட! அதான் பிராமணர்கள் - புதிய அக்கிரகாரம் புது டெல்லிக்கும் - உலக அக்கிரகாரம் அமெரிக்கா வுக்கும் ஓடுகிறார்கள்.

**மன்னார்சாமி:** எல்லா பிராமணரும் அப்படி ஓடி ஒழிஞ்ச பிறகாவது - இந்த நாடு உருப்படுமா சாமி? அதில் நாங்க மனிதர்களா வாழ முடியுமா சாமி?

**வெங்கடேசய்யர்:** டெல்லியில் சுல்தான் மாறினாலும் - சக்கிலிக்கை செருப்பு மாறாதுங் கறது சாதிகளை நிலைநாட்டும் நவீன கிருஷ்ண பரமாத்மா தானே - அமெரிக்கா அய்யர் - அமெரிக்கா - பாய் - பாய்ன்னு நாங்க அலையறது இப்பவாவது புரியுதா?

**மன்னார்சாமி:** (ஒரு செருப்பைக் கையில் உயர்த்திப் பிடித்தபடி சாலையில் பாய்ந்து) ஏ அமெரிக்க நாயே! நீயும் கிருஷ்ண பரமாத்மாவா? அப்ப உன்னைத்தான் முதலில் கொல்லணும்! (பீதியில் வெங்கடேசய்யர் ஆலமரத்துக்குப் பின்னால் பதுங்குகிறார்)

## பொழிலன், முகிலன் உள்ளிட்ட ஐவர்க்குச் சிறை

உதகைப் பூங்கா குண்டுவெடிப்பு வழக்கில் பொழிலன், முகிலன் உள்ளிட்ட ஐந்து தோழர்களுக்குக் கோவை ஒருங்கிணைந்த கூடுதல் நீதிமன்றம் ஏழாண்டுக் காலச் சிறைத் தண்டனை வழங்கிக் கோவைச் சிறையில் அடைத்துள்ளது. தமிழின உணர்வாளர்கள் மீது பொய் வழக்குப் போட்டுத் தமிழ்த் தேசிய எழுச்சியைத் தடுக்க எண்ணும் தமிழக அரசு உடனடியாக இதில் தலையிட்டுச் சிறைபடுத்தப்பட்டுள்ள தோழர்களை விடுதலை செய்யக் கோருகிறோம்.

## தந்தை பெரியார் தமிழிசை மன்றம் பத்தாம் ஆண்டு இசைவிழா

கடந்த பிப்பிரவரி 7,8,9 ஆகிய நாள்களில் சென்னை, தியாகராயர் நகர், பிட்டி தியாகராயர் அரங்கில் தந்தை பெரியார் தமிழிசை மன்றத்தின் சார்பில் பத்தாம் ஆண்டு இசைவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. கலைஞர். கருணாநிதி முதல் நாள் நிகழ்ச்சியில் பங்கேற்று இசைவிழாவைத் தொடங்கி வைத்தார். மூன்று நாள் நிகழ்விலும் முனைவர் தமிழண்ணல், பழநெடுமாறன், சிலம்பொலி செல்லப்பன், க.ப.அறவாணன், ஆனூர் செகதீசன், இரா. நல்லக்கண்ணு, அருகோ, நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகத்ரட்சகன் உள்ளிட்டோரும், இசையறிஞர்களும் பங்கேற்றனர். மன்றத்தின் நிறுவனரும் தலைவருமான நா. அருணாசலம் எல்லா ஏற்பாடுகளையும் சிறப்பாகச் செய்திருந்தார்.

---

**நூல் மதிப்புரை:**

## தமிழ் கற்பிக்கும் முறை

எந்த ஒரு செய்தியிலும் நேரிடையாக அதில் பயிற்சி பெறுதலும் ஈடுபாடு கொள்ளலும், தொடர்ந்து அதே பணியைச் செய்தலும் ஒருவர்க்கு அச் செய்தியில் நல்ல தகுதியை உண்டாக்கும்.

ஆசிரியர் பணி, வெளியாகும் ஏடுகளைத் தொகுக்கும் பணி, ஓவிய வடிவில் பாடவரிசைகளை அளிக்கும் பணி இவற்றில் அளவு கடந்த ஈடுபாடு கொண்டவர், பொள்ளாச்சி நசன் என்னும் தமிழ்க்கனல்.

இவர் தமிழ் கற்பிக்கும் முறை பற்றி எழுதியுள்ள 16 பக்க நூல் ஒரு சிறந்த தமிழ்ப் பயிற்சிக் கையேடு ஆகும். தமிழர் அல்லாதார்க்குத் தமிழ் கற்பிக்க ஏற்ற நூல், இது.

தொடர்புக்கு:

**தமிழ்க்கனல்**

1, சம்பத் நகர், சூளேசுவரன் பட்டி,

பொள்ளாச்சி 642 006.

படிப்பகம்

www.padippakam.com



## நூல் மதிப்புரை

தலித்தியமும் உலக முதலாளியமும்
ஆசிரியர்: எஸ்.வி. இராஜதுரை
வெளியீடு: விடியல் பதிப்பகம்
11, பெரியார் நகர், மசக்காளி பாளையம் (வடக்கு)
கோவை - 641 015 பக். 96, விலை உரு.30

'உலக மயமாதல்', 'தாராளமயமாதல்', 'கட்டுப்பாடற்ற சந்தை' என்கின்ற பெயர்களால் குறிக்கப்படும் புதிய பொருளாதாரக் கொள்கை இந்தியாவில் 1990 முதல் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் விளைவாக, தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்களின் சமூக, பொருளாதார நிலைகளில் முன்பு இருந்த இயலாமைகளும், சிக்கல்களும், துன்பங்களும் மேலும் அதிகரித்துள்ளது பற்றியும், இவற்றைத் தலித் மக்கள் எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என்பது பற்றியும் மார்க்சிய—பெரியாரிய நோக்கில் இந்நூலில் எஸ்.வி. இராஜதுரை ஆய்வு செய்துள்ளார்.

கடந்த இரண்டாயிரமாண்டுகளுக்கு மேலாக, வருணாசிரம தர்மம், தீண்டாமை ஆகியவற்றின் பெயரால், தாழ்த்தப்பட்ட மக்களுக்குஅனைத்து மானுட உரிமைகளும் மறுக்கப்பட்டன. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் தான் தாழ்த்தப்பட்ட மக்கள் தங்கள் அடிமைத் தளையிலிருந்து விடுபடுவதற்கான வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டன.

அண்ணல் அம்பேத்கரின் சீரிய முயற்சியால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசியலில் இட ஒதுக்கீடு, அரசுப்பணிகளில் இடஒதுக்கீடு வழங்கப் பட்டது. இந்தியா சுதந்திரம் பெற்று 54 ஆண்டுகளாகி யும் எழுத்தறிவற்றவர்களாக உடைமையற்றவர் களாக, கொடிய வறுமையில் உழல்ப்வர்களாக இருப்போருள், தாழ்த்தப்பட்ட மக்களே பெரும் எண்ணிக்கையினராக இருக்கின்றனர் என்பது புள்ளி விவரங்களுடன் இந்நூலில் தரப்பட்டுள்ளது. இது தவிர தீண்டாமையின் கொடுமைகளுக்கும் தாக்குதல் களும் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் நிலையிலும் மாற்றம் ஏற்படவில்லை.

காலங்காலமாக, கல்வி, உடைமை, ஆட்சி அதிகாரம் முதலானவை பார்ப்பனர், சத்திரியர், வைசியர் ஆகியோரிடம் இருந்தது போலவே- சனநாயக - நாடாளுமன்ற ஆட்சியிலும் இவர்களிடமே இவை இருக்கின்றன. இதனால் தான் தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களும், சூத்திரர்களில் கீழ்நிலைச் சாதியினருள் பெரும்பாலோரும் வெறும் உடலுழைப்பாளிகளாக மட்டுமே இருக்கின்றனர் என்ற ஏஸ்.வி.ஆர் விளக்கியுள்ளார்.

நாடாளுமன்ற சனநாயகத்தின் ஆணிவேர் மக்கள் நல அரசாக இருக்க வேண்டும் என்பதாகும். ஆனால் உலக முதலாளியம் மக்களுக்குக் கல்வி, உணவு மருத்துவம், போக்குவரத்து, உறைவிடம் ஆகியவற்றை அளிப்பதற்காக அரசு செலவு செய்யக் கூடாது என்று தடுக்கிறது. இது தாழ்த்தப்பட்ட மக்களையும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களையும் பெரிதும் பாதித்து வருகின்றது. 'உலக மயமாக்கல்' என்ற சொல்லாடலின் உண்மைப் பொருள் ஏகாதிபத்தியச் சுரண்டல், பன்னாட்டு மூலதனச் சுரண்டல், உள் நாட்டுக் கொள்ளையர்கள் ஆதிக்கம் என்பதை எளிதில் எவரும் புரிந்து கொள்ளும்படி ஆசிரியர் விளக்கியுள்ளார்.

உள்நாட்டு முதலாளியம், உலக முதலாளியம் ஆகியவற்றின் கொடுந் தாக்குதலை சோசலிச சனநாயகப் புரட்சி மூலமே எதிர்க்க முடியும். அம்பேத்கரின் 'அரசு சோசலிசக்' கோட்பாட்டை மேலும் செழுமைப்படுத்தி, தலித் மக்கள், தங்களைப் போலவே உடலுழைப்பாளிகளாக உள்ள சூத்திரச் சாதியினருடன் இணைந்து போராட வேண்டும் என்பதைத் தீர்வாக முன்மொழிந்துள்ளார். மார்க்சியர்கள், பெரியாரியலாளர்கள், அம்பேத்கரிய அறிஞர்கள் தலித் படிப்பாளிகள் கட்டாயம் படிக்க வேண்டிய நூல் இது!

- க.முகிலன்.

## ஓவியர் புகழேந்தியின் 'பெரியார் - பன்முகத் தோற்றம்' ஓவியக்கண்காட்சி



ஓவியத்தைச் சமூக மாற்றத்திற்கான புரட்சிகர கலை வடிவமாகக் கையாண்டு வரும் எழுச்சிக் கலைஞர் கு. புகழேந்தி தந்தை பெரியாரின் பல்வேறு முக வடிவங்களை ஓவியமாக்கி யுள்ளார். பெரியாரின் அந்தப் பன்முகத் தோற்ற ஓவியக் கண்காட்சி 'திசை முகம்' என்னும் பெயரில் 12.2.02 முதல் 16.2.02 முடிய சென்னை தியாகராய நகர், தியாகராயர் நகர மேனிலைப் பள்ளியில் இடம் பெற்றிருந்தது. நாள்தோறும் நூற்றுக்கணக் கானோர் அந்தக் கண்காட்சியில் இடம் பெற்றிருந்த பெரியார் ஓவியங்களைப் பார்த்துப் பாராட்டிச் சென்றனர். அதன் நிறைவு விழா 16.02.02 மாலை கவிஞர் அப்துல்ரகுமான் தலைமையில் நடைபெற்றது. பெ.மணியரசன், காசிஆனந்தன், கொளத்தூர் மணி, தியாகு, வீரசந்தானம், ச. செந்தில்நாதன், சி. மகேந்திரன் கவிஞர் இன்குலாப், பேராசிரியர் சரசுவதி உள்ளிட்டோர் விழாவில் உரையாற்றிச் சிறப்பித்தனர். ஓவியர் புகழேந்தி ஏற்புரை நிகழ்த்தினார்.

www.padippakam.com





## கண்ணகிசிலையைஅதேஇடத்தில்நிறுவக் கோரி தமிழர் எழுச்சிப் பயணம்

தமிழக அரசு அகற்றியுள்ள கண்ணகி சிலையை மீண்டும் அதே இடத்தில் நிறுவக் கோரி பிப்பிரவரி 5ஆம் நாள் காலை பூம்புகார் கடற்கரையிலிருந்து தோழர். பெ. மணியரசன் தலைமையில் 'தமிழர் எழுச்சிப் பயணம்' தொடங்கியது. சீர்காழி, மயிலாடு துறை, தஞ்சை, திருச்சி, கீரனூர், சித்தன்னவாசல், புதுக் கோட்டை, திருமயம், மேலூர் வழியாக எழுச்சிப் பயணம் பிப்பிரவரி 9ஆம் தேதி மதுரை யை அடைந்தது. இப்பய ணத் தில் தோழர் தியாகு, புலவர் கி.த. பச்சையன், மா.செ. தமிழ் மணி, புலவர் குமர. தன்னொ ளியன், பேராசிரியர் து. திரு நாவுக்கரசு உள்ளிட்டோரும் ஏராளமான தமிழ் உணர் வாளர்களும் பங்கேற்றனர். தமிழ்த் தேசப் பொது வுடைமைக் கட்சி, தமிழ் — தமிழர் இயக்கம், உலகத் தமிழின முன்னேற்றக் கழகம், தமிழ் உரிமைக் கூட்டமைப்பு ஆகிய இயக்கங்கள் சேர்ந்து இந்த எழுச்சிப் பயணத்திற்குத் திட்டமிட்டுச் செயற்படுத்தின. பயணத்தின் வழி எங்கும் ஆயிரக்கணக்கான தமிழ்மக்கள் பெருந்திரளாக நின்று வரவேற்று எழுச்சி சேர்த்தனர்.

## கண்ணகி சிலுவையை நிறுவுக! பெங்களூர்த் தமிழ்ச் சங்கம் தமிழக அரசுக்கு வேண்டுகோள்!

''கொற்றவன் புரிந்திருந்தாலும் குற்றம் குற்றமே'', என்று மன்னரவையில், துணிந்து வழக்காடிய கண்ணகியின் சிலையைத் தமிழக அரசு அகற்றியுள்ளது. தமிழ் கூறு நல்லுலகத்தின், 'நெஞ்சில் பாய்ந்த வேலாக' இச்செயல் அமைந்துள்ளது.

சிலை அகற்றப்பட்டவுடனேயே, மிகுந்த முடுக்கத்துடன், அவ்விடத்தில் சாலை அமைக்கப் பட்டிருக்கும் செயல், அரசின் முடிவில் உள்நோக்கம் இருக்குமோ எனும் அய்யத்தினை விளைவிப்பதாக உள்ளது.

இச்சிக்கலை, அரசியல் வண்ணம் பூசாது, தமிழ்ச் சான்றோர்களின் வேண்டுகோளுக்கும் தமிழ் மக்களின் விருப்பத்துக்கும் மதிப்பளித்துக் கண்ணகி சிலையை, அச்சிலை இருந்த இடத்திலேயே மீண்டும் நிறுவிடத் தமிழக அரசு முன்வர வேண்டுமென்று பெங்களூர்த் தமிழ்ச் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

## "காவியக் கண்ணகி!"

தேனான இன்பச் சிலப்பதிகாரம்
திராவிடர்க்கினிய சிறப்பதிகாரம்
வீணான சிலரின் வெறுமதிகாரம்
விழுந்ததே கண்ணகி சிலை கடலோரம்

கூனான குறுமதியாளர் கூட்டம்
கொடுமைசெய்து ஆடும் ஆட்டம்
ஈனமனப் போக்கென்று காட்டும்
இனிவரும் இளங்கோவின் பாட்டும்

காலத்தால் அழியாக் காவியக்கண்ணகி
கற்சிலை உடைந்தால் மறைவாளா அக்கண்ணகி
உடைப்பவர் மறைவர், உண்மையை எண்ணுநீ!
உடனடியாய்க் கண்ணகி சிலையைப் பண்ணுநீ!

சீ. கருணாநிதி
அல்லிநகரம்

www.padippakam.com



## ஆசிரியருக்கு மடல்...

மதிப்பிற்குரிய அய்யா அவர்களுக்கு

வணக்கம். 10.02.2002-ல் ஆங்கில நாளிதழான இந்துவில் ஆர்.எஸ்.எஸ்-ஸைப் பற்றி ஒரு கட்டுரை வெளிவந்தது. அதைப் படித்ததும் அதிர்ச்சி அடைந்தேன். அதைத் தங்கள் மேலான பார்வைக்குச் சுருக்கமாக எழுதுகிறேன்.

ஆர் எஸ் எஸ்-ன் பலம்:

அறிவுப் பயிற்சி விதையான கல்வியில் ஆர் எஸ் எஸ் நஞ்சை ஊற்றி வளர்த்துக் கொண்டிருக்கிறது. தன்னால் பயிற்சி அளிக்கப்பட்ட சுமார் 70 ஆயிரம் ஆசிரியர்களைக் கொண்டு, 19741 - பள்ளிகளின் மூலம், 24 இலட்சம் மாணவர்களுக்குத் தன் நஞ்சைத் திணிக்கிறது. இதில் அந்த இயக்கம் வெற்றி பெற்றுள்ளது என்று கூறலாம் காரணம் 1952-ல் முதல் பள்ளி தொடங்கி, இன்று 50 ஆண்டுக்குள் 19741 பள்ளிகளாக வளர்ந்துள்ளது. அதுவும் 1998-ல் 13,000 ஆயிரமாக இருந்த இப்பள்ளிகள் இரண்டாம் புஷ்யமித்திரன் வாஜ்பாய் ஆட்சிக்கு வந்ததில் இப்படி வளர்ந்துள்ளது. இது எச்சரிக்கை மணி, மனித நேய ஆர்வலர்க்கு! இதைத் தடுக்க மக்களைத் திரட்டும் பணியில் உறுதியுடன்,

ஆ. கலையரசன், சென்னக்குணம்.

### தீச்செயலுக்குப் பரிகாரமா? பாப விமோசனமா?

பொங்கல் கலை விழா 2002ல் நினைவுப் பரிசாக வழங்கப்பட்ட திரைச்சீலையின் வடிவை இன்றைய 'தினமணி'யில் கண்டு பெரு மகிழ்வெய்தினேன்.

கண்ணகி சிலையை அகற்றியது மட்டுமின்றி, தலையாய காப்பியமாம் சிலப்பதிகாரத்தையே கொச்சைப்படுத்தி அவதூறு பரப்பும் கட்சியின் ஆளுகைக்குட்பட்ட, கலை பண்பாட்டுத்துறை வழங்கிய திரைச்சீலையில் தமிழ் மணக்கக் கண்டு வியந்தேன்!

தமிழ்ச் சான்றோர் பேரவையோ, தமிழகப் புலவர் குழுவோ வெளியிட்ட திரைச்சீலையோ எனக் கருதத் தூண்டியது.

தமிழுக்கும் தமிழுணர்வுக்கும் இழைத்த தீங்குகளுக்கு இதுவே பரிகாரமாக அமைவதுடன் தொடர்ந்து இப்பண்பு தழைக்கட்டும் என வாழ்த்துவோம்! அன்பார்ந்த,

தி. சோமசுந்தரத்தேவர்
ஆசிரியர், 'கள்ளர் இனமுரசு'

### தகுதியான ஒருவரைப் பற்றி...

அன்பார்ந்த அய்யா, வணக்கம்.

பல்லடம் மாணிக்கம் பற்றி வெளியிட்ட கட்டுரை மிகவும் பயனுடையது. தகுதியான ஒருவரைப் பற்றித் தகுந்த முறையில் தவறாமல் எழுதியிருக்கும் தில்லைவனம் பாராட்டுதற்குரியவர்.

அவரைப் போன்ற பிறரையும் சிந்தனையாளன் அறிமுகஞ் செய்வது நல்லது.

'அறிவியல் தமிழின்தேவை' 'அறிவியல் தமிழின்' வரலாறாகவே தொடர்கிறது. வெல்க!

க. தமிழமல்லன்
தலைவர், தனித்தமிழ் இயக்கம். புதுச்சேரி-9

அன்புசால் அய்யா அவர்களுக்கு,

'சிந்தனையாளன்' வந்தவுடன் நான் மட்டுமல்ல, எங்கள் வீட்டில் அனைவரும் ஆவலுடன் படிப்பது கவிஞர் தமிழேந்தி அவர்களின் கடைசிப் பக்கக் கவிதையைத்தான். நல்ல தமிழில் எதுகை, மோனையுடன் எளிமையாகத் தருகிறார்.

நான்கைந்து இதழ்களாக இல்லாதிருந்த வீரமணி வசை புராணம் இந்த இதழில் — பிப்பிரவரி 2002 இதழில் மீண்டும் வந்து விட்டது.

புராண எதிர்ப்பாளரான கவிஞர் அவர்கள் இந்த வசை புராணத்தை என்றுதான் நிறுத்துவாரோ?

அன்பன்,
மன்னைநேசன், ஊரப்பாக்கம்

### தஞ்சையை உலுக்கிய தமிழ் மக்கள் இசைவிழா

பார்ப்பனியப் பண்பாட்டு ஆக்கிரமிப்புக்கு எதிரான போர் முழக்கமாக, மக்கள் கலை இலக்கியக் கழகம் 9.2.02 அன்று தஞ்சை திருவள்ளுவர் திடலில் தனது 10ஆம் ஆண்டு தமிழ் மக்கள் இசை விழாவை மிகச் சிறப்பாக நடத்திற்று. பகற்பொழுது முழுவதும், தமிழிசை மரபுதான் எல்லா வகை இசைக்கும் அடிப்படை என்பதை விளக்கும் சிறப்பான கருத்தரங்கம் தோழர் காளியப்பன் தலைமையில் நடைபெற்றது. தோழர் மருதய்யன் முதன்மை உரையாற்றினார். இசையறிஞர்கள் பலரும் கருத்தரங்கில் உரையாற்றினர். மாலையில் தப்பாட்டம், ஒயிலாட்டம், நையாண்டிமேளம் உள்ளிட்ட நாட்டுப்புறக் கலை வடிவங்களும், பாரதிதாசன் பாடல்கள், நெல்லை அதியமான் திரவியத்தம்மாள் குழுவினரின் 'பெரியார் சமூகத் தொண்டு' வில்லிசை போன்றனவும் சிறப்பாக இடம் பெற்றன. தமிழகம் முழுவதிலும் இருந்தும் பல்லாயிரக்கணக்கான தோழர்கள் விழாவில் பங்கேற்றனர்.

படிப்பகம்

www.padippakam.com



## சலவைத் தொழில் சமுதாயத்தினர் கட்டிய "திருக்குறிப்புத் தொண்டர் இல்லம்": கேரள அரசின் பிற்படுத்தப்பட்டோர் - தாழ்த்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் டாக்டர் எம்.ஏ. குட்டப்பன் திறந்து வைத்தார்



சலவைத் தொழில் செய்யும் சமுதாயத்தினரின் கல்வி, பொருளாதாரம், பண்பாட்டு முன்னேற்றத் துக்குத் தொண்டாற்றி வருகின்ற திருக்குறிப்புத் தொண்டர் பேரவை, சென்னை கொளத்தூர் வீனசு நகரில் ஒரு சமுதாயக் கூடத்தைக் கட்டி உள்ளது. இந்தக் கட்டடத்தின் திறப்பு விழா தி.பி. 2033 தை 28ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (10.2.2002) முற்பகல் சென்னையில் நடைபெற்றது.

விழாவில் கேரள அரசின் பிற்படுத்தப் பட்டோர் தாழ்த்தப்பட்டோர் நலத்துறையின் அமைச்சர் டாக்டர் எம்.ஏ. குட்டப்பன், எம்.பி.பி.எசு., இந்தச் சமுதாயக் கூடத்தைத் திறந்து வைத்தார். நிகழ்ச்சிக்குத் திருக்குறிப்புத் தொண்டர் பேரவையின் தலைவர் மு. கிருட்டிணசாமி தலைமை ஏற்றார். பொதுச் செயலாளர் துரை. முனிசாமி வரவேற்புரை ஆற்றினார். பீகார் மாநில அரசின் எரிசக்தித்துறை அமைச்சர் சியாம்ரசக் குத்து விளக்கை ஏற்றி வைத்தார். சென்னை மாநகராட்சியின் துணை மேயர் கராத்தே தியாகராசன் நிகழ்ச்சிக்கு முன்னிலை வகித்தார். அமைப்புச் செயலாளர் மறைந்த கோ. நடராசனின் படத்தை பி. இராமன் திறந்து வைத்தார்.

தொழிலதிபர் ஏ.கணேசன், ஜெயின் குரு கமல் முனி கடலேசு, தியாகி வித்யாதர் குருஜி - முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கர்நாடகா, தவத்திரு சச்சிதானந்த சுவாமிகள் - கலவை, தியாகி வி.எம். முனிசாமி, சி.ஆர்.கோலப்பா, பெ. கோலப்பன், இ.ஆ.ப., எஸ். பாலகிருட்டிணன், பேராசிரியர் கூ. கருப்பன், ஒய்.எ. நாதன், வி.கே.டி. பாலன், திருமதி கண்ணம்மாள் கோவை, புதுதில்லி ஜகதீஸ் பிரசாத், பேராசிரியர் கா. குப்புசாமி, அகில இந்திய துப்புரவு வாரியத்தின் துணைத் தலைவர் மஞ்சு சந்திரா, சமுதாயத்தின் பிற மாநிலத் தலைவர்கள், அகில இந்தியத் தலைவர்கள், மாவட்டக் கிளைத் தலைவர்கள் ஆகியோர் விழாவில் உரையாற்றினர். மாநிலத்தின் பல பகுதிகளிலிருந்தும் சமுதாய முன்னேற்ற உணர்வுடன் பலர் விழாவுக்கு வந்து சிறப்பித்தனர். அனைவருக்கும் தொழில் அதிபர் ஏ. கணேசன் பகல் உணவு அளித்தார். பேரவையின் பொருளாளர் செ.து. சஞ்சீவி நன்றி உரை நிகழ்த்தினார்.

வந்திருந்தோர் பலரும் இந்தச் சாதனைக்குத் தலைமைப் பொறுப்பேற்றுச் சாதித்துக் காட்டிய தங்கள் தலைவர் மு. கிருட்டிணசாமிக்கு சால்வை அணிவித்து மகிழ்வித்து மகிழ்ந்தனர்.

**செய்தி: கலசம்**


★ பகுத்தறிவு
★ வகுப்புரிமை
★ தமிழியக்கம்
★ கூட்டுறவு
★ சமதர்மம்

ஆகிய கொள்கைகளின் அடிப்படையிலான செய்திகளை அறிய..

★ அறிஞர்களின் உரை படிக்க...

★ வேலை, கல்வி, பயிற்சிக்கான வாய்ப்புகளைத் தெரிந்து கொள்ள

வியாழன்தோறும்
வெளிவரும்
**மக்கள் நெஞ்சம்**
படியுங்கள்
ஆண்டுக் கட்டணம் ரூ.100
★
முகவரி:
புதுவாழ்வுப் பதிப்பகம் (பி) லிட்.,
அறை எண்.22, 2வது மாடி,
78(829), அண்ணாசாலை, சென்னை-600 002.
கலசம் தொலைபேசி:
(அலு.) 841 48 64, (இல்லம்) 04114 - 455373

www.padippakam.com



## திருச்சி து. வானமாமலை மறைவு



திருச்சி மாநகரில் திராவிட இயக்கத்தவர்களிடையே நட்புப் பாலமாக விளங்கியவர் தோழர் து. வானமாமலை ஆவார்.

அவர் திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவிலில் பிறந்தவர். தம் 14ஆம் வயதில் திருச்சிக்கு நகைக்கடை ஒன்றில் பணிபுரிய வந்தார். மத, மூட நம்பிக்கைகளில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்த அவர், பெரியாரின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு தி.க.வில் சேர்ந்து துடிப்புடன் பணியாற்றினார். தி.மு.க தோன்றியபோது அதில் சேர்ந்தார். திருச்சி சாம்புவின் நெருங்கிய நண்பரானார். அண்ணா, அன்பில், திராவிடப் பண்ணை முத்துக்கிருட்டிணன், பராங்குசம் மற்றும் தி.மு.க. முன்னணித் தலைவர்கள், நோபிள் கு.கோவிந்தராசலு, வே. ஆனைமுத்து ஆகிய எண்ணற்ற திராவிட இயக்கத் தோழர்களிடம் உளமார்ந்த நட்புப் பாராட்டிப் பழகினார்.

திருச்சியில் 1956இல் நடைபெற்ற தி.மு.க. மாநில மாநாட்டின் வெற்றிக்கு அயராது உழைத்தார். திருச்சி (பெரம்பலூர்) மாவட்டம் நாரணமங்கலத்தில் தி.மு.க. பொதுக்கூட்டம் போடத்தடை ஆணை போடப்பட்டது. 27.11.1950 அன்று வானமாமலை தலைமையில் 7 தோழர்கள் அந்தத் தடை ஆணையை மீறிப் பேசிக் கைதாகி 3 மாதம் சிறைத் தண்டனை பெற்றனர். இது தி.மு.க. வரலாற்றில் முத்திரை பதித்த முதலாவது போராட்ட நிகழ்ச்சியாகும். ஈ.வெ.கி. சம்பத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். திருமணம் செய்து கொள்ளாத வானமாமலை இயக்கப் பணிகளையே குடும்பப் பணிபோல் ஏற்றுக் கொண்டார். திராவிட இயக்கத்தில் வெவ்வேறு அமைப்புகளுக்குச் சென்றாலும் பெரியாரின் சுயமரியாதைக் கருத்துகளைத் தொய்வின்றிக் கடைபிடித்து வந்தார். தம் 87 ஆம் வயதில் 12.10.2001 அன்று மறைவுற்றார். வழக்குரைஞர் ச. அபேதானந்தம் இறுதிக்கடன் நிகழ்த்தினார். தோழர் து. வானமாமலை மறைவுக்கு மா.பெ.பொ.க.வின் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## தத்துவக் கவிஞர் குடியரசு

திராவிட இயக்கத்தின் தலைசிறந்த கவிஞர், எழுச்சி மிக்க பேச்சாளர், தந்தை பெரியாரின் கொள்கைகளில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட அருமைத் தோழர், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைப் பொதுச்செயலாளர் கவிஞர் குடியரசு அவர்கள் 12.2.2002 அன்று தம் 72 ஆம் அகவையில் மறைவுற்றார் என்பதை அறிந்து மிகவும் வருந்துகிறோம். கட்சி அரசியலைக் கடந்து எந்த மேடையில் இருந்தாலும் பார்ப்பனிய எதிர்ப்பு, சுயமரியாதை கொள்கையின் சிறப்பு, சாதியொழிப்பு, நாத்திகம், பொதுவுடைமை போன்ற கொள்கைகளை ஓங்கி முழக்கமிடும் உரத்த சிந்தனையாளர் அவர். பெரியார் பெரும்படையின் முன்னணித் தொண்டன் நான் என்று சொல்லிச் சொல்லிப் பெருமை கொள்பவர். அன்னாரின் மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## வேலூர் சே.ப. வெங்கடேசன் மறைவு

சிறந்த தமிழ் உணர்வாளரும், நேரிய பகுத்தறிவாளரும், ஓய்வு பெற்ற மின் வாரிய உதவிக் கணக்கு அலுவலரும் ஆகிய வேலூர் தோழர் சே.ப. வெங்கடேசன் 31.1.02 அன்று இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் அறிவிக்கிறோம். எழுபதுகளில் தொடங்கி வேலூர் நகரத்தில் மா.பெ.பொ.க வின் இயக்க வளர்ச்சிக்கு உற்ற துணையாக விளங்கியவர்; தோழர் ஆனைமுத்து அவர்களின் செயற்பாடுகளில் மிகுந்த நம்பிக்கையும் பற்றும் கொண்டவர். தம் மறைவுக்குப் பின் இரண்டு விழிகளையும் கொடையாக வழங்கிய மாந்த நேயச் சிந்தனையாளர். அன்னாரின் மறைவுக்கு மிகவும் வருந்துகிறோம். அவர் குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## பாவாணர் நூற்றாண்டு நிறைவு விழா

16.2.02 அன்று திருவண்ணாமலை டேனிசுமிசன் மேனிலைப் பள்ளியில் திருவருணைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் நூற்றாண்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. படத்திறப்பு, பாவரங்கம், கருத்தரங்கம், இசையரங்கம், நிறைவரங்கம் என நாள் முழுவதும் நடந்த நிகழ்ச்சிகளில் பழ.நெடுமாறன், முனைவர் இரா.இளவரசு, ப.அருளி, பேராசிரியர்கள் ஆ.கு. ஆல்துரை, க.நெடுஞ்செழியன், இரா. திருமுருகன், ம.இலெ.தங்கப்பா, கு. அரசேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர். திருவருணைத் தமிழ்ச் சங்க நிறுவனரும் செயலாளருமாகிய சா. அருள்வேந்தன் பாவைச் செல்வி அவர்களும் மற்ற தமிழ் உணர்வாளர்களும் விழாவிற்கான ஏற்பாடுகளைச் செம்மையாகச் செய்திருந்தனர்.

## சிந்தனைச்செம்மல்
## கு.ச. ஆனந்தன் படத்திறப்பு

கோபியில் 17.2.02 அன்று வழக்குரைஞர் கு.ச. ஆனந்தன் அவர்கள் படத்திறப்பு அன்னாரின் 'குறளியச் சிந்தனைகள்' நூல் வெளியீடு, தமிழறிஞர்கள் திருவுருப்படங்கள் திறப்பு ஆகிய நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன. குன்றக்குடி பொன்னம்பல அடிகள், முனைவர் இரா. இளவரசு, பேராசிரியர் க.நெடுஞ்செழியன் முதலியோர் பங்கேற்று நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர்.

படிப்பகம்

www.padippakam.com



## சீர்காழியில் மக்களின் போராட்டம் வெற்றி!

சீர்காழியில் உள்ள 'வாய்க்காங்கரைத் தெரு' என்பதை, அந்த வார்டு உறுப்பினரும், நகரவைத்துணைத் தலைவருமான பாலகுமாரன் என்பவர் தெருவில் வாழும் மக்களைக் கலக்காமலே, இரண்டு மார்வாடிகளே வாழும் தெருவின் பெயரைத் தனக்குத் தேர்தல் செலவுக்குப் பண உதவி செய்ததற்கு நன்றிக் கடனாக, 'மகாவீர் ஜெயின் தெரு' என்று மாற்று வதற்குத் தெருவாசிகள் சம்மதத்தோடு தீர்மானம் கொண்டு வந்துள்ளதாக நகரசபைக் கூட்டத்தில் தெரிவித்து, மற்ற உறுப்பினர்களையும் நகரசபைத் தலைவர் கனிவண்ணன் அவர்களையும் நயவஞ்சகமாக நம்ப வைத்துப், பெயர் மாற்றம் செய்து, அரசுக்கு அனுப்பச் செய்துவிட்டார்; பெயர்ப் பலகையையும் வைத்துவிட்டார். அதன் பின்புதான் தெரு வாசிகளுக்கே உண்மை தெரிந்தது.

அத்தெருவில் உள்ள இளைஞர்கள் தெரு மக்களைக் கூட்டிப் பேசி, ஊரில் உள்ள மற்ற இளைஞர்களையும் அனைத்துக் கட்சியினரையும் கலந்து பேசி, நகரவைக்குப் போராட்ட அறிவிப்புக் கொடுத்துப் போராடி, நகரவைத் தலைவரையும், நகராட்சி அதிகாரிகள், நகர் மன்ற உறுப்பினர்கள் அனைவரையும் சந்தித்துப் பேசி, பழைய 'வாய்க்காங் கரைத் தெரு' என்ற பெயரே நீடித்து இருக்க ஆவன செய்யக் கேட்டுக் கொண்டனர்.

நிலைமையை உணர்ந்த நகர்மன்றத் தலைவர், உறுப்பினர்கள் ஆகியோர் அதிகாரிகளைச் சந்தித்து, தவறு நடந்து விட்டது- பழைய பெயர் நிலைக்க மாற்றுத் தீர்மானம் கொண்டு வருகிறோம் என்று கூறி, அதன்படி 28-01-02ஆம் தேதி தீர்மானம் கொண்டு வந்து ஏகமனதாக நிறைவேற்றி அரசுக்கும் நகர் மன்றம் மூலம் தெரிவித்து விட்டார்கள். இது அத்தெரு வாசிகளுக்கும் - நகர இளைஞர்களுக்கும் கிடைத்த பெருவெற்றியாகும்.

செய்தி: மா. முத்துச்சாமி

## திருச்சியில், தமிழர் தேசிய இயக்கச் சிறப்பு மாநாடு

10.2.02 அன்று திருச்சி, சிந்தாமணி தேசியக் கல்லூரி மேனிலைப் பள்ளித் திடலில் தமிழர் தேசிய இயக்கத்தின் சிறப்பு மாநாடு சிறப்பாக நடைபெற்றது. இயக்கத்தின் கொடியை எம்.கே.டி. சுப்பிரமணியன் ஏற்றி வைக்க, பேராசிரியர் சுப.வீ தொடக்கவுரை யாற்றினார். துரை. மதிவாணன் தலைமையில் கருத்தரங்கம், கவிஞர் அறிவுமதி தலைமையில் கவியரங்கம், தேனிசை செல்லப்பா குழுவினர் பங்கேற்ற இசையரங்கம் ஆகியவற்றைத் தொடர்ந்து, மாலையில் நிறைவரங்கில் தமிழினப் போராளிகள் எண்மருக்குத் 'தமிழ்த் தேசியச் செம்மல்' விருதுகள் வழங்கப்பட்டன. பழ. நெடுமாறன் நிறைவுரை யாற்றினார்.

## தமிழகத் தமிழாசிரியர் கழக முப்பெரும் விழா

திண்டுக்கல் வட்டத் தமிழகத் தமிழாசிரியர் கழக 40 ஆண்டுவிழா புலவர் சோ. மரியமைக்கேல் அவர்களுக்குப் பாராட்டு விழா, கலை இலக்கியப் போட்டிகளில் சிறப்பிடம் பெற்ற மாணவ மாணவியர்க்குப் பரிசளிப்பு விழா ஆகியன 26.1.02 அன்று திண்டுக்கல் ஆர்.கே.ஜி. கங்காதரன் மன்றத்தில் சிறப்பாக நடைபெற்றன.

## குறள் நெறி போற்றும் விழா

இளங்கதிர் இலக்கிய மன்றத்தின் சார்பில் 16.2.02 அடையாறு ஆண்டாள் திருமண மண்டபத்தில் குறள்நெறி போற்றும் விழா சிறப்புடன் நடைபெற்றது. பேராசிரியர் தி.வ. மெய்கண்டார் தலைமையில் முனைவர் பொற்கோ சிறப்புரையாற்றினார். முகம்மாமணி, வெள்ளையாம் பட்டு சுந்தரம், முனைவர் இளமாறன் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்தனர்.

## தமிழர் திருநாள் கருத்தரங்கம், வழக்காடுமன்றம்

கோவை, உப்பிலிப்பாளையம் கண்ணபிரான் திருமண மண்டபத்தில் 27.01.02 அன்று திருவள்ளுவர் பேரவை சார்பில் பேராசிரியர் கு.வெ.கி. ஆசான் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் சங்கமித்ரா, புலவர் கா.ச. அப்பாவு, பேராசிரியர் கனல்மைந்தன் ஆகியோர் பங்கேற்றனர். 'தமிழ் வாழ்க என முழங்கித் தாம் வாழ வழிகண்ட அரசியலாளர் தமிழினப் பகைவர்' எனும் பொருளில் புலவர் ஆதி தலைமையில் நடைபெற்ற வழக்காடு மன்றத்தில் வழக்கறிஞர் மணிமாறன், செந்தலை. ந. கவுதமன் ஆகியோர் வழக்கைத் தொடுத்தும் மறுத்தும் வாதிட்டனர்.

அழகிய அச்சுப்பணிகளுக்கு அணுகுவீர்
அன்றில் அச்சுக்கூடம்,
55(25), சி.என்.கே. சாலை, சேப்பாக்கம், சென்னை - 600 005. ✆ : 8518258
செல்லிடப் பேசி: 98410-16232

தரமான நூல்கள் வெளியீடு
தூய தமிழ் பரப்பும் பணிக்கு
அன்றில் பதிப்பகம்
55(25), சி.என்.கே. சாலை, சேப்பாக்கம், சென்னை - 5
✆ : 8518258

'தமிழர் சுற்றம்' சார்பாக
தொல்காப்பிய வகுப்பு
வியாழன் தோறும் மாலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை நடைபெறுகிறது.
இடம்: 55(25), சி.என்.கே. சாலை, சேப்பாக்கம்
சென்னை - 600 005. ☎ 8518258

படிப்பகம்

www.padippakam.com



## மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் பொதுக்குழு உறுப்பினர்கள்; பெரியார் ஈ.வெ.இராமசாமி - நாகம்மை கல்வி மற்றும் ஆராய்ச்சி அறக்கட்டளையின் அறங்காவலர் குழு, ஆலோசனைக் குழு உறுப்பினர்கள்

# முதன்மையான ஆய்வுக் கூட்ட அழைப்பிதழ்

அன்புசால் தோழரீ, வணக்கம்.

மேற்படி ஆய்வுக் கூட்டம், சென்னையில், திருவல்லிக்கேணி நீலி வீராசாமி தெரு, எண்.4 இல் உள்ள அரசு அலுவலர் சங்கக் கூட்ட அரங்கில், 24.3.2002 ஞாயிறு காலை 9 மணி முதல் 1 மணி வரையிலும்; பிற்பகல் 3 மணி முதல் 7 மணி வரையிலும் நடைபெறும். இருவேளைகளிலும் எல்லோரும் பங்கேற்க வேண்டும்.

பின்வரும் பொருள்கள் பற்றிக் கலந்துரையாடி முடிவுகள் எடுக்கப்படும். அன்புகூர்ந்து இதனையே தனித்தனி அழைப்பாகக் கருதி, அனைவரும் தவறாமல் குறித்த நேரத்தில் வருகை தர வேண்டுகிறேன்.

## பொருள்கள்

1. சிந்தனையாளன் 2002 பொங்கல் மலர் மற்றும் மாநாட்டு வரவு - செலவுக் கணக்கு ஆய்தல்;

2. 2002 ஏப்ரல், மே, சூன், மாதங்களில் மாவட்ட வாரியாகப் பயிற்சி வகுப்புகள், மற்றும் பவழ விழாக் கூட்டங்கள் நடத்துதல்;

3. தமிழ்நாட்டின் மய்யமான ஓர் இடத்தில் 'சுய மரியாதை இயக்கப் பவழ விழா நிறைவு மாநாடு'; 'மா.பெ.பொ.க. வெள்ளிவிழா நிறைவு மாநாடு' ; 'சிந்தனையாளன்' வெள்ளி விழா மாநாடு' நடத்திடுவது பற்றி முடிவெடுத்தல்;

4. பெரியார் ஈ.வெ.இராமசாமி - நாகம்மை கல்வி மற்றும் ஆராய்ச்சி அறக்கட்டளை மேற்கொள்ள விருக்கும் இலவசக் கல்விப் பயிற்சி வகுப்புகள் பற்றிக் கலந்து பேசி, உரிய திட்டங்களை வகுத்தல்.

5. மற்றும் மா.பெ.பொ.க., பெரியார் ஈ.வெ.இராமசாமி - நாகம்மை கல்வி மற்றும் ஆராய்ச்சி அறக்கட்டளை உறுப்பினர்கள் முன் வைக்கும் பொருள்களை ஆய்ந்து முடிவெடுத்தல்.

இதுவே அழைப்பிதழ். உறுப்பினர் அனைவரும் கட்டாயக் கடமையாகக் கருதி வாருங்கள்!

நன்றி.

**வே. ஆனைமுத்து**
அமைப்புச் செயலர், மா.பெ.பொ.க.
தலைவர், பெரியார் ஈ.வெ.இராமசாமி - நாகம்மை கல்வி மற்றும் ஆராய்ச்சி அறக்கட்டளை

படிப்பகம்

www.padippakam.com



# வாழ்க்கை ஒப்பந்த விழாக்கள்

## செந்தமிழன் - காந்திமதி

தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் பொதுச் செயலாளர் பெ.மணியரசன் - இலட்சுமி ஆகியோரின் மகன் செந்தமிழனுக்கும்; திருநெல் வேலி கல்யாண சுந்தரம் — உலகம்மாள் ஆகியோரின் மகள் காந்திமதிக்கும் 24/2/2002 ஞாயிறு மாலை 4 மணிக்கு, தஞ்சாவூர் காவேரி நகர் சுந்தர் மகால் திருமண மன்றத்தில் பழ. நெடுமாறன் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்த விழா நடைபெற்றது. அ. மன்னர் மன்னன் வரவேற்புரை யாற்றினார். தஞ்சை அ. இராமமூர்த்தி, எஸ்.எஸ். பழநிமாணிக்கம் எம்.பி., சா. சந்திரேசன், இ.நா.மி. உபயதுல்லா எம்.எல்.ஏ, தியாகு, கவிஞர். தணிகைச் செல்வன், நா. அருணாசலம், அ.கோ. கஸ்தூரிரங்கன் ரேவதி, இராசேந்திர சோழன் உள்ளிட்டோர் வாழ்த்தினர். குழ. பால்ராசு நன்றியுரையாற்றினார்.

இத்திருமண நிகழ்ச்சிக்குத் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் தமிழ்த்தேச விடுதலையில் நாட்டம் கொண்ட ஏராளமான இயக்கத் தோழர் களும் தமிழ்ப் பெருமக்களும் பங்கேற்றனர்.

## அ. எழிலன் - ச. பரிமளா

வேலூர் து. அரங்கநாதன் - சாந்தி ஆகியோரின் மகன் அ. எழிலனுக்கும் பெங்களூர் ஆ. சம்பந்தம் - வரலட்சுமி ஆகியோர் மகள் ச. பரிமளாவிற்கும் 18.02.2002 அன்று வேலூர் சத்துவாச்சாரி தனலட்சுமி திருமணக் கூடத்தில் முனைவர் பொற்கோ அவர்கள் தலைமையில் வாழ்க்கைத் துணை ஒப்பந்த விழா சிறப்பாக நடைபெற்றது. இரா. சுந்தர் வரவேற்புரைக்குப் பின் முனைவர் து. மூர்த்தி அறிமுக உரை நிகழ்த்தினார். மணமக்களை வாழ்த்தி வே.ஆனைமுத்து, முனைவர் இராம. சுந்தரம், பேராசிரியர் இரா. சோதிவாணன், க. முகிலன், பழனி, தமிழேந்தி ஆகியோர் உரையாற்றினர். இரா. பால்ராஜ் நன்றி கூறினார். மணவிழாவில் பங்கேற்றோர்க்குக் காஞ்சிபுரம் மாவட்ட மா.பெ.பொ.க. தோழர்களால் வே.ஆனைமுத்து எழுதிய 'இரண்டாம் புஷ்யமித்ரன் ஆட்சியில் இராமர்யணம் திரும்புகிறது' நூல் பரிசாகத் தரப்பட்டது.

## க. முருகன் — கிருஷ்ணவேணி (எ) சரசுவதி

திண்டுக்கல் ஆ. முருகேசன் - முத்துலட்சுமி ஆகியோர் மகள் கிருஷ்ணவேணி (எ) சரசுவதிக்கும் திண்டுக்கல்மாவட்டம் வல்லம் பட்டி - செங்குறிச்சி மு. கருப்பய்யா - இரசம்மாள் ஆகியோர் மகன் க. முருகனுக்கும் 28.01.02 அன்று காலை திண்டுக்கல் காமராசர் நினைவு மண்டபத்தில் வே. ஆனைமுத்து தலைமையில் திருமணம் நடைபெற்றது. சீர்காழி மா.முத்துச்சாமி, முனைவர் இளவரசு, முனைவர் வெ.மு. ஷாஜகான் கனி, குயிலன் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர். மருதமுத்து நன்றி நவிலலுடன் விழா இனிதே நிறைவுற்றது.

## நலங்கிள்ளி (எ) கணேசராம்-ம.இராஜசெல்வி

சென்னையைச் சேர்ந்த மீனாட்சி - சீ. கோபாலன் ஆகியோர் மகன் நலங்கிள்ளி (எ) கணேசராமுக்கும், வேலூர் பத்மா - மு.மன்னார் ஆகியோர் மகள் ம. இராஜசெல்விக்கும் 3.02.02 அன்று மாலை 5 மணிக்கு வடபழனி வள்ளுவர் வாசுகி திருமணக் கூடத்தில் வாழ்க்கைத் துணைநல ஒப்பந்த விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. தியாகு தலைமையில் தோழர்கள் வே.ஆனைமுத்து, இராசேந்திர சோழன் உள்ளிட்டோர் மணமக்களுக்கு வாழ்த்துரை வழங்கினர். தமிழ் - தமிழர் அமைப்புகளைச் சேர்ந்த ஏராளமான தோழர்கள் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இது சாதி மறுப்பு, தாலி இல்லாத் திருமணம் ஆகும். மணமக்கள் சிந்தனையாளன் வளர்ச்சி நிதியாக ரூ.500 அளித்தனர்.

## க. நெடுஞ்செழியன் — செந்தமிழ்ச்செல்வி இணையரின் 'செந்தமிழ் இல்லம்' திறப்பு விழா

செம்பனார் கோயில் கலைமகள் கல்வி நிறுவனத் தாளாளர் க. நெடுஞ்செழியன் - செந்தமிழ்ச்செல்வி ஆகியோரின் 'செந்தமிழ் இல்லத் திறப்பு விழா, 27.01.02 அன்று காலை செம்பனார் கோயில் முதன்மைச் சாலை கலைமகள் கல்வி வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது. சீர்காழி மா.முத்துச்சாமி, முத்து அன்பழகன், முத்து இரணியன் உள்ளிட்ட உறவினர்கள், நண்பர்கள், பள்ளி ஆசிரியர்கள், மாணவ மாணவியர்கள் திரளாகக் கலந்து கொண்டு நிகழ்ச்சிக்குச் சிறப்புச் சேர்த்தனர்.

## வாழ்க்கைத் துணைவர் தேவை

வேதியியல் முதுகலைப் பட்டம் முடித்துச் சென்னையில் தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்து வரும் 29 அகவை நிரம்பிய - மணவிலக்குப் பெற்ற பெண்ணுக்கு, வாழ்க்கைத் துணைவர் தேவை. சமூகச் சிந்தனையுடைய - படித்த - பணியிலுள்ள 31-35 வயது வரையுள்ள வர்கள் விண்ணப்பிக்கலாம். குடும்பத்தினரின் முழு விருப்பத்துடன் சீர்திருத்தத் திருமணம் செய்து கொள்ள விரும்புவோர் தொடர்பு கொள்ள முகவரி:

திருமதி. ஆ.பூமா சாந்தகுமாரி,
C10/14 ரிசர்வ் வங்கி அதிகாரிகள் குடியிருப்பு,
SAF Games Village, கோயம்பேடு, சென்னை - 107.

படிப்பகம்

www.padippakam.com

# சிந்தனையாளன் வளர்ச்சி மார்ச்சு - 2002

| பெயர் | ஊர் | ரூ.பை |
|---|---|---|
| டாக்டர் பெ. இளங்கோவன் | அரியலூர் | 200.00 |
| புகழ் | சென்னை | 350.00 |
| ச.நாத்திக நந்தனார் | வண்டலூர் | 100.00 |
| ஓர் அன்பர் | சென்னை | 50.00 |
| வ.அருவி, வ.அரிமா | சென்னை | 50.00 |
| சீ.இளமதி, சீ.அகிலா | சென்னை | 100.00 |
| முத்து அன்பழகன் | சீர்காழி | 50.00 |
| அழகு அன்பழகன் | சீர்காழி | 50.00 |
| அ. அறிவுக் கடல்- இராஜ்குமார் | சிதம்பரம் | 50.00 |
| கி.கலை | சோளிங்கபுரம் | 50.00 |
| க.குப்புசாமி | சோளிங்கபுரம் | 50.00 |
| வள்ளி விசயன் | திருக்கோவிலூர் | 50.00 |
| பகுத்தறிவன் | அரக்கோணம் | 25.00 |
| ந.அப்துல்ரகுமான் | சென்னை | 300.00 |
| சி.பி.ச. அறிவொளி | இரும்புலிக்குறிச்சி | 50.00 |
| நா.இளங்கோ | அரக்கோணம் | 100.00 |
| ந. கருணாகரன் | திருச்சி | 50.00 |
| ப.ம.அதியமான் | திட்டக்குடி | 50.00 |
| ப.ம. மதிஒளி | திட்டக்குடி | 50.00 |
| இரா. இரத்தினகிரி | தஞ்சை | 200.00 |
| பொ.செல்வன் மற்றும் மனைவி, மகன் | மயிலாப்பூர் | 300.00 |
| வீ. இராசாப்பிள்ளை | சிதம்பரம் | 100.00 |
| சிதம்பரன். கி | ஈரோடு | 100.00 |
| அ.ஆறுமுகம் | திருமழபாடி | 100.00 |
| லோ. இர. குமார் | சென்னை | 200.00 |
| சீனு. அரிமாப்பாண்டியன் | பாண்டிச்சேரி | 30.00 |
| அ. எழிலன் - பரிமளா திருமண மகிழ்வாக து. அரங்கநாதன் | வேலூர் | 1000.00 |
| பொற்கோ - பூங்கோதை பெயரன் அன்புவாணன் தோற்ற மகிழ்வாக | சென்னை | 505.00 |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி

| | | |
|---|---|---|
| ந. அப்துல் ரகுமான் | சென்னை | 300.00 |
| க. முகிலன் | சோளிங்கபுரம் | 50.00 |
| சுகுணா - வடிவேலு | சென்னை | 50.00 |

## சிந்தனையாளன்' விற்பனைப் பொறுப்பாளர்களுக்கு...

1. 'சிந்தனையாளன்' திங்கள்தோறும் தவறாமல் 1-ஆம் நாள் விடுக்கப்படுகிறது.

2. ஏற்கெனவே பெரிய கடன் சுமையில் தத்தளிக்கிறது, 'சிந்தனையாளன்'. 'கடனுக்கு என்றால், இரண்டு யானையாகக் கட்டி விட்டுப் போ' என்கிற தன்மையில், ஏடு வெளியிடப்படுகிறது. இது தவறு. இதிலிருந்து ஏடு மீள வேண்டும்.

3. விற்பனைப் பொறுப்பாளர்கள், வருவாய் நோக்கம் இல்லாமல், ஒரு தொண்டாகக் கருதியே ஏட்டை விற்பனை செய்கிறார்கள். இது உண்மை.

4. ஆயினும், விற்பனையாளர்களிடமிருந்து வர வேண்டிய நிலுவைத் தொகை, 2002 பிப்பிரவரி முடிய, ரூ 37 ஆயிரம் ஆகும். இது மிகப் பெரிய தொகை; ஏட்டுக்கு ஒரு பெரிய சுமை.

5. அன்பு கூர்ந்து, விற்பனையான படிகளுக்கு 25% கழிவு எடுத்துக் கொண்டு, நிலுவை முழுவதையும், தவறாமல் 15-3-2002க்குள் கிடைக்கும்படி விடுத்து உதவுங்கள்.

அப்படி முழுத் தொகையையும் 15-3-2002க்குள் செலுத்தாத நண்பர்களுக்கு, 1-4-2002 இதழ் முதல் ஏடு அனுப்பப்பட மாட்டாது என்பதை மிக மிக வருத்தத்துடன் அறிவிக்கிறோம்.

ஆவன செய்யுங்கள்! நன்றி!

1.3.2002 — ஆசிரியர் குழுவினர்

## அன்புவாணன் தோற்றம்

சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் பொற்கோ — பூங்கோதை இவர்களின் மகன் அம்புலிநம்பி — மகாலட்சுமி இணையர்க்கு, 4-2-2002 திங்கட்கிழமை ஆண் மகவு பிறந்தது. குழந்தைக்கு அன்புவாணன் எனப் பெயரிடப்பட்டுள்ளது. தாயும் சேயும் நலமாக உள்ளனர். பெயரன் பிறந்த மகிழ்ச்சியை முன்னிட்டு பொற்கோ - பூங்கோதை ஆகியோர் 'சிந்தனையாளன்' வளர்ச்சிக்கு ரூபாய் ரூ.505 வழங்கினார்.

## "சிந்தனையாளன்" ஏப்பிரல் இதழ்: சிறப்பிதழாகவெளிவரும் மாமேதை டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

ஆகியோரின் 111 ஆம் ஆண்டு பிறந்த நாளை முன்னிட்டு, கூடுதலான பக்கங்களுடன், 2002 ஏப்பிரல் 'சிந்தனையாளன்' இதழ் வெளிவரும். இளைஞர்கள் பலரும் படித்திட வழி காணுங்கள்.

புதிய புதிய உறுப்பினர்களைச் சேருங்கள்! மாணவர்களிடமும் இளைஞர்களிடமும் 'சிந்தனையாளன்' ஏட்டை அறிமுகப் படுத்துங்கள். - ஆசிரியர் குழுவினர்

## 'ஆதிரை' பெயர் சூட்டல்

பெரியார் பற்றாளர் அரக்கோணம் பா. இராசேந்திரன் - ஜான்சி ஆகியோர் தமக்குப் பிறந்த பெண் மகவுக்கு 'ஆதிரை' எனப் பெயர் சூட்டியுள்ளனர். இதன் மகிழ்வாகச் சிந்தனையாளன் வளர்ச்சிக்கு ரூ100/- அளித்தனர்.

காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரியில் 14.3.2002 அன்று காலை 11 மணிக்கு தமிழ் மன்றத்தின் சார்பில் அய்யா வே.ஆனைமுத்து 'தமிழ் சமுதாயமும் தமிழ் பண்பாட்டுப் புரட்சியும்' என்ற தலைப்பில் கல்லூரி முதல்வர் டாக்டர் பி.ஆர். அரங்கசாமி தலைமையில் சிறப்புரையாற்றுகிறார்.

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக வெளியிடுபவர், ஆசிரியர்: வே.ஆனைமுத்து, 19, முருகப்பா தெரு (மாடி), சேப்பாக்கம், சென்னை - 5, அச்சுக்கோப்பு: 'நம் பிராசஸ்', சென்னை-18. அச்சிட்டோர்: பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம், சென்னை-5. தொலைபேசி: 852 28 62

www.padippakam.com

Licenced to post without prepayment WPP No. 344
Registrar of Newspapers of India under licence No. 24452 / 74. 'Sinthahaiyalan' TN/ Chief PMG/618/2001

# முட்டி வீங்கி











நம்ப வைத்துக்
கழுத்தை அறுத்த
நரசிம்ம காருவின்
வஞ்சகம் கூட
இந்த
முட்டி வீங்கிச்
சட்டித் தலைமுன்
தோற்றுப் போனது
என்றே சொல்லலாம்

வாயில் புன்னகை
வயிற்றில் நஞ்சு
பார்ப்பனச் சூழ்ச்சியைப்
படமாக வரைந்தால்
விளக்கெண்ணெய் வாஜ்பேயி
வடிவம் வெளிப்படும்

அத்துவானி அசோக்சிங்கால்
மனோகர் ஜோஷி உமாபாரதி
எல்லோர் வெறியையும் எடுத்துப்பிசைந்த
மொத்த உருவமே இந்தப் பச்சோந்தி
இவர்
பல்லிடுக்கில் வழியும் பச்சைச் சிரிப்புக்குப்
பதவுரை பொழிப்புரை எழுதிப் பாராட்ட
வக்கற்ற வைகோ கலைஞர் இராமதாஸ்
எக்கச் சக்க அடிமைகள் உண்டு
ஆனால் அந்தப் பச்சைச் சிரிப்பு
அணுக்குண்டை விடவும் ஆபத்தானது
ஆயிரம் பாபர் மசூதிகள் தம்மை
அடியோடு தகர்க்கும் ஆற்றல் கொண்டது

இராமன் கோயில்
எழும்பியே தீருமாம்;
நாள் குறித்து விட்டன
கொலை வெறிக் குழுக்கள்!
கட்டுமானப் பொருள்களோடு
கலவரம் செய்யப் படைகள் கிளம்பியும்
குறட்டை விட்டுத் தூங்குகிறது
கொம்பு முளைத்த நீதிமன்றம்

சங்கராச்சாரிகள் கால் கழுவுவதையே
பிறவிப்பேறாய்ப் பீற்றிக் கொள்ளும்
நீதிமான்கள் நித்திரை கலையுமா?
நிகழவுள்ள கொலைகள் தப்புமா?
முடியாது; ஒருக்காலும் முடியாது
கோவணம் அவிழக் குதிக்கின்ற இந்தக்
குரங்குப் படைகளின் கொழுப்பை அடக்க
மக்கள் படையால் மட்டுமே முடியும்
மக்கள் படையைத் திரட்டுவோம்
மதவெறிக் கும்பலை அடியோடு விரட்டுவோம்!

– 'தமிழேந்தி'

19, முருகப்பா தெரு (மாடி), சேப்பாக்கம், சென்னை-600 005. தொ.பே.எண். 852 28 62

படிப்பகம்